# இரண்டாம் மொழி - தமிழ்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

### தரம் - 7



தமிழ் மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2008

ADB SEMP

# இரண்டாம் மொழி - தமிழ்

## தரம் - 07

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2008

© தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு: - 2007

ISBN 978 - 955 - 654 - 103 - 8

**இடைநிலைக் கல்வியை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டது.**

வெளியீடு:

தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

அச்சுப்பதிப்பு:-

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க.

# முகவுரை

புத்தாயிரமாண்டில் முதலாவது கலைத்திட்டச் சீர்திருத்தம் இன்றைய பாடசாலைக் கல்வி முறையிலுள்ள சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் நடைமுறைப் படுத்தப்படுகிறது. சிந்திக்கும் ஆற்றல்களும் சமூக ஆற்றல்களும் தனியாள் ஆற்றல்களும் நலிவடைவதால் இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டும், அதற்கான காரணங்களை ஆராய்ந்தும், அவ்வாறான நிலைமைகளை வெற்றி கொள்ளத் தேவையான பின்னணிகளை உருவாக்கியும் இக்கலைத் திட்டச் சீர்திருத்தம் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிய வலய நாடுகளுடன் ஒப்பிடும்போது இதற்கு முன்னர் எமது நாடு கல்வியில் முன்னணி வகித்தது. ஆனால் இன்று இவ் வலயத்தின் அநேக நாடுகள் இலங்கையை விட கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளன. தெரிந்த விடயங்களை மெருகூட்டுவதிலும், ஏற்கனவே முடிவு செய்தவற்றைக் கற்பதிலும் இருக்கும் விடயங்களை மீண்டும் அதே அடிப்படையில் கட்டியெழுப்புவதிலும் கல்வியியலாளர்கள் அண்மைக்காலமாக ஈடுபட்டமை இதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் சிலவாகும்.

இவ்விடயங்களை சீர்தூக்கிப் பார்த்து ஒரு தெளிவான கோட்பாட்டின் கீழ் புதிய கலைத் திட்டத்தை உருவாக்குவதில் தேசிய கல்வி நிறுவகம் முயற்சித்துள்ளது. தெரிந்தவற்றை மாற்றியமைத்தும், புதியவற்றைக் கண்டறிந்தும், எதிர்காலத்துக்குத் தேவையானவற்றை உருவாக்கியும் நாளைய வெற்றிக்காக தயார் நிலையில் இருக்கக்கூடிய மாணவர் குழுவை உருவாக்குவது இதன் அடிப்படை நோக்கமாகும். இன்றைய நிலையை வெற்றி கொள்ள ஆசிரியர் வகிபாகத்தில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் புதியதாகக் கூறவேண்டியதில்லை. இதுகாலவரை எமது வகுப்பறைகளில் நிலவி வந்த அறிவைக் கடத்தல் வகிபாகம், பரிமாற்ற வகிபாகம் என்பவற்றுக்குப் பதிலாக மாணவர் மைய, தேர்ச்சிமைய, செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிலைமாற்று ஆசிரியர் வகிபாகத்தின் நிலைமைகளை நன்கு விளங்கி புதிய ஆசிரியர் வகிபாகத்தில் பயிற்சி பெறவேண்டிய நிலை இன்றைய ஆசிரியர் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

புதிய நிலைமைகளுக்கு இசைவாக்கம் அடைவதற்கான பல அறிவுறுத்தல்களும் அடங்கிய இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி விளைதிறன்மிக்க ஆசிரியராக புத்தாயிரம் ஆண்டில் வருவதற்கு உதவும் என நாம் நம்புகிறோம். இந்த அறிவுறுத்தல்களைப் பரிசீலிப்பதன் மூலம் அன்றாடக் கற்பித்தல் செயற்பாடுகளைப் போன்றே மதிப்பீட்டுச் செயற்பாடுகளையும் இலகுவாக்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்களுக்கெனத் தரப்பட்டுள்ள தேடலுக்கான அறிவுறுத்தல்கள், தரஉள்ளீடுகள், ஆசிரியர் செயற்பாடுகளை இலகுவாக்கும் என்பது திண்ணம். அத்துடன் நேர ஒதுக்கீட்டின்போதும் வளப்பங்கீட்டின்போதும், உள்ளக மேற்பார்வையின்போதும் பயன்படக்கூடிய பெறுமதிமிக்க பல தகவல்களை அதிபர்களிடம் கொண்டு செல்வதற்கு இவ்வழிகாட்டி உதவும்.

பாடசாலை மட்டத்திலான மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக கல்வி நடவடிக்கை களில் ஈடுபடும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கு மட்டுமின்றி வெளியக மேற்பார்வையாளர் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடும் பல்வேறு தரத்திலான அதிகாரிகளுக்கும் பயன்படக்கூடிய வகையில் இவ்வழிகாட்டியைத் தயாரிப்பதில் நேரடி யாகப் பங்களிப்புச் செய்த விஞ்ஞான தொழினுட்ப பீடத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி (திருமதி) ஐ. எல். கினிகே அவர்கள் உட்பட நிறுவன உத்தியோகத்தர்களுக்கும், பல்வேறு வழிகளில் சேவை செய்த வளவாளர்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

***பேராசிரியர் ஜே. டபிள்யூ. விக்கிரமசிங்ஹ***
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில் பாடசாலைக் கலைத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்தற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைகளுக்கு வருகின்ற கல்விச் சீரித்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் அமைந்திருந்தமையால், அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்த்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வவ் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ளவேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப்பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயல்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாள்கின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விே'ட கவனம் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில் புதிய கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவன் நூலகத்தைப் பயன்படுத்துதல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளல், இயலுமெனில் இணையதளம் மூலம் தகவல் திரட்டல் முதலான கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காணமுடியும். இதற்கு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடநூலை உசாத்துணை நூலாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வதே ஆசிரியர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிப்பாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக்கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் கருதப்படுவர். அதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும்.. அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர் எதிர்கொள்ளும் க'டங்கள், இடையூறுகள் என்பவற்றை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின்போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவரை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக, புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன்கூடிய மாணவர் பரம்பரையொன்று உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை, புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

***விமல் சியம்பலாகொட,***
*மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,*
*தேசிய கல்வி நிறுவகம்.*

| | | |
|---|---|---|
| **ஆலோசனை** | : | பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்கிரமசிங்ஹ<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம்<br>திரு.விமல் சியம்பளாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம் |
| **நிபுணத்துவ ஆலோசனை** | **:** | பேராசிரியர் எஸ். தில்லைநாதன்<br>தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்<br>திரு.து.இராஜேந்திரம் - சிரே'ட விரிவுரையாளர்<br>திறந்த பல்கலைக்கழகம் |
| **மேற்பார்வை** | : | செல்வி பு.நாகலிங்கம்<br>பணிப்பாளர் - தமிழ்த்துறை |
| ஒருங்கிணைப்பு | : | திருமதி.ஞா.சித்ரரஞ்சன் |
| எழுத்தாளர் குழு<br>உள்வாரி | : | செல்வி.பு.நாகலிங்கம்<br>திருமதி.வா.காண்டீபன்<br>திருமதி. ஞா.சித்ரரஞ்சன் |
| வெளிவாரி | : | ஜனாப் எம்.எஸ்.எம்.அவ்பர்<br>அதிபர், தங்காலை மு.வி.தங்காலை<br>செல்வி.எஸ்.கணபதிப்பிள்ளை<br>முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், கண்டி<br>செல்வி.விக்னா செல்வநாயகம்<br>ஆசிரியை, முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 13<br>திருமதி.எஸ். ரூபராணி<br>ஆசிரியை, புனித அன்னம்மாள் அ.த.ம.வி. கொழும்பு - 12<br>திருமதி.எஸ்.பாலசுந்தரம்<br>முன்னாள் உதவி ஆணையாளர்- பரீட்சைத் திணைக்களம்<br>ஜனாப் எவ்.ஆர்.பரீத்<br>பிரதி அதிபர், அநு / அல் மதீனா வித்தியாலயம்,<br>குடனெழுபேவா, அநுரதபுரம். |
| கணினி வடிவமைப்பு | : | செல்வி. சுபாினி ஸ்ரீதரன் |
| அட்டைப்படம் | : | திரு எஸ். சச்சிதானந்தம் |

# உள்ளடக்கம்

பக்கம்

**பகுதி I**

| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | xi |
| 2.0 | பாட நோக்கம் | xii |
| 3.0 | பாடத்திட்டம் | xiii |
| 4.0 | பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும் | xx |

**பகுதி II - கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்** xxi - 100

**பகுதி III - கணிப்பீடும் மதிப்பீடும்**

| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 102 - 103 |
| 2. | கணிப்பீட்டுக் கருவிகள் | 104 - 110 |

# பகுதி I

# இரண்டாம் தேசிய மொழி - தமிழ்

## 1.0 அறிமுகம்

பல்லின, பன்மொழிப் பண்பாட்டுச் சூழலில் வாழும் மக்கள் தமக்கிடையே புரிந்துணர்வு, ஐக்கியம் என்பவற்றை வளர்த்துக் கொள்ளவும் பரந்த அறிவு, மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்திக்கொள்ளவும் மாற்றுச் சமூகங்களின் மொழிகளை அறிந்திருத்தல் பயன்மிக்கதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களமொழி பேசும் சமூகத்தவர் தமிழ் மொழியையும் தமிழ்மொழி பேசும் சமூகத்தவர் சிங்கள மொழியையும் கற்பது இரு சமூகங்களிடையிலும் புரிந்துணர்வையும் உறவையும் ஏற்படுத்த வழி செய்யும் பயன்மிக்க நடவடிக்கையாகும்.

அவ்வகையில் முதன்மொழியாகிய தாய்மொழி (சிங்களம்/தமிழ்), சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் என்பவற்றுடன் இரண்டாம் மொழியையும் (தமிழ்/சிங்களம்) கற்றல் - கற்பித்தல் அவசியம் என்பது தேசிய கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டம் 2008 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. இது, கற்பித்தல் உத்திகள், பாடசாலைக் கொள்கை நிகழ்ச்சித்திட்டம், மதிப்பீடு, பாடவேளைகள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இப்பாடத்திட்டத்தில் மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றில் ஏழாம் தர மாணவர்கள் அடையவேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தீர்மானிக்கப்பட்டு, அவற்றுக்கான தேர்ச்சி அலகுகள் படிமுறைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஆசிரியர், தேர்ச்சி அலகுகளின் படிமுறை வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு பொருத்தமான கற்றல் - கற்பித்தல் உத்திகளைக் கையாள வேண்டும்.

## 2.0 பாட நோக்கம்

- தொடர்பாடல் தேவைகளுக்காகக் கணிசமான அளவு மொழித்தகைமைகளை விருத்தி செய்தல்.
- எளிமையான தமிழ்நூல்களை வாசிப்பதன் மூலம் மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
- கவிதைகள், பாடல்கள், கதைகள், சிறுநாடகங்கள் முதலியவற்றை இரசித்தல்.
- கற்பவர் தொடர்பூடகங்கள் மூலம் இக்காலத் தகவல்களையும் மனமகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ள உதவுதல்.
- சமூக நடைமுறைகளையும் சம்பிரதாயங்களையும் விளங்கிக்கொள்வதன் மூலம் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டினையும் மேம்படுத்தல்.

## 3.0 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை கள் |
|---|---|---|---|
| 1.0<br>சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார். | 1.1<br>சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார். | நாளாந்த தேவைகளுக்குப் பிரயோகிக்கும் சொற்கள்.<br>- உறவுப் பெயர்கள்<br>- உணவு வகை - சுவை (இனிப்பு, புளிப்பு)<br>- பழவகை (10)<br>- மரக்கறிவகை (20) (இலைவகை - 5, காய்கறி -10, கிழங்கு வகை- 5)<br>- மிருகங்கள் (10) (வீட்டு மிருகங்கள் -5, காட்டு மிருகங்கள் -5)<br>- பறவைகள் (10) (வீட்டில் வளர்க்கும் பறவைகள் - 5, காட்டுப் பறவைகள் -5)<br>- வாகனங்கள் (15) (தரை மார்க்கவாகனம் - 10, நீர் மார்க்க வாகனம் -5)<br>- வீட்டில் காணப்படும் பொருட்கள் (சமையலறை - 10, வரவேற்பறைப் பொருள்கள் - 5)<br>- பாடசாலை அதிபர் அலுவலகத்தில் காணப்படும் பொருள்கள் (10)<br>- இலக்கங்கள் (ஒற்றை எண்கள் -10, இரட்டை எண்கள் -10)<br>- நேரங்களை(மணி) அறிமுகஞ் செய்தல்.<br>- ஒத்து ஒலிக்கும் சொற்கள்<br>உ+ம் 1: மலை, தலை, வலை<br>உ+ம் 2: நாடு, காடு, வீடு<br>- குறில் நெடிலால் வேறுபடும் சொற்கள்<br>கலை, மலை, சிலை - குறில்<br>காலை, மாலை, சீலை- நெடில்<br>- இரு மொழிக்கும் பொதுவான சொற்கள் (10)<br>- ஒருமை பன்மைச் சொற்கள்<br>பழம், படம், மரம், தினம், தரம், தோட்டம், சிங்கம்<br>("ம" இல் முடிவடையும் சொற்கள் "ங்கள்" என பன்மையாதல்)<br>- ஒத்த கருத்துள்ள சொற்கள் (20)<br>சூரியன், சந்திரன், வீடு, தினம், அரசன், சாப்பாடு, மரம், நதி, கனி, மிருகம், பறவை போன்ற சொற்கள்) | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | | - ஆண்பால், பெண்பாற் சொற்கள்<br>- தன்மை ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்கள் (10) நான் குளித்தேன், நாங்கள் குளித்தோம். | |
| | 1.2<br>பெயர்ச்சொற்களை அடை மொழிகள் சேர்த்துக் கூறுவார். | | 02 |
| | 1.3<br>வாக்கியங்களைச் சரியாக உச்சரித்துக் கூறுவார். | - மாணவன் தன்னைப் பற்றி "நான்" என்ற தலைப்பில் 5 வாக்கியங்கள் கூறுதல்.<br>"எனது அம்மா"<br>(5 வாக்கியங்கள்)<br>- படங்களின் உதவியுடன் வாக்கியங்கள் கூறுதல் (5 படங்கள்)<br>- சிறு வினாக்களுக்கு விடை கூறுதல் (8 வினாக்கள்)<br>(மாணவர் பற்றியதும், மாணவர் தொடர்புடையதுமான வினாக்கள்.<br>உ-ம் உங்கள் நண்பனின் பெயர் என்ன?) | |
| 2.0<br>கட்டளைகள், அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு கருத்துக்களை முன் வைப்பார். | 2.1<br>கட்டளைகளுக்கேற்ப துலங்குவார். | (கை கட்டுங்கள், கை தட்டுங்கள், இங்கே வாருங்கள், புத்தகத்தை எடுங்கள்) (05) | 01 |
| | 2.2<br>அறிவுறுத்தல்களுக்கேற்பத் துலங்குவார். | (சாப்பிட முன் கை கழுவுங்கள், குப்பைகளை வகுப்பறைக்குள் போடாதீர்கள். ஆசிரியர் வரும்வரை அமைதியாக இருங்கள்) (05) | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 3.0<br>பல்வேறு தேவைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப உரையாடுவார். | 3.1<br>நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுவார். பண்புடன் உரையாடுவார். | (தயவுசெய்து, நன்றி, மன்னிக்கவும், வருந்துகிறேன் வாழ்த்துக்கள்) | 03 |
| | 3.2<br>தகவல்களைப் பெறுவதற்காக வினவுவார். | உங்கள் பாடசாலை அதிபர் பெயர் என்ன?<br>இப்போது நேரம் என்ன?<br>இலங்கையின் தலைநகரம் எது? | 02 |
| | 3.3<br>சுயதேவைகளை நிறைவு செய்வதற்காக உரையாடுவார். | | 02 |
| | 3.4<br>சந்தர்ப்பங்களுக்கேற்ப உரையாடுவார். | | 01 |
| 4.0<br>பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவார். | 4.1<br>பாடல்களை உச்சரிப்போடும் இசையோடும், நயத்தோடும் பாடுவார். | உதாரணம்:<br>1. தாகமுள்ள காகம்<br>2. வண்ணத்துப்பூச்சி<br>3. புள்ளிப் புள்ளி மானே<br>4. கணனி நண்பன்<br>5. அப்பா என்னை அழைத்துச் சென்றார். | 03 |
| 5.0<br>குறிப்பிட்ட விடயம் பற்றி தெளிவாகப் பேசுவார். | 5.1<br>கொடுக்கப்படும் தலைப்பின் கீழ் மனனஞ் செய்து பேசுவார். | 1. எனது ஆசிரியர்<br>2. எனது பாடசாலை<br>3. எனது செல்லப்பிராணி<br>4. எனது நண்பன் | 02 |
| | 5.2<br>விரும்பிய தலைப்பில் பேசுவார். | | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை கள் |
|---|---|---|---|
| 6.0<br>சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை மொழி பெயர்த்துக் கூறுவார். | 6.1<br>சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களைக் கூறுவார். | (ஏற்கனவே கற்ற பாடப்பரப்பில் இருந்து முக்கியமானவை எனக் கருதும் 15-20 சொற்களைத் தெரிவு செய்தல்)<br>உ-ம்: உணவு, நேரம், பூ, பழம், மரக்கறி | 02 |
| 7.0<br>சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை கருத்து விளங்கி முறையாக வாசிப்பார். | 7.1<br>சொற்களை விளங்கி வாசிப்பார். | நாளாந்த தேவைகளுக்குப் பிரயோகிக்கும் சொற்கள்<br>- உறவுப் பெயர்கள்<br>- உணவு வகை - சுவை (இனிப்பு, புளிப்பு)<br>- பழ வகை<br>- மரக்கறி வகை (இலைவகை, காய்கறி, கிழங்கு)<br>- மிருகங்கள் (வீட்டு மிருகங்கள், காட்டு மிருகங்கள்)<br>- பறவைகள் (வீட்டில் வளர்க்கும் பறவைகள், காட்டுப் பறவைகள்)<br>- வாகனங்கள் (தரைமார்க்க வாகனம் , நீர் மார்க்க வாகனம்)<br>- வீட்டில் காணப்படும் பொருட்கள் (சமையலறை, வரவேற்பறைப் பொருட்கள்)<br>- பாடசாலை அதிபர் அலுவலகத்தில் காணப்படும் பொருட்கள்<br>- இலக்கங்கள் (ஒற்றை எண்கள், இரட்டை எண்கள்)<br>- நேரங்களை (மணி) அறிமுகஞ் செய்தல்<br>- ஒத்து ஒலிக்கும் சொற்கள்<br>- குறில், நெடிலால் வேறுபடும் சொற்கள்<br>- இருமொழிக்கும் பொதுவான சொற்கள்<br>- ஒருமை, பன்மைச் சொற்கள்<br>- ஒத்த கருத்துள்ள சொற்கள்<br>- தன்மை ஒருமை தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்கள் | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| | 7.2<br>சொற்றொடர்களை பொருத்த முற வாசிப்பார். | - அடைமொழியுடன் கூடிய பெயர்ச் சொற்கள்<br>(எண்கள், நிறங்கள், அளவுகள், சுவைகள் இவற்றை அடையாகக் கையாளல்) | 01 |
| | 7.3<br>வாக்கியங்களை பொருத்த முற வாசிப்பார். | - எழுவாய் பயனிலை இயைபுள்ள வாக்கியங்கள் | 02 |
| 8.0<br>கட்டளைகள், அறிவுறுத்தல்களை வாசிப்பார். | உரிய முறையில் வாசிப்பார் | - எழுந்து நில்லுங்கள்<br>- மேலே பாருங்கள்<br>- பந்தை வீசுங்கள் | 02 |
| 9.0<br>பாடல்களைக் கருத்துணர்ந்து வாசிப்பார். | பாடல்களைத் தெளிவாக உச்சரித்து பாசிப்பார் | - தாகமுள்ள காகம்<br>- வண்ணத்துப் பூச்சி<br>- புள்ளிப் புள்ளி மானே | 03 |
| 10.0<br>பந்திகளை வாசிப்பார். | 10.1<br>சிறு பந்திகளை உரத்து வாசிப்பார். | - பாடநூல், பத்திரிகையில் இருந்து தெரிவு செய்த பந்தி | 02 |
| | 10.2<br>கிரகித்து விடையளிப்பதற்காக வாசிப்பார். | - பாடநூலில் தெரிவு செய்த பந்தி | 01 |
| 11.0<br>கருத்துக்களை முன்வைப்பதற்காக சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை எழுதுவார். | 11.1<br>சொற்களை உறுப்பமைய எழுதுவார். | - வாகனங்கள்<br>- இலக்கங்கள்<br>- ஒருமை பன்மைச் சொற்கள்<br>- சிறிய வாக்கியங்கள் | 02 |
| | 11.2<br>சொல்வதெழுதுதல். | - சொற்றொடர்கள்<br>- சிறிய வாக்கியங்கள் | 01 |
| | 11.3<br>நாளாந்தத் தேவைகளுக்குப் பிரயோகிக்கும் சொற்கள். | - உறவுப் பெயர்கள்<br>- உணவு வகை - சுவை (இனிப்பு, புளிப்பு)<br>- பழ வகை | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை கள் |
|---|---|---|---|
| | | - மரக்கறி வகை<br>(இலைவகை, காய்கறி, கிழங்கு வகை)<br>- மிருகங்கள் (10)<br>(வீட்டு மிருகங்கள், காட்டு மிருகங்கள்)<br>- பறவைகள்<br>(வீட்டில் வளர்க்கும் பறவைகள், காட்டுப் பறவைகள்)<br>- வாகனங்கள்<br>(தரை மார்க்க வாகனம், நீர்மார்க்க வாகனம்)<br>- வீட்டில் காணப்படும் பொருட்கள்<br>(சமையலறை, வரவேற்பறைப் பொருட்கள்)<br>- பாடசாலை அதிபர் அலுவலகத்தில் காணப்படும் பொருட்கள்<br>- இலக்கங்கள்<br>(ஒற்றை எண்கள், இரட்டை எண்கள்)<br>- நேரத்தை எழுத்திலும், இலக்கத் திலும் எழுதுதல்.<br>- ஒத்து ஒலிக்கும் சொற்களை உரியவாறு எழுதுதல்<br>(மலை, கலை, சிலை)<br>- குறில் நெடிலால் வேறுபடும் சொற் களை எழுதுதல் - பெயர்ச் சொற்கள்<br>- தன்மை, ஒருமை தன்மைப் பன்மை யுடன் கூடிய இறந்தகால வினைச் சொற்கள்<br>நான் ஓடினேன் ∴ நாங்கள் ஓடினோம்<br>நான் படித்தேன் ∴ நாங்கள் படித்தோம்<br>- ஒருமை பன்மைச் சொற்கள் எழுதுதல் “கள்” விகுதி - மேசை - மேசைகள்<br>“ங்கள்” விகுதி - பழம் - பழங்கள்<br>“க்கள்” விகுதி - பூ - பூக்கள்<br>“மார்” விகுதி - அக்கா - அக்காமார்<br>- ஒத்த கருத்துள்ள சொற்கள் எழுதுதல்<br>- ஆண்பாற், பெண்பாற் சொற்கள் எழுதுதல்<br>தன்மை ஒருமை, தன்மைப் பன்மை வினைச் சொற்கள் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை கள் |
|---|---|---|---|
| | 11.4<br>சொற்றொடர்களை உறுப் பமையவும், முறையாகவும் எழுதுவார். | - பெயர்ச் சொற்களை, அடைமொழி களைச் சேர்த்து முறையாகவும் உறுப்பமையவும் எழுதுதல்.<br>உ-ம் : புதிய வீடு, பெரிய மலை, உயர்ந்த கோபுரம் | 02 |
| | 11.5<br>வாக்கியங்களை முறை யாகவும், உறுப்பமையவும் எழுதுவார். | - மாணவன் தன்னைப் பற்றி "நான்" என்ற தலைப்பில் 5 வாக்கியங்கள் எழுதுதல்.<br>- "எனது அம்மா" என்ற தலைப்பில் 5 வாக்கியங்கள் எழுதுதல்.<br>- படங்களின் உதவியுடன் வாக்கி யங்கள் எழுதுதல்.<br>- சிறு வினாக்களுக்கு விடை எழுதுதல்<br>உ-ம் : மாணவர் பற்றிய வினாக்கள்<br>உமது பெயர் என்ன?<br>உமது நண்பனின் பெயர் என்ன?<br>மாணவர் தொடர்பான வினாக்கள்<br>உங்களுக்குப் பிடித்த பழம் என்ன?<br>உங்களுக்குப் பிடித்த பாடம் என்ன? | 03 |
| 12.0<br>கட்டளைகளையும், அறிவுறுத்தல்களை யும் எழுதுவார். | தெளிவாக எழுதுவார் | - பந்தை எறியுங்கள்<br>- புத்தகத்தை வாசியுங்கள்<br>- இங்கே புகைத்தல் தடை | 02 |
| 13.0<br>கிரகித்து வினாக் களுக்கு விடை எழுதுவார். | | - பந்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக் களுக்கு விடையளித்தல்.<br>- சொற்களைச் சேர்த்தும், பிரித்தும் எழுதுதல்<br>(இயல்பு, தோன்றல் புணர்ச்சிகள் மட்டும்) | 02 |
| 14.0<br>சிங்களச் சொற் களுக்குரிய தமிழ்ச் சொற் களை எழுதுவார். | தமிழில் மொழிபெயர்த்து எழுதுவார் | (ஏற்கெனவே கற்ற பாடப்பரப்புகளில் இருந்து முக்கியமானது எனக் கருதும் 20 சொற்கள்) | 02 |
| | மொத்தம் | | 65 |

## 4.0 பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும்

இரண்டாம் தேசிய மொழி கற்பித்தல் தொடர்பாக பாடசாலையில் கிடைக்கின்ற பௌதிக வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு திட்டமிட்டு செயற்படுவது அவசியம்.

- பாடசாலை அதிபர் அதிகளவு அக்கறையெடுத்து இரண்டாம் மொழி கற்பித்தலுக்கு வேண்டிய உதவிகளை வழங்க வேண்டும்.

- இரண்டாம் தேசிய மொழி கற்பதன் அவசியத்தை பெற்றோருக்கு வலியுறுத்த வேண்டும்.

- வகுப்பறைக் கலைத்திட்டத்தில் இரு பாடவேளைகளே இரண்டாம் மொழியைக் கற்பிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.
  வீட்டு வேலைகள், ஒப்படைகள், மாணவர் மன்றக் கூட்டம், காலைக்கூட்டம், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் இரண்டாம் மொழிக்கு இடம் அளித்தல் இன்றியமையாதது.

- மொழித்தினப் போட்டிகளில் இரண்டாம் தேசிய மொழி கற்கும் மாணவர்கள் பங்கேற்க ஊக்குவித்தல்.

# பகுதி - II

# கற்றல் - கற்பித்தல்

# செயற்பாடுகள்

**தேர்ச்சி : 1.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1**: சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.

**செயற்பாடு:** உறவுப் பெயர்களை முறையாக உச்சரித்துக் கூறுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- உறவுப் பெயர்கள் குறிப்பிடப்பட்ட குடும்பமொன்றின் படம். பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு 2
- ஆராரோ ஆரிவரோ எனும் பாடல் - பின்னிணைப்பு 3

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.1.1**
- குடும்பமொன்றின் படத்தைக் காட்சிப்படுத்தி அதில் இடம் பெறும் சொற்களை முறையாக உச்சரித்து வாசியுங்கள்.
- மாணவரும் சொற்களை உச்சரித்து வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் அறிந்த வேறு உறவுப் பெயர்களை வினவி, அவற்றைக் கரும்பலகையில் பட்டியற்படுத்துங்கள். அவற்றை முறையாக உச்சரித்துக் காட்டி, மாணவரும் உரிய முறையில் உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| - உறவுப் பெயர்களைச் சரியான முறையில் உச்சரித்தல்.<br>- தமிழுக்கும் சிங்களத்துக்கும் பொதுவாக அமைந்த சொற்களின் உச்சரிப்பு வேறுபாட்டை அறிதல். |

**படி 1.1.2**

- உறவுப் பெயர்களின் பட்டியலைக் கொண்ட அட்டையைக் (பின்னிணைப்பு -2) காட்சிப்படுத்தி அதிலுள்ள சொற்களை உரிய முறையில் உச்சரித்து வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களையும் உச்சரித்து வாசிக்கச் செய்யுங்கள்.
- மாணவரைக் குழுக்களாக்கி, உறவுப் பெயர்களின் பட்டியலைக் கொண்ட அட்டையின் பிரதிகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் சென்று, பட்டியலில் உள்ள சொற்களை உச்சரித்துக் காட்டி, குழுவினரையும் உச்சரிக்கச் செய்யுங்கள்.
- குழுவில் ஒருவர் சொற்களை உச்சரித்து வாசிக்க, ஏனைய உறுப்பினர்களையும் வாசிக்கச் செய்யுங்கள்.

**படி 1.1.3**

- குழு நிலையில் (உறவுப் பெயர்களின் பட்டியலை முறையாக) உச்சரித்து வாசிக்கும் செயற்பாடு நிறைவுற்ற பின்னர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒவ்வொருவர் முன்வந்து பட்டியலில் உள்ள உறவுப் பெயர்களை முறையாக உச்சரித்துக் கூற ஏனையோர் அவற்றைத் திருப்பிக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| - எழுத்துக்களின் ஒலிவேறுபாடுகளுக்கமைய உச்சரித்தல். |
| - உறவுப் பெயர்ச்சொற்களைத் தெளிவாக உச்சரித்துக் கூறுதல். |

**படி 1.1.4**

- உறவுப் பெயர்கள் இடம் பெற்றுள்ள தாலாட்டுப் பாடலை (பின்னிணைப்பு – 3) உரிய முறையில் உச்சரித்துப் பாடிக்காட்டுங்கள்.
- மாணவரும் அதனைச் சரியாக உச்சரித்துப் பாடுவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- உறவுப் பெயர்களை அறிந்து தெளிவான உச்சரிப்புடன் கூறுவார்.
- உறவுப்பெயர்களைக் கொண்ட தாலாட்டுப் பாடலை, முறைப்படி உச்சரித்துப் பாடுவார்.
- அன்றாட வாழ்வில் உறவுப் பெயர்களைப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு – 2**
**செயற்பாட்டுப்பத்திரம்**

ஆசிரியர் உச்சரிப்பதைக் கவனித்துப் பின்வரும் உறவுப் பெயர்களை முறையாக உச்சரித்துக் கூறுங்கள்.

| | |
|---|---|
| பெரியம்மா | மருமகள் |
| பெரியப்பா | மருமகன் |
| சித்தி | பாட்டன் |
| சிற்றப்பா | பாட்டி |
| மச்சாள் | அத்தை |
| மச்சான் | நண்பன் |

பின்வரும் தாலாட்டுப் பாடலை உரிய முறையில் உச்சரித்துப் பாடுங்கள்.

**செயற்பாட்டுப்பத்திரம்**
**பின்னிணைப்பு – 3**

ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ
ஆரடிச்சோ நீயழுகிறாய்?
அரிய கண்ணால் நீர் வழிய?
அடிச்சாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணி வைப்போம்!

மாமி அடிச்சாளோ
மல்லிகைப்பூச் செண்டாலே!
பாட்டி அடிச்சாளோ
பால்வார்க்குஞ் சங்காலே!

ஆச்சி அடிச்சாளோ
அமுதூட்டுங் கையாலே?
அண்ணா அடிச்சானோ
அரைஞான் கயிற்றாலே?

ஆண்பனையின் நுங்கே!
அணில் கோதா மாம்பழமே!
கூப்பிட்டு நான் கேட்பேன்
குஞ்சரமே கண் வளராய்!

நாட்டார் பாடல்கள்
(கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)

**தேர்ச்சி: 7.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களைக் கருத்து விளங்கி முறைப்படி வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1**: சொற்களை விளங்கி வாசிப்பார்.

**செயற்பாடு:** சொற்களை விளங்கி வாசிப்போம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : உறவுப்பெயர்கள் எழுதப்பட்ட பட்டியல் - பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 3

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்


**படி 7.1.1**

- உறவுப் பெயர்கள் எழுதப்பட்ட பட்டியலைக் (பின்னிணைப்பு - 1) காட்சிப்படுத்துங்கள்.
- அதிலுள்ள சொற்களை உரிய முறையில் உச்சரித்து வாசியுங்கள்.
- உங்களைப் பின்பற்றி மாணவர்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவரை எழுமாற்றாக அழைத்து அச்சொற்களை வாசிக்கச் செய்யுங்கள்.
- அச்சொற்களை அனைத்து மாணவரும் வாசிப்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர், பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- எழுத்துக்களை இனங்காணல்.
- ஒலி வேறுபாடுகளைக் கொண்ட எழுத்துக்களை முறையாக உச்சரித்தல்.
  (உதாரணம்:- அண்ணா, சகோதரன், சகோதரி)
- சொற்களைத் தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல்.

**படி 7.1.2**

- மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- சொல்லட்டைப் பிரதிகளை (பின்னிணைப்பு - 2) ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் சென்று அச்சொற்களை வாசித்துக் காட்டுங்கள்.
- குழுவினர் ஒவ்வொருவரும் அச்சொற்களைச் சுழற்சி முறையில் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
  உதாரணம்



- குழுவில் அனைவரும் அனைத்துச் சொற்களையும் வாசித்த பின்னர் பின்னிணைப்பு - 3 இல் தரப்பட்ட எழுத்தட்டைப் பிரதிகளை அக்குழுக்களுக்கு வழங்கி அவற்றை உறவுப் பெயர்ச்சொற்களாக ஒழுங்குபடுத்த வழிப்படுத்துங்கள்.

**படி 7.1.3**

- குழு நிலையில் இச்செயற்பாடுகள் யாவும் நிறைவுற்ற பின்னர், ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒவ்வொருவரை அழைத்து பின்னிணைப்பு - 3 இல் உள்ள எழுத்தட்டைகளைக் கொண்டு ஆக்கப்பட்ட சொற்களை உரத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- அவரைப் பின்பற்றி ஏனையோரையும் வாசிக்கச் செய்யுங்கள்.
- ஏனைய குழுவினரும் முன்வந்து வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

- எழுத்துக்களை உரிய முறையில் ஒழுங்குபடுத்துவதன் மூலம் உறவுப் பெயர்களை ஆக்குதல். அவற்றைத் தெளிவான பொருத்தமான உச்சரிப்புடன் வாசித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- எழுத்துக்களை இனங்காண்பதன் மூலம் அவற்றைச் சரியாக உச்சரிப்பார்.
- உறவுமுறைகளை அறிவதன் மூலம் பிறரை மதிக்க வேண்டும் என்பதை உணர்ந்துகொள்வார்.
- எழுத்துக்களை முறையாக உச்சரித்து உறவுப் பெயர்களை வாசிப்பார்.
- பல்வேறு சந்தர்ப்பங்களுக்கேற்ப வாசிப்பார்.

**பின்னிணைப்பு - 1**

**உறவுப்பெயர்கள்**

அம்மா
அப்பா
தாத்தா
பாட்டி
அக்கா
அண்ணா
மைத்துனன்
மைத்துனி
சகோதரன்
சகோதரி

**பின்னிணைப்பு - 2 செயற்பாட்டுப் பத்திரம்**

தரப்பட்ட உறவுப் பெயர்களைக் குழுவினர் ஒவ்வொருவரும் சுழற்சி முறையில் வாசியுங்கள்.

| |
|---|
| தம்பி |
| தங்கை |
| மாமா |
| அத்தை |
| பெரியப்பா |
| பெரியம்மா |
| மைத்துனன் |
| சகோதரி |

**பின்னிணைப்பு - 3 செயற்பாட்டுப் பத்திரம்**

எழுத்தட்டைப் பிரதிகளைக் கொண்டு உறவுப் பெயர்களை ஆக்குங்கள்.
எழுத்தட்டைகளைக் கொண்டு ஆக்கப்பட்ட சொற்களை உரத்து வாசியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அ | ம் | மா | |
| பா | ட் | டி | |
| த | ந் | தை | |
| த | ங் | கை | |
| த | ம் | பி | |
| ச | கோ | த | ரி |

**தேர்ச்சி:11.0** **கருத்துக்களை முன்வைப்பதற்காகச் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை எழுதுவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.2**: சொல்வதெழுதுதல்

**செயற்பாடு:** சொல்வதை எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
எழுதுதாள்கள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 11.2.1**

- பின்வரும் சொற்களைக் கரும்பலகையில் காட்சிப்படுத்திக் கலந்துரையாடலை ஆரம்பியுங்கள்.

- கிலி
  கிளி
  கிழி
- மனம்
  மணம்
- மரம்
  மறம்

- "இச்சொற்களின் பொருளைக் கூறுங்கள்" என மாணவர்களிடம் கூறிக் கலந்துரையாடுங்கள்.

- பின்வரும் விடயங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- எழுத்துப் பிழைகளைத் தவிர்ப்பதற்கு
  - அவதானமாகக் கேட்டல்
  - அவதானமாகக் கேட்டவற்றைச் சரியாக உச்சரித்துப் பழகுதல்.
  - சொற்களின் பொருளுணர்ந்து எழுதுதல்.

- எழுத்துக்களைச் சரியாகப் பயன்படுத்தாதபோது கருத்து வேறுபடும்.
  - கிலி = பயம்
  - கிளி = பறவை
  - கிழி = கிழித்தல்

| | |
|---|---|
| ▪ கிளி பறந்தது. | (சரி) |
| ▪ கிழி பறந்தது. | (பிழை) |
| ▪ மல்லிகைப் பூ மணம் வீசியது. | (சரி) |
| ▪ மல்லிகைப் பூ மனம் வீசியது. | (பிழை) |
| ▪ பலா மரம் செழித்து வளர்ந்தது. | (சரி) |
| ▪ பலா மறம் செழித்து வளர்ந்தது. | (பிழை) |

(10 நிமி)

**படி 11.2.2**

- மாணவர்களை வகுப்பு நிலையில் இருக்க வழிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு - 1 இல் உள்ள சொற்களை உரியவாறு வாசியுங்கள்.
- வாசிக்கும்பொழுது செவிமடுத்து எழுதுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- பின்னர், மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- பின்னிணைப்பு - 1 இல் உள்ள சொற்களைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- தாம் எழுதியவற்றிலுள்ள சரி, பிழைகளைக் குழுநிலையில் கலந்துரையாட வழிகாட்டுங்கள்.
- பின்னர், மாணவர்களை வகுப்பு நிலையில் இருக்க நெறிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு - 2 இல் உள்ள சொற்களையும் வாக்கியங்களையும் வாசியுங்கள்.
- மாணவர்கள் அவற்றைச் செவிமடுத்து எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 11.2.3**

- மாணவர்கள் எழுதியதை எழுமாற்றாகப் பெற்று காட்சிப்படுத்துங்கள்.

- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| - அவதானித்துக் கேட்டுப் பின்னர் எழுதுதல் வேண்டும்.<br>- உச்சரிப்பை அவதானித்துச் சொற்களை, வாக்கியங்களை வழுவின்றி எழுதுதல்.<br>- சொல்லும் வேகத்திற்கமைய எழுதுதல்.<br>- உறுப்பமைய எழுதுதல்.<br>- எழுத்துக்களுக்கு இடையிலும் சொற்களுக்கு இடையிலும் தேவையான இடைவெளிகளை அனுசரித்து நேர்த்தியாக எழுதுதல். |

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சொல்வதை எழுதும்பொழுது செவிமடுத்து எழுத வேண்டும் என்பதை அறிந்து கூறுவார்.
- சொல்லும்போது உச்சரிப்பை அவதானித்து எழுதுவார்.
- சொல்வதை எழுதும்பொழுது உறுப்பமையவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.
- சொற்களுக்குரிய எழுத்துக்களைச் சரியாகப் பயன்படுத்தி எழுதுவார்.
  இவ்வாற்றலை வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்திப் பிழைகளின்றி எழுதுவார்.

**ஆசிரியருக்குரியது:**

**பின்னிணைப்பு - I செயற்பாட்டுப் பத்திரம் (அ)**

பின்வரும் சொற்களை ஆசிரியர் உரியவாறு வாசிக்க, மாணவர் செவிமடுத்து எழுத வேண்டும்.

1. மாமா
2. இனிப்பு
3. பயற்றங்காய்
4. விளாம்பழம்
5. வல்லாரை
6. குதிரை
7. கரடி
8. கிளி
9. அதிபர்
10. காலை

**பின்னிணைப்பு - II செயற்பாட்டுப் பத்திரம் (ஆ)**

பின்வரும் சொற்களையும் வாக்கியங்களையும் ஆசிரியர் உரியவாறு வாசிக்க, மாணவர் செவிமடுத்து எழுதவேண்டும்.

1. மாலை
2. அரசன்
3. ஆசிரியர்
4. கரும்பலகை
5. நீலம்

1. மழை பெய்தது.
2. வெள்ளம் பாய்ந்தது.
3. குருவி பறந்தது.
4. மாம்பழம் உண்டேன்.
5. மரம் விழுந்தது.

**தேர்ச்சி : 1.0** சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1**: சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.

**செயற்பாடு:** பெயர்ச்சொற்கள் சிலவற்றினை முறையாக உச்சரித்துக் கூறுவோம். (பழங்கள், காய்கறிகள், சுவைகள், அடைமொழிகள்)

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :

- பழங்கள், காய்கறிகளைக் காட்டும் படங்கள்.
- அப்படங்களுக்குப் பொருத்தமான சொற்கள், அடைமொழிகள் சேர்க்கப்பட்ட சொற்கள் - பின்னிணைப்பு 1
  செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 2
- சுவை பற்றிய பாடல் - பின்னிணைப்பு 3

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 1.1.1**

- பின்னிணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ள பழங்கள், காய்கறிகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றின் பெயர்களையும், அடைமொழி சேர்க்கப்பட்ட சொற்றொடர்களையும் முறையாக உச்சரித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களும் அவ்வாறு உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு கலந்துரையாடுங்கள்.

- சொற்கள், சொற்றொடர்களைத் தெளிவாக முறைப்படி உச்சரிப்பதை அவதானித்துக் கேட்டல்.
- கேட்டவாறு மீண்டும் உச்சரிக்கப் பழகுதல்.
- ஒலி வேறுபாடுகளைக் கிரகித்துக் கொள்ளல்.
- பெயர்களின் முன்னால் அப்பெயர்களின் இயல்பைக் கூறும் அடைமொழிகள் இடம் பெறுவதை அவதானித்தல்.
- சில சொற்கள் இரு மொழிக்கும் பொதுவானவையாக இருத்தல்.
  உதாரணம்: சீனி, அன்னாசி

**படி 1.1.2**

- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு 2) வழங்குங்கள்.
- சொற்களை மாணவர்கள் முறையாக உச்சரித்துக் கூற வழி நடத்துங்கள்.

- ஒருவர் கூறுவதை ஏனையோர் அவதானித்து மீண்டும் முறையாக உச்சரித்துக் கூற வழி காட்டுங்கள்.
- இடர்ப்படுவோருக்கு உதவி வழங்குங்கள்.

**படி 1.1.3**

- மாணவர்களை எழுமாற்றாகத் தெரிவு செய்து, பழங்கள், காய்கறிகளின் பெயர்களை முறையாக உச்சரித்துக் கூறும்படி செய்யுங்கள்.
- பொருத்தமான அடைமொழி சேர்த்துக் கூறவும் வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு கலந்துரையாடுங்கள்.

- பழங்கள், காய்கறிகளின் பெயர்களைமுறையாக உச்சரித்துக் கூறுதல்.
- பெயர்களுக்கு அடைமொழி சேர்த்துக் கூறுதல்.
- சொற்களையும் சொற்றொடர்களையும் சரியாக உச்சரித்தல்.
- சொற்களின் பின்னால் பழம், காய், கிழங்கு என்னும் சொற்கள் இடம் பெறும் முறையை அவதானித்தல்.
- சில பழங்கள், காய்கறிகளின் பெயர்கள் இரு மொழிகளுக்கும் பொதுவாக இருத்தலை அவதானித்தல்.

**படி 1.1.4**

- பின்னிணைப்பு - 3 இலுள்ள சுவை பற்றிய பாடலைப் பாடிக் காட்டுங்கள்.
- மாணவர்கள் பாடலைப் பாடவும் சுவைகளின் பெயர்களை அறிந்துகொள்ளவும் உதவி வழங்குங்கள்.
- மேலதிகச் செயற்பாட்டில் ஈடுபட ஊக்கம் அளியுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பழங்கள், காய்கறிகளின் பெயர்களை அறிந்து கூறுவார்.
- பழங்கள், காய்கறிகளின் பல்வேறு சுவைகள் பற்றிக் கூறுவார்.
- பெயர்களை முறையாக உச்சரிப்பார்.
- நாளாந்த வாழ்க்கையில் பழங்கள், காய்கறிகளின் பெயர்களைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு 1**


அப்பிள் பழம்


உருளைக் கிழங்கு


மாதுளம் பழம்


கத்தரிக்காய்


சிறுகீரை

**அட்டையில் எழுதப்பட்டவை**

1.

அப்பிள் பழம்

சிவப்பு அப்பிள் பழம்

2.

உருளைக்கிழங்கு

பெரிய உருளைக்கிழங்கு

3.

மாதுளம் பழம்

சுவையான மாதுளம் பழம்

4.

கத்தரிக்காய்

பிஞ்சுக் கத்தரிக்காய்




5.

கீரை

சத்துள்ள கீரை

**பின்னிணைப்பு 2 செயற்பாட்டுப் பத்திரம்**


'ஆ' பிரிவிலுள்ள படங்களுக்குப் பொருத்தமான சொற்களை 'அ' பிரிவிலிருந்து தெரிந்து சரியாக [illegible].

| அ | ஆ |
|---|---|
| 1. ரம்புட்டான் |  |
| 2. மாம்பழம் |  |
| 3. திராட்சை |  |
| 4. பாகற்காய் |  |
| 5. வெங்காயம் |  |
| 6. மிளகாய் |  |
| 7. கரும்பு |  |
| 8. வெண்டைக்காய் |  |
| 9. மாதுளம் பழம் |  |
| 10. மஞ்சள் |  |

## ௬ பப்ணைணிண்பி

.ர்கள்றிாப ப்ஶை_ாப ாள்றி்பப்ரூ

**மஶா**



ஞ்ஙுணக்ஷுபய்ாவ ய்ருக்ருபொபப்ஷஇ
ய்ாமஹிழ்ஶ_ஓ ஜிக்ாஙகர்_ஷஞ



க்ஙுணக்ஷுபய்யரிஶுபு ய்ருக்ருபொபப்ரிஶுபு
ய்ாமஹிபிப்ாஞ ஶ்ஞுக்ர்ஞஹ ஶ்ரிஙகஜுக



ப்யணாகஜ்காப ய்ருக்ருபொபப்ஞக
ய்ாமஹிஜிக்ஷிபு ப்ஜிக்ாஶயரிாபஶ



ஞ்யணாகாஙிவ ய்ருக்ருபொபப்ஜண_ஓ
ய்ாமஹிஜிக்மணஜ ஞ்ஞுக்ரணஓ ஶ்பய்ஞ

## ஹிாபஜ்யஞஶ கஜிஶவஹி

க்ஞுக்ர்ஞஹ ஞ்ஙணகர்யபஶ ஷ்ரிஙகஜுகப்ாக ,ர்கள்ஷுப ப்காவஞுக்ஜாபஶ ப்ருக்ஜகஜொவஶ_ணஓ .ர்கள்ஜுஞ

ணாவ_ட்ம ....................................

ணாபப்ஷஇ ....................................

ணாபப்ரிஶுபு ....................................

ணாபப்ஞக ....................................

ணாவாஙீ ....................................

ணாகஷுஓ ....................................

யரிபஶ ....................................

யஜுஷ ....................................

**தேர்ச்சி: 7.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை கருத்து விளங்கி, முறைப்படி வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1**: சொற்களை விளங்கி முறையாக வாசிப்பார்.

**செயற்பாடு:** பெயர்ச் சொற்களை முறையாகவும் தெளிவாகவும் வாசிப்போம். (உணவு வகை)

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : படங்களும் அவற்றின் பெயர்களும் எழுதப்பட்ட அட்டை - பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 7.1.1**

- படங்களும் அவற்றின் பெயர்களும் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களை அட்டையிலுள்ள சொற்கள், சொற்றொடர்களை வாசிக்கும்படி கூறுங்கள்.
- தரப்பட்டுள்ள சொற்களை மாணவர் உரிய முறையில் உச்சரிக்கின்றார்களா என்பதை அவதானியுங்கள்.
- இடர்ப்படும் மாணவருக்கு உதவி வழங்குங்கள்.

பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு கலந்துரையாடுங்கள்.

- சொற்களைச் சரியாக உச்சரித்து வாசித்தல்.
- சொற்களின் பொருளை விளங்கி வாசித்தல்.

**படி 7.1.2**

- மாணவர்களைச் சோடி சோடியாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள (பின்னிணைப்பு - 2) ஒவ்வொரு சொற்றொகுதியை ஒவ்வொரு சோடிக்கு வழங்குங்கள்.
- தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரம் போல மேலும் பலவற்றைத் தயாரித்து மாணவர்களிடையே வழங்குங்கள்.
- மாணவர்கள் இணைந்து அவற்றை வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவருக்கு உதவுங்கள்.

**படி 7.1.3**

- மாணவரை எழுமாற்றாகத் தெரிவுசெய்து, குறித்த ஒரு சொல்லை அல்லது சிறு வாக்கியத்தைத் தெளிவாக உரத்து வாசிக்கும்படி செய்யுங்கள்.
- பிழைகளின்றி உரிய முறையில் சொற்களை உச்சரிக்கிறார்களா என்பதை அவதானியுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு கலந்துரையாடுங்கள்.

- எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை இனங்கண்டு உச்சரித்தல்.
  வல்லாரை
  மரவள்ளிக் கிழங்கு
  பாகற்காய்
  பொன்னாங்கண்ணி
- சொற்களின் பொருளை விளங்கி வாசித்தல்.
- தரப்பட்டுள்ள வாக்கியங்களைப் பொருத்தமுற வாசித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பழங்கள், காய்கறிகளின் பெயர்களை அறிந்து வாசிப்பார்.
- சொற்களை / வாக்கியங்களைத் தெளிவான உச்சரிப்புடன் உரிய முறையில் வாசிப்பார்.
- வாசிக்கும்போது தெளிவான உச்சரிப்பு அவசியம் என்பதை வெளிப்படுத்துவார்.
- நாளாந்த வாழ்க்கையில் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான விதத்தில் அவற்றைப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு 1**

பெயர்ச் சொற்கள் கொண்ட அட்டை.

| |
|---|
| கத்தரிக்காய்<br>வாடிய கத்தரிக்காய் |
| புதினாக் கீரை<br>வாசமான புதினாக் கீரை |
| உருளைக் கிழங்கு<br>பெரிய உருளைக் கிழங்கு |
| சுரைக்காய்<br>அழகான சுரைக்காய் |
| இலந்தைப் பழம்<br>புளிக்கும் இலந்தைப் பழம் |

**பின்னிணைப்பு 2** **செயற்பாட்டுப் பத்திரம் 1**

வல்லாரை
சுரைக்காய்
பொன்னாங்கண்ணிக் கீரை
புதினாக் கீரை
பாகற்காய்

பாகற்காய் கசக்கும்

திராட்சைப்பழம்
மாதுளம்பழம்
புளியம்பழம்
இலந்தைப்பழம்
பேரீச்சம்பழம்

திராட்சைப் பழம் இனிக்கும்

உருளைக் கிழங்கு
மரவள்ளிக் கிழங்கு
வற்றாளைக் கிழங்கு
வள்ளிக் கிழங்கு
பனங் கிழங்கு

பனங்கிழங்கு சுவையானது

வெங்காயம்
வெள்ளைப்பூடு
கடுகு
சீரகம்
கறுவா

கடுகு சிறியது

வெற்றிலை
குரக்கன்
கறிமிளகாய்
பச்சை மிளகாய்
செத்தல் மிளகாய்

மிளகாய் உறைக்கும்

**மேலதிக செயற்பாடு**

பின்வரும் பகுதியை சோடியாகச் சேர்ந்து உரத்து வாசியுங்கள்.

அம்மா சென்றார் சந்தைக்கு
வாங்கி வந்தார் காய்கறிகள்
கத்தரிக்காய் வாழைக்காய்
பாகற்காய் பயிற்றங்காய்
சுரைக்காய் சுண்டைக்காய்
பீர்க்கங்காய் புடோலங்காய்
வல்லாரை அகத்தி
பசளி புதினா
சமையல் செய்து தந்திடுவார்
சாப்பிட்டு நாமும் மகிழ்ந்திடுவோம்

**தேர்ச்சி:11.0** **கருத்துக்களை முன்வைப்பதற்காக சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை எழுதுவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.3**: நாளாந்த தேவைகளுக்குப் பிரயோகிக்கும் சொற்களை எழுதுவார்.

**செயற்பாடு:** பெயர்ச் சொற்களை எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : பின்னிணைப்பு - 1
பின்னிணைப்பு - 2
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 3

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 11.3.1**

- பின்னிணைப்பு 1 ஐக் காட்சிப்படுத்துங்கள்.
- அதிலுள்ள சொற்களை வாசிக்கச் செய்யுங்கள்.
- அச்சொற் கூட்டத்தைத் தமது பயிற்சிக் கொப்பிகளில் எழுதச் செய்யுங்கள்.
- எழுதிக்கொண்ட சொற்களை மீண்டும் வாசிக்கச் செய்யுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- ஒருமை, பன்மை பெயர்ச் சொற்களை உறுப்பமைய எழுதுதல்.
- அவற்றை உச்சரித்து வாசித்தல்.

(20 நிமி)

**படி 11.3.2**

- மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு 2 ஐ ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- அதிலுள்ள ஒருமைச் சொற்களையும், பன்மைச் சொற்களையும் வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களையும் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- ஒருமை, பன்மைச் சொற்களை வெவ்வேறாக எழுதிக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்னிணைப்பு - 3 (செயற்பாட்டுப் பத்திரம்) ஐ ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

(40 நிமி)

**படி 11.3.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் இரண்டு பேர் வீதம் அழைத்து, தாம் எழுதிய சொல் ஒன்றை ஒருவர் வாசிக்க, மற்றவர் அதனைக் கரும்பலகையில் எழுதச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- இவ்வாறாக எல்லாக் குழுவினரையும் எழுதவும் வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.
- எழுமாற்றாக மாணவர்கள் சிலரை அழைத்து ஆசிரியர் கூறும் சொற்களைக் கரும்பலகையில் எழுதச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- எழுத்துக்களை உறுப்பமைய எழுதுதல்.
- எழுத்துக்களின் வடிவம், அளவு, திசைமுகம் என்பவற்றை (எழுத்துப் பொறிமுறைகள்) அனுசரித்துப் பிழையின்றி எழுதுதல்.
- சொற்களுக்கிடையில் இடைவெளி விட்டு எழுதுதல்.
  எழுத்துக் கூட்டி வாசித்து எழுதுதல்.

(20 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சொற்களை, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து தெளிவாக, நேர்த்தியாக, உறுப்பமைய, பிழையின்றி இடைவெளிவிட்டு எழுதுவார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் இவ்வாறான சொற்களைப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1**

| | | | |
|---|---|---|---|
| பாடசாலை - (පාසල) | மலர் - (මල) | புகைவண்டி - (දුම්රිය) | கனி - (පළතුර) |
| கதிரைகள் - (පුටු) | பழம் - (පළතුර) | சோறு - (බත්) | ஞாயிறு - (ඉර) |
| பூ - (මල) | குரு - (ගුරු) | விருட்சம் - (ගස) | மேசை - (මේසය) |
| சந்திரன் - (හඳ) | நிலா - (හඳ) | ஆசிரியர் - (ගුරුවරයා) | தந்தை - (පියා) |
| பேனைகள் - (පෑන්) | மரம் - (ගස) | சூரியன் - (ඉර) | தாய் - (මව) |

**பின்னிணைப்பு - 2**

| | |
|---|---|
| சைக்கிள் | அலுமாரிகள் |
| கப்பல் | மாதுளம் பழம் |
| மயில்கள் | நாய்கள் |
| வெண்டிக்காய் | ஆகாய விமானங்கள் |
| கடிகாரங்கள் | கிளி |
| கரடிகள் | மேசைகள் |
| தோடம்பழம் | கதிரை |
| வல்லாரை | வாகனங்கள் |
| வீடு | பழங்கள் |
| உரல் | மாணவர்கள் |
| மாணவி | பென்சில் |
| கத்தரிக்காய் | பூக்கள் |

**பின்னிணைப்பு - 3 (செயற்பாட்டுப் பத்திரம்)**

1. பின்வரும் ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்கள் எழுதுங்கள்.
    1. கதிரை -
    2. மலர் -
    3. பிள்ளை -
    4. கிளி -
    5. மேசை -

2. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து கீறிட்ட இடத்தில் எழுதுங்கள்.

    (ஞாயிறு, நிலா, தாய், கனி, விருட்சம், குரு, மலர், தந்தை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. அம்மா | - | ................................. | 5. சந்திரன் | - | ................................. |
| 2. மரம் | - | ................................. | 6. அப்பா | - | ................................. |
| 3. சூரியன் | - | ................................. | 7. பழம் | - | ................................. |
| 4. பூ | - | ................................. | 8. ஆசிரியர் | - | ................................. |

3. பின்வரும் 'அ' பகுதியிலுள்ள ஆண்பால் சொற்களுக்குப் பொருத்தமான பெண்பால் சொற்களை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவுசெய்து கீறிட்ட இடத்தில் எழுதுங்கள்.

| **(அ)** | | | **(ஆ)** |
|---|---|---|---|
| 1. மாணவன் | - | ................................ | 1. சிறுமி |
| 2. ஆசிரியன் | - | ................................ | 2. நண்பி |
| 3. சகோதரன் | - | ................................ | 3. ஆசிரியை |
| 4. சிறுவன் | - | ................................ | 4. மாணவி |
| 5. நண்பன் | - | ................................ | 5. மாமி |
| 6. அரசன் | - | ................................ | 6. சகோதரி |
| 7. பாட்டன் | - | ................................ | 7. அரசி |
| 8. மாமா | - | ................................ | 8. பாட்டி |

**தேர்ச்சி : 1.0** சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1**: சொற்களைக் கேட்டு முறையாக உச்சரித்துக் கூறுவார்.

**செயற்பாடு:** மிருகங்கள், பறவைகளின் பெயர்களைக் கேட்டு, முறையாக உச்சரித்துக் கூறுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : படங்களுக்குப் பொருத்தமான சொல்லட்டைகள்
அட்டவணை - பின்னிணைப்பு - 1

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 1.1.1**

மிருகங்கள், பறவைகளினது படங்களையும் சொற்களையும் காட்சிப்படுத்துங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடு | - | ஆடுகள் | - | கறுப்பு ஆடு |
| கிளி | - | கிளிகள் | - | பச்சைக் கிளி |
| மயில் | - | மயில்கள் | - | தோகை மயில் |
| குதிரை | - | குதிரைகள் | - | வரிக்குதிரை |

- மாணவர் ஒருவரைத் தெளிவாக உச்சரித்துக் கூறுமாறு கூறுங்கள்.
- ஏனையோரை அவற்றைக் கேட்டு உச்சரிக்குமாறு சொல்லுங்கள்.
- ஒருமை, பன்மை வேறுபாடுகளை அறிந்து சொற்களை உச்சரிக்க வழிநடத்துங்கள்.
- அடைமொழிகள் சேர்க்கப்பட்டுள்ள விதத்தினை அறிந்து உச்சரிக்குமாறு கூறுங்கள்.
- சொற்களைக் கேட்டு உச்சரித்துக் கூறும் போது கவனிக்க வேண்டியவை எவை எனக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- அவதானித்துக் கேட்டல்
- கிரகித்தல்
- எழுத்துகளின் ஒலி வேறுபாடுகளை மனதில் பதித்தல்
- ஒலிவேறுபாடுகளை அறிந்து தெளிவாக உச்சரித்துக் கூறுதல்.
- ஒருமை பன்மை வேறுபாடுகள்.
- அடைமொழிகள் சேர்த்துக் கூறுதல்.

**படி 1.1.2**

- மாணவர்களை நான்கு அல்லது ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிடமும் செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு - 1) வழங்குங்கள்.
- சொற்களைத் தெளிவாகவும் முறையாகவும் உச்சரித்துக் காட்டுங்கள்.

- நீங்கள் கூறியவற்றை மாணவர் உச்சரித்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் கூறுவதை ஏனையோர் கேட்டு உச்சரித்துக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிடமும் சென்று, உச்சரிக்க இடர்ப்படும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இறுதியாக எல்லோரும் சேர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் கூற வழிப்படுத்துங்கள்.
- பாடலைப் பாடிக் காட்டுங்கள்.

**படி 1.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் மாணவர்களை எழுமாற்றாக அழைத்து செயற்பாட்டுப் பத்திரத்தை முன்னிலைப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- ஏனைய மாணவர்களது கருத்துக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.




- படத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெளிவாக உச்சரித்துக் கூறுதல்.
- ஒலிவேறுபாடுகளை அறிந்து தெளிவாக உச்சரித்துக் கூறுதல்.
- ஒருமைச் சொற்கள் பன்மைச் சொற்களாகும்போது ஏற்படும் மாற்றங்களை அவதானித்து உச்சரித்தல்.
  உ+ம்: அன்னம் - அன்னங்கள் - 'ம்' 'ங்' ஆக மாறுவதை விளக்கிக் கூறுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- மிருகங்கள், பறவைகளின் பெயர்களை அறிந்து கூறுவார்.
- ஒலிவேறுபாடுகளை அறிந்து சொற்களைச் சரியாக உச்சரித்துக் கூறுவார்.
- ஒருமைச் சொற்களைப் பன்மையில் மாற்றிக் கூறுவார்.
- நாளாந்த வாழ்க்கையில் இச்சொற்களைச் சரியான உச்சரிப்புடன் பயன்படுத்துவார்.

**செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1**

1. பகுதி 'அ' இல் படங்களும் பகுதி 'ஆ' இல் சொற்களும் உள்ளன. படத்திற்குப் பொருத்தமான சொற்களை இணைத்து உச்சரித்துக் கூறுங்கள்.

| அ | ஆ |
|---|---|
|  | சிங்கம் |
|  | மயில் |
|  | அணில் |
|  | ஆடு |
|  | முயல் |

2. பின்வரும் சொற்களைத் தெளிவாகவும் சரியான உச்சரிப்புடனும் கூறுங்கள்.

**வீட்டு மிருகங்கள்**

பசு
நாய்
பூனை
முயல்
மாடு
ஆடு

**பறவைகள்**

கோழி
கிளி
குயில்
புறா
மைனா
மயில்
வாத்து
அன்னம்
வான்கோழி
தீக்கோழி

**காட்டு மிருகங்கள்**

யானை
சிங்கம்
கரடி
மான்
மரை

3. ‘கள்’ ‘ங்கள்’ ‘க்கள்’ என்பவற்றைப் பொருத்தமான இடங்களில் சேர்த்து உச்சரித்துக் கூறுங்கள்.

அ.
நாய்
பூனை
ஆடு
மாடு
முயல்
மான்
மரை
யானை
கோழி
கிளி
கரடி
→ கள்

ஆ.
பசு
புறா
மைனா
தாரா
→ க்கள்

இ.
அன்னம்
சிங்கம்
→ ங்கள்

**சொற்களை அடைமொழிகளுடன் இணைத்துக் கூறுங்கள்.**

| **ஒருமை** | **அடைமொழி** |
|---|---|
| ஆடு | பெரிய ஆடு |
| பசு | வெள்ளைப் பசு |
| நாய் | வேட்டை நாய் |
| பூனை | வீட்டுப் பூனை |
| முயல் | அழகான முயல் |

**பறவைகள்**

| **ஒருமை** | | **பன்மை** | | **அடைமொழி** |
|---|---|---|---|---|
| காகம் | - | காகங்கள் | - | கறுப்புக் காகம் |
| கோழி | - | கோழிகள் | - | காட்டுக் கோழி |
| கிளி | - | கிளிகள் | - | பச்சைக் கிளிகள் |
| குயில் | - | குயில்கள் | - | இனிய குயில் |
| சிட்டுக் குருவி | - | சிட்டுக் குருவிகள் | - | சின்னச் சிட்டுக்குருவி |
| புறா | - | புறாக்கள் | - | வெள்ளைப் புறா |
| மைனா | - | மைனாக்கள் | - | சிறிய மைனாக்கள் |
| மயில் | - | மயில்கள் | - | தோகை மயில்கள் |
| வாத்து | - | வாத்துக்கள் | - | குள்ள வாத்துக்கள் |
| வான்கோழி | - | வான்கோழிகள் | - | அழகிய வான்கோழிகள் |
| தீக்கோழி | - | தீக்கோழிகள் | - | உயர்ந்த தீக்கோழிகள் |

**ஒருமை, பன்மைச் சொற்களைத் தெளிவாக உச்சரித்துக் கூறுங்கள்.**

| | | |
|---|---|---|
| யானை | - | யானைகள் |
| சிங்கம் | - | சிங்கங்கள் |
| கரடி | - | கரடிகள் |
| மான் | - | மான்கள் |
| மரை | - | மரைகள் |
| ஓநாய் | - | ஓநாய்கள் |
| பன்றி | - | பன்றிகள் |
| ஒட்டகம் | - | ஒட்டகங்கள் |
| குதிரை | - | குதிரைகள் |
| ஒட்டகச் சிவிங்கி | - | ஒட்டகச் சிவிங்கிகள் |

- பின்வரும் பாடலைச் சோடியாக இணைந்து பாடுங்கள்.

**வழிகாட்டி**

கோழிபோல காலையிலே விழிக்கணும் - சிட்டுக்
குருவி போல சுறுசுறுப்பாய் இருக்கணும்

அன்னம் போல அழகுநடை நடக்கணும் - அதில்
ஆந்தைபோல நல்லடக்கம் இருக்கணும்
வண்ணக்கிளிபோல மொழி பேசணும் - அதில்
மைனாவைப் போல் இனிமை இருக்கணும்

மாடப்புறா போல கூடி வாழணும் - தினம்
மாங்குயிலைப்போல பாடி வாழணும்
காக்கைபோல ஒற்றுமையாய் இருக்கணும் - மனம்
கருடன்போல காரியத்தை முடிக்கணும்

யானை போல ஞாபகமாய் வாழணும் - கூடி
எறும்பு போல வரிசையாக நடக்கணும்
மானைப்போல வேகமாக ஓடணும் - பசு
மாட்டைப்போல மக்களுக்கு உதவணும்

நல்ல பாடல்கள் - எஸ்.நவராஜ் செல்லையா
சாந்திமலர் பதிப்பகம் - சென்னை

**தேர்ச்சி: 7.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை கருத்து விளங்கி முறைப்படி வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1**: சொற்களை விளங்கி வாசிப்பார்.

**செயற்பாடு 7.1.1:** மிருகங்கள், பறவைகளின் பெயர்களை முறையாக விளங்கி வாசிப்போம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : மிருகங்கள், பறவைகளின் படங்கள், சொல்லட்டைகள்
பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 7.1.1**

- மிருகங்கள், பறவைகளின் படங்கள் ஐந்தினையும் சொல்லட்டைகளையும் காட்சிப்படுத்துங்கள். (பின்னிணைப்பு 1)
- மிருகங்கள், பறவைகளின் பெயர்களை (படத்துடன்) வாசியுங்கள்.
- பின்னர் படத்தினை மறையுங்கள்.
- சொல்லட்டைகளை வாசிக்கும்படி கூறுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| ▪ பொருள் விளங்க வாசித்தல் |
| ▪ எழுத்துக்களை இனங்கண்டு வாசித்தல் |
| ▪ தெளிவாக உச்சரித்து வாசித்தல் |
| ▪ ஒலி வேறுபாடுகளை அறிந்து தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல் |

**படி 7.1.2**

- பின்னிணைப்பு 2 இலுள்ள சொல்லட்டைகளை ஒரு பெட்டியில் போடுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து ஒருவருக்கு ஒரு சொல்லட்டையென எடுக்குமாறு கூறுங்கள்.
- சொல்லட்டையை வாசிக்கும்படி கூறுங்கள்.
- சொல்லட்டைகள் எல்லாவற்றையும் காட்சிப்படுத்தி, எல்லோரையும் சேர்ந்து வாசிக்கும்படி கூறுங்கள்.
- பின்னிணைப்பு 3 இலுள்ள பறவைகள், மிருகங்களின் பெயர்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- மிருகங்களினதும் பறவைகளினதும் பெயர்களை இனங்கண்டு வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**படி 7.1.3**

- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து சொற்களை உரத்து வாசிக்க வாய்ப்பு அளியுங்கள்.
- ஏனைய மாணவர்களது கருத்துக்களைக் கேட்டு கலந்துரையாடுங்கள்.

- எழுத்துக்களை அவதானித்து இனங்கண்டு வாசித்தல்.
- ஒலி வேறுபாடுகளை அறிந்து வாசித்தல்.
- பொருள் விளங்க வாசித்தல்.
- தெளிவாக உச்சரித்து வாசித்தல்.


**கணிப்பீடும் மதிப்பீடும்**

- மிருகங்களினதும் பறவைகளினதும் பெயர்களை அறிந்து கூறுவார்.
- எழுத்துக்களை அறிந்து வாசிப்பார்.
- மிருகங்களினதும் பறவைகளினதும் பெயர்களைத் தெளிவாக உச்சரித்து வாசிப்பார்.
- மிருகங்கள், பறவைகளது பெயர்களை இனங்கண்டு வாசிப்பார்.
- அன்றாட வாழ்க்கையில் இவ்வாறான சொற்களை முறைப்படி வாசிப்பார்.

(கேட்டலும் பேச்சுக்குமென கொடுக்கப்பட்ட மிருகங்கள், பறவைகளினது பெயர்ப்பட்டியல், பாடல் என்பனவும் இணைக்கப்படலாம்.)

**பின்னிணைப்பு 1**


தரப்பட்டுள்ள சொற்களை உரத்து வாசியுங்கள்.



சேவல்



சிங்கம்



ஒட்டகம்



கிளி



அன்னம்

**பின்னிணைப்பு 2 செயற்பாட்டுப் பத்திரம்**

பெட்டியிலிருந்து ஒரு சொல்லட்டையைத் தெரிவுசெய்து உரத்து வாசியுங்கள்.

| | | |
|---|---|---|
| மான் | தீக்கோழி | கோழிகள் |
| ஓநாய் | வான்கோழி | குரங்குகள் |
| நரி | வாத்து | கழுதைகள் |
| சிங்கம் | சிட்டுக்குருவி | தூக்கணாங்குருவி |
| கரடி | கொக்கு | நாரைகள் |
| குதிரை | பருந்து | செண்பகம் |
| பன்றி | கழுகு | நாகணவாய் |

**பின்னிணைப்பு 3 செயற்பாட்டுப் பத்திரம்**

- மிருகங்கள், பறவைகளின் பெயர்களை இனங்கண்டு வாசியுங்கள்.

முயல், சேவல், கழுகு,
கழுதை, கோழி, நரி,
குரங்கு, நாரை,
வான்கோழி, சிங்கம்,
காகம், பன்றி, தாரா,
மரை, பருந்து, வாத்து,
புறா, ஒட்டகம், கரடி,
யானை, மான், ஓநாய்,
தூக்கணாங்குருவி,
நாகணவாய்

**தேர்ச்சி: 1.0** சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1**: சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.

**செயற்பாடு:** வாகனங்களின் பெயர்களையும் வீடு, பாடசாலை அதிபர் அலுவலகம் என்பனவற்றில் காணப்படும் பொருள்களின் பெயர்களையும் உச்சரித்துக் கூறுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- படங்கள் - (அவற்றின் பின்புறத்தில் பெயர்களுடன்)பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 2
- அடைமொழிகள் - பின்னிணைப்பு 3
- இருமொழிக்கும் பொதுவான சொற்கள் - பின்னிணைப்பு 4

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 1.1.1** பின்வரும் வினாக்களை மாணவரிடம் வினவுவதன் மூலம் பாடத்தை ஆரம்பியுங்கள்.

- அதிபரின் காரியாலயத்தில் காணப்படும் பொருள் ஒன்றைக் கூறுங்கள்.
- சமையலறையில் காணப்படும் பொருள் ஒன்றைக் கூறுங்கள்.
- தரைமார்க்கமாகச் செல்லும் வாகனம் ஒன்றைக் கூறுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

- அதிபர் காரியாலயம், வீட்டு வரவேற்பறை, சமையலறை ஆகிய இடங்களில் காணப்படும் பொருட்களின் பெயர்களை முறையாக உச்சரித்தல்.
- அடைமொழிச் சொற்கள்
- இருமொழிக்கும் பொதுவான சொற்கள்

(20 நிமிடம்)

**படி 1.1.2**

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு 1 ஐ ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- அவற்றை அதிபர் காரியாலயத்தில் காணப்படும் பொருட்கள், சமையலறையில் காணப்படும் பொருட்கள், வரவேற்பறையில் காணப்படும் பொருட்கள், தரைமார்க்கமாகச் செல்லும் வாகனங்கள், நீர்மார்க்கமாகச் செல்லும் வாகனங்கள் என வகைப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழு நிலையில் அவற்றுக்கான பெயர்களை உச்சரித்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உச்சரித்துக் காட்டி உதவுங்கள்.

- செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு 2) மாணவர்களுக்கு வழங்கிச் செயற்பட வழிப்படுத்துங்கள்.
- சொற்களைச் சரியாக உச்சரித்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு 3, பின்னிணைப்பு 4 என்பவற்றைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- விரும்பிய சொற்களுடன் அடைமொழிகளை இணைத்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- இருமொழிக்கும் பொதுவான சொற்களை இனங்காணச் செய்யுங்கள்.

(40 நிமிடம்)

**படி 1.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் இரண்டு பேர் வீதம் வகுப்பறைக்கு முன்னால் அழைத்து ஒருவர் படத்தைக் காட்ட, மற்றவர் அதன் பெயரைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சில படங்களை எழுமாற்றாகக் காண்பித்து அவற்றின் பெயர்களைக் கூற வாய்ப்பளியுங்கள்.
- அடைமொழிகளுடன் இணைத்து அவற்றைக் கூற வழிப்படுத்துங்கள்.
- இருமொழிகளிலும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்களை இனங்காணச் செய்யுங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- அதிபர் காரியாலயம்
- வீட்டில் வரவேற்பறை, சமையலறை ஆகிய இடங்களில் காணப்படும் பொருள்களின் பெயர்களைச் சரியாக உச்சரித்துக் கூறுதல்.
- வாகனங்களின் பெயர்களைச் சரியாக உச்சரித்துக் கூறுதல்.
- பெயர்ச்சொற்களை அடைமொழிகளுடன் இணைத்துக் கூறுதல்.
- இரு மொழிக்கும் பொதுவான சொற்களை அறிந்து கூறுதல்.

(20 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**





- சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.
- அடைமொழிகளைச் சேர்த்துச் சொற்களை உச்சரித்துக் கூறுவார்.
- இருமொழிக்கும் பொதுவான சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் கற்றனவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு 1 செயற்பாட்டுப் பத்திரம்**

**01.** கார், வசுவண்டி, லொறி, ஜீப் வண்டி, புகைவண்டி, டிரக்டர், சைக்கிள், மோட்டார் சைக்கிள், மாட்டுவண்டி, முச்சக்கர வண்டி, கப்பல், தோணி, படகு, கட்டுமரம், நீர்மூழ்கிக் கப்பல், உரல், உலக்கை, அம்மி, துருவுபலகை, அடுப்பு, சட்டி, முட்டி, அகப்பை, கத்தி, பீங்கான், கோப்பை, மேசை, கதிரை, கடிகாரம், பூச்சாடி, நாட்காட்டி, அலுமாரி, பேனை, புத்தகம், கோவை, நேரசூசி, அறிவித்தல் பலகை.



இவற்றின் படங்கள் (வெவ்வேறாக அச்சிடப்பட்டு) அதன் பெயர் படத்தின் பின்பக்கமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான ஐந்து தொகுதிகள் அவசியம்.

உதாரணம்:

| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| மேசை | கதிரை | கடிகாரம் | சைக்கிள் | யானை |

**பின்னிணைப்பு 2 செயற்பாட்டுப் பத்திரம்**

**02.** பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இணையுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. |  | கார் |
| 2. |  | கப்பல் |
| 3. |  | சைக்கிள் |
| 4. |  | ஒட்டகம் |
| 5. |  | பஸ்வண்டி |

**03.** பின்வரும் அடைமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை சேர்த்துக் கூறுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அழகான | - | ලස්සන |
| 2. | பெரிய | - | විශාල |
| 3. | கூரான | - | මුවහත් |
| 4. | நல்ல | - | හොඳ |
| 5. | புதிய | - | අලුත් |
| 6. | பழைய | - | පරණ |
| 7. | சிறிய | - | කුඩා |
| 8. | கிழிந்த | - | ඉරුණු |
| 9. | உடைந்த | - | කැඩුනු |
| 10. | உயரமான | - | උස |

**04.** இருமொழிக்கும் பொதுவான சொற்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கார் | - | කාරය | 6. | முட்டி | - | මුට්ටිය |
| 2. | பஸ் | - | බසය | 7. | பேனை | - | පෑන |
| 3. | லொறி | - | ලොරිය | 8. | டிராக்டர் | - | ට්‍රැක්ටරය |
| 4. | மேசை | - | මේසය | 9. | ஜீப் | - | ජීප් |
| 5. | சட்டி | - | හට්ටිය | 10. | அலுமாரி | - | අල්මාරිය |

**தேர்ச்சி: 7.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை கருத்து விளங்கி முறைப்படி வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1**: சொற்களை விளங்கி, முறையாக வாசிப்பார்.

**செயற்பாடு :** வீடு, பாடசாலை மற்றும் பொது இடங்களில் காணப்படும் பொருட்கள், வாகனங்களின் பெயர்களை உச்சரித்து வாசிப்போம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : படங்களுடனான பெயர்ச்சொல் பட்டியல் - பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 3

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 7.1.1**

- பின்னிணைப்பு - 1 ஐக் காட்சிப்படுத்துங்கள்.
- அப்படத்திலுள்ள பொருட்களின் பெயர்களை மாணவர்களிடம் வினவுங்கள்.
- சொற்களை வாசிக்கச் செய்யுங்கள்.
- அடைமொழி சேர்த்து சொற்களை வாசிக்கத் தூண்டுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

- வீடு, பாடசாலை, பொது இடங்களில் காணப்படும் (படங்களுடன் குறிப்பிட்ட) பொருட்களின் பெயர்களை உச்சரித்து வாசித்தல்.
- அடைமொழிகளுடன் அச்சொற்களை உச்சரித்து வாசித்தல்.
- இரு மொழிக்கும் பொதுவான சொற்களை வாசித்தல்.

(20 நிமி)

**படி 7.1.2**

- மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு 2 ஐ ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- படத்திலுள்ள பொருட்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெளிவாக உச்சரித்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு 3 ஐ ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- அதிலுள்ள சொற்களைத் தெளிவாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- வாசிக்க இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.
சகல மாணவர்களும் வாசிக்கச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.

(40 நிமி)

**படி 7.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் முன்வந்து, கொடுத்த சொற்களை உச்சரித்து வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- எழுமாற்றாகச் சில மாணவர்களை அழைத்து, அந்தச் சொற்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- வீடு, பாடசாலை, பொது இடங்களில் காணப்படும் பொருட்களின், வாகனங்களின் பெயர்களை உச்சரித்து வாசித்தல்.
- அடைமொழிகளுடன், பொருட்களின் பெயர்களை எழுத்துக்கூட்டி சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- இரு மொழிக்கும் பொதுவான சொற்களை உச்சரித்து வாசித்தல்.

(20 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- வீடு, பாடசாலை, பொது இடங்களில் காணப்படும் பொருட்களின், வாகனங்களின் பெயர்களைச் சரியாக வாசிப்பார்.
- அச்சொற்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளைச் சேர்த்து வாசிப்பார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1 பெயர்ச்சொல் பட்டியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| கார் | ஜீப் | முச்சக்கர வண்டி | | |
| வசுவண்டி | லொறி | படகு | மாட்டுவண்டி | கப்பல் |
| புகைவண்டி | சைக்கிள் | டிராக்டர் | பாய்க்கப்பல் | தோணி |
| மோட்டார் சைக்கிள் | | நீர்மூழ்கிக் கப்பல் | | |

வாகனங்களின் படங்கள் (தரைமார்க்கம், நீர்மார்க்கம்) (சொற்களுடன்)

**பின்னிணைப்பு - 2**
**செயற்பாட்டுப் பத்திரம்**

- சொற்களைத் தெளிவாக உச்சரித்து வாசியுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கதிரை | கடிகாரம் | சட்டி | கோவை | |
| மேசை | அம்மி | பீங்கான் | அலுமாரி | அடுப்பு |
| உரல் | பேனை | துருவுபலகை | நாட்காட்டி | உலக்கை |
| புத்தகம் | நேரசூசி | அகப்பை | கோப்பை | |
| கத்தி | அறிவித்தல் | பலகை | முட்டி | பூச்சாடி |

**வீட்டில் காணப்படும் பொருட்கள் (படமும் சொற்களும்) காரியாலயத்தில் காணப்படும் பொருட்கள் (படமும் சொற்களும்)**

(பின்னிணைப்பு 1, பின்னிணைப்பு 2 என்பவற்றின் படங்களைக் குறிக்கும் சொற்களும் அச்சிடப்படல் வேண்டும்.)

**பின்னிணைப்பு - 3 செயற்பாட்டுப் பத்திரம்**

அடைமொழியுடன்கூடிய சொற்களை வாசியுங்கள்.

01. அழகான பூச்சாடி

02. பெரிய மேசை

03. புதிய பேனை

04. சிறிய சட்டி

05. நல்ல பாடசாலை

06. உயரமான அலுமாரி

07. கூர்மையான கத்தி

08. உடைந்த முட்டி

09. சுவர்க்கடிகாரம்

10. பழைய புத்தகம்

**தேர்ச்சி:** **1.0 சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.**

தேர்ச்சி மட்டம்: 1.1 சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.

செயற்பாடு : இலக்கங்களை அறிவோம், நேரத்தைக் கூறுவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு:

- 1-20 வரையுள்ள இலக்கங்கள் எழுதப்பட்ட அட்டை பின்னிணைப்பு 1
- கடிகார முகப்புகள் - 6 செயற்பாட்டுப் பத்திரம் 1 – பின்னிணைப்பு 2

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 1.1.1**

- பின்னிணைப்பு 1 (1-20 இலக்கங்கள்) ஐக் காட்சிப்படுத்துங்கள். மாணவர்களிடம் பின்வரும் வினாக்களை வினவுவதன் மூலம் பாடத்தை ஆரம்பியுங்கள்.

1. உங்கள் வயது என்ன?
2. நீங்கள் எத்தனையாம் வகுப்பில் படிக்கிறீர்கள்?
3. ஒரு கையில் எத்தனை விரல்கள் உள்ளன?
4. காலையில் எத்தனை மணிக்கு எழும்புவீர்கள்?
5. எத்தனை மணிக்கு நித்திரைக்குச் செல்வீர்கள்?

- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| - இலக்கங்கள் ( 1- 20 வரை) |
| - ஒற்றை எண்கள், இரட்டை எண்கள் |
| - நேரம் (மணி) என்பவற்றை தெளிவாக உச்சரித்துக் கூறுதல். |

(20 நிமிடம்)

**படி 1.1.2**

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- இலக்கம் 1-20 வரை எழுதப்பட்ட பின்னிணைப்பு 1 ஐ மீண்டும் ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- இலக்கங்களை ஆசிரியர் வாசித்துக்காட்டி, மாணவர்களைக் கூறச் செய்யுங்கள்.
- குழுரீதியாகச் சகல மாணவர்களையும் இலக்கங்களைச் சரியான உச்சரிப்புடன் கூற வழிப்படுத்துங்கள்.

- அவற்றை ஒற்றை எண்கள், இரட்டை எண்கள் என வேறுபடுத்திக் காட்டுங்கள்.
- குழுத்தலைவர்கள் ஓர் இலக்கத்தைக் காண்பிக்கும்போது அது ஒற்றை எண்ணா இரட்டை எண்ணா என்பதைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் கடிகார முகப்புகளை (பின்னிணைப்பு - 2) வழங்குங்கள்.
- கடிகார முகப்புகளின் முட்களை நகர்த்துவதன் மூலம் காட்டப்படும் நேரங்களைச் சரியாகக் கூற வாய்ப்பளியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை சகல குழுவினருக்கும் வழங்கிச், செயற்பட வழி செய்யுங்கள்.

(40 நிமிடம்)

**படி 1.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் இருவரை வகுப்பறைக்கு முன்னால் அழைத்து, ஒருவர் ஒற்றை எண்களையும் மற்றவர் இரட்டை எண்களையும் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை அழைத்துக் கடிகார முகப்பில் காட்டப்படும் நேரத்தைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- எல்லாக் குழுவினருக்கும் இவ்வாறாகக் கூறச் சந்தர்ப்பம் வழங்குவதுடன் ஏனைய மாணவர்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| - | 1- 20 வரை இலக்கங்களைத் தெளிவாக உச்சரித்தல். |
| - | ஒற்றை எண்களையும் இரட்டை எண்களையும் கூறுதல். |
| - | கடிகார முகப்பில் காட்டப்படும் (மணி) நேரத்தை சரியாகக் கூறுதல். |

(20 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**


- ஒற்றை எண்களையும், இரட்டை எண்களையும் கூறுவார்.
- ஒற்றை எண்களையும் இரட்டை எண்களையும் வகைப்படுத்தி எழுதுவார்.
- நேரத்தைக் கூறுவார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் இலக்கங்களைப் பயன்படுத்துவார்.

**01. பின்னிணைப்பு 1 (இலக்கங்கள் 1-20 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒன்று | 11. | பதினொன்று |
| 2. | இரண்டு | 12. | பன்னிரண்டு |
| 3. | மூன்று | 13. | பதின்மூன்று |
| 4. | நான்கு | 14. | பதினான்கு |
| 5. | ஐந்து | 15. | பதினைந்து |
| 6. | ஆறு | 16. | பதினாறு |
| 7. | ஏழு | 17. | பதினேழு |
| 8. | எட்டு | 18. | பதினெட்டு |
| 9. | ஒன்பது | 19. | பத்தொன்பது |
| 10. | பத்து | 20. | இருபது |

## மதிப்பீடு - 2

**02.** பின்வரும் கடிகார முகப்புகள் காட்டும் சரியான நேரத்தைக் குறிக்கும் சொல்லுடன் இணைக்குக.



ஆறு மணி

இரண்டு மணி

ஐந்து மணி

ஒன்பது மணி

எட்டு மணி

பதினொரு மணி

## செயற்பாட்டுப் பத்திரம் 11

தரப்பட்டுள்ள இலக்கங்களை ஒற்றை எண்கள் இரட்டை எண்கள் என வகைப்படுத்தி அட்டவணையில் எழுதுக.

3, 7, 12, 20, 4, 2, 9, 17,14, 19, 5, 8

| ஒற்றை எண்கள் | இரட்டை எண்கள் |
|---|---|
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |

## தேர்ச்சி: 7.0 சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை கருத்து விளங்கி முறைப்படி வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1**: சொற்களை விளங்கி வாசிப்பார்.

**செயற்பாடு :** இலக்கங்களை வாசிப்போம்.

**நேரம்** : 80 நிமிடங்கள் (2 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : பின்னிணைப்பு - 1
பின்னிணைப்பு - 2 (செயற்பாட்டுப் பத்திரம்)

### கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 7.1.1**

- பின்னிணைப்பு - 1 ஐக் காட்சிப்படுத்துங்கள்.
- அதிலுள்ள இலக்கங்களைச் சரியாக உச்சரித்து வாசியுங்கள். மாணவர்களையும் வாசிக்கச் செய்யுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

- சொற்களைத் தெளிவாக வாசித்தல்
- ஒற்றை எண்கள், இரட்டை எண்களை இனங்கண்டு வாசித்தல்
- நேரம்

(20 நிமி)

**படி 7.1.2**

- பின்னிணைப்பு 2 ஐ எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- எண்களின் பெயர்களைச் சரியான முறையில் உச்சரித்து வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்கள் அதனைச் செவிமடுத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அவற்றிலுள்ள ஒற்றை எண்களையும், இரட்டை எண்களையும் வேறுபடுத்தி வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களில் ஒருவர் இலக்கத்தைக் காட்டும்போது வேறொருவர் அந்த இலக்கத்தின் பெயரை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களிலுள்ள அனைவரையும் இவ்வாறு வாசிக்க வழிப்படுத்துங்கள்.

(40 நிமி)

**படி 7.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் வீதம் வகுப்பறைக்கு முன்னால் அழைத்து பின்னணைப்பு 2 இல் உள்ளவற்றை உரத்து வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- எழுமாற்றாக இலக்கங்களைக் காண்பித்து அவற்றின் பெயர்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனைய மாணவர்களையும் அவதானிக்கச் செய்யுங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- இலக்கங்களை (1-20) சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- ஒற்றை எண்களை, இரட்டை எண்களை உரிய உச்சரிப்புடன் வாசித்தல்.
- நேரத்தை அறிந்துக் கூறுதல்.


(20 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- ஒற்றை எண்களையும் இரட்டை எண்களையும் வாசிப்பார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் இலக்கங்களைப் பயன்படுத்துவார்.
- நேரத்தைக் கூறுவார்.

**பின்னிணைப்பு - 1**

1. பின்வரும் படங்களை அவதானித்து இலக்கங்களை வாசிப்போம்.

1. 


ஐந்து பூக்கள்
5

2. 

மூன்று மரங்கள்
3

3. 

எட்டு வீடுகள்
8

4. 

இரண்டு பென்சில்கள்
2

**பின்னிணைப்பு - 2 செயற்பாட்டுப் பத்திரம்**

01. இலக்கங்களை வாசியுங்கள்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | - | ஒன்று | 11 | - | பதினொன்று |
| 2 | - | இரண்டு | 12 | - | பன்னிரண்டு |
| 3 | - | மூன்று | 13 | - | பதின்மூன்று |
| 4 | - | நான்கு | 14 | - | பதினான்கு |
| 5 | - | ஐந்து | 15 | - | பதினைந்து |
| 6 | - | ஆறு | 16 | - | பதினாறு |
| 7 | - | ஏழு | 17 | - | பதினேழு |
| 8 | - | எட்டு | 18 | - | பதினெட்டு |
| 9 | - | ஒன்பது | 19 | - | பத்தொன்பது |
| 10 | - | பத்து | 20 | - | இருபது |

| |
|---|
| 1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19...... |
| ஒற்றை எண்கள் |

| |
|---|
| 2, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20...... |
| இரட்டை எண்கள் |


02. பின்வரும் கடிகார முகப்புக்கள் காட்டும் நேரத்தைக் கூறுங்கள்.

I




ஒன்பது மணி
9

II




ஆறு மணி
6

III




பத்து மணி
10

IV




ஏழு மணி
7

V



எட்டு மணி
8

VI



நான்கு மணி
4

தேர்ச்சி: 1.0 — சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.

தேர்ச்சி மட்டம் 1.1 — சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.

செயற்பாடு : ஒத்தொலிக்கும் சொற்களைக் கேட்டுச் சரியாக உச்சரிப்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு:

- பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரம்
- எழுதுதாள்
- எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 1.1.1**

- பின்னிணைப்பு 1 ஐக் காட்சிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு 1 இல் உள்ளவாறு சொற்களை உச்சரித்து வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களைத் தனித்தனியாக உச்சரிக்கும்படி கூறுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

| | |
|---|---|
| - | சொற்களை உச்சரிக்கும்போது கவனமாகக் கிரகித்தல். |
| - | உச்சரிக்கும் முறையை மனதில் பதித்தல். |
| - | எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளைக் கவனத்திற் கொள்ளல். |
| - | குறில், நெடில் எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை அவதானித்தல். |

**படி 1.1.2**

- மாணவர்களைக் குழுக்களாக அமரச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு 2 ஐ) வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் செயற்பாட்டில் ஈடுபட வையுங்கள்.
- குழுவிலுள்ள மாணவர்கள் அனைவரும் உச்சரிப்புப் பயிற்சியில் ஈடுபட வழிகாட்டுங்கள். (ஆசிரியரே சொற்களை உச்சரித்துக் காட்டலாம்)
- மாணவர்கள் இடர்ப்படும் இடங்களை அறிந்து தெளிவுபடுத்த உதவுங்கள்.

**படி 1.1.3**

- கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப்பத்திரத்தை குழுத்தலைவர்கள் முன்வைக்கத் தூண்டுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை அழைத்துச் செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள சொற்களை உச்சரிக்க வையுங்கள்.
- மாணவர்கள் தமது கருத்துக்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலை ஒருவர் பாட ஏனைய மாணவர்களையும் சேர்ந்து பாடச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

**அ. ஒத்தொலிக்கும் சொற்கள்**

| | | |
|---|---|---|
| கரம் | வரம் | தரம் |
| கடம் | வடம் | படம் |
| பலம் | கலம் | வலம் |
| குணம் | பணம் | மணம் |
| மனம் | சினம் | வனம் |
| மாலை | பாலை | சீலை |
| பாரம் | வாரம் | காரம் |
| நாளம் | தாளம் | மேளம் |
| பாலம் | காலம் | ஏலம் |

**ஆ. குறில் - நெடில் கொண்ட சொற்கள்**

| | |
|---|---|
| கரம் | காரம் |
| மலை | மாலை |
| கலம் | காலம் |
| பலம் | பாலம் |
| வரம் | வாரம் |
| படு | பாடு |
| சிலை | சீலை |
| தளம் | தாளம் |
| மனம் | மானம் |

**இ.** - பாடலைப் பாடிக்காட்டுங்கள். பின்னர் பாட வழிகாட்டுங்கள்.

- பாடலில் வரும் குறில், நெடில் எழுத்துக்களின் வேறுபாடுகளை அறியும் வகையில் உச்சரித்துக்கூற வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- ஒத்தொலிக்கும் சொற்களை அறிந்து கூறுவார்.
- ஒத்தொலிக்கும் சொற்களைச் சரியாக உச்சரிப்பார்.
- குறில், நெடில் எழுத்துக்களின் ஒலிவேறுபாடுகளை அறிந்து உரியமுறையில் வெளிப்படுத்துவார்.
- பொருத்தமான சந்தர்ப்பத்தில் இச்சொற்களைப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு 1**

ஒத்தொலிக்கும் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அரம் | அறம் | வலம் | பழம் | கனம் |
| கரம் | முறம் | பலம் | முழம் | மனம் |
| மரம் | மறம் | தலம் | வேழம் | வனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம் | தாளம் | நாடு | காலை | பாணம் |
| காரம் | கோளம் | காடு | மாலை | கோணம் |
| வாரம் | சோளம் | மாடு | சாலை | சாணம் |

**பின்னிணைப்பு - 2 செயற்பாட்டுப் பத்திரம்**

அ. தரப்பட்டுள்ள சொற்களில்

1. ஒத்தொலிக்கும் சொற்களைக் கண்டறிந்து உச்சரியுங்கள்.
2. குறில், நெடில் எழுத்துக்கள் கொண்ட சொற்களைக் கண்டறிந்து உச்சரியுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கரம் | கோளம் | நாளம் | மலை | தளம் |
| மாலை | வடம் | ஓரம் | காடு | கலம் |
| குடம் | தரம் | வனம் | வரம் | காரம் |
| வீரம் | பாலை | பதம் | சீலை | மணம் |
| காலம் | பலம் | கடு | தாளம் | சினம் |
| பாரம் | வாரம் | சிலை | பாலம் | மானம் |
| குணம் | மனம் | பணம் | படம் | வலம் |

**ஆ. பின்வரும் பாடலைத் தெளிவாக உச்சரித்துப் பாடுங்கள்.**

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டு
பருகத் தந்த அம்மா

புழுதி துடைத்து நீரும் ஆட்டி
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

**தேர்ச்சி: 7.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை கருத்து விளங்கி முறைப்படி வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1**: சொற்களை விளங்கி வாசிப்பார்.

**செயற்பாடு :** ஒத்தொலிக்கும் சொற்களை விளங்கி சரியாக வாசிப்போம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : பின்னிணைப்பு - 1 செயற்பாட்டுப் பத்திரம் - 1
எழுதுதாள்
எழுது கருவி

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.1.2**

- பின்வரும் ஒத்தொலிக்கும் சொற்கூட்டங்களை காட்சிப்படுத்துங்கள்.

I

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மணம் | மனம் | கலை | அழகு | சுளகு | அறம் |
| பணம் | வனம் | மலை | பழகு | மிளகு | முறம் |

II

| | | | | |
|---|---|---|---|---|
| பாணம் | மானம் | காலை | நாடு | காரம் |
| சாணம் | வானம் | மாலை | காடு | வாரம் |

- மேற்கூறப்பட்ட சொற்களை வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களை தனித்தனியாக வாசிக்கும்படி கூறுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

சொற்களை வாசிக்கும்போது உச்சரிப்பினை அவதானித்தல்.
உச்சரிப்பு முறைகளை மனதில் பதித்தல்.
எழுத்துக்களின் ஒலிவேறுபாடுகளையும் ஒத்த தன்மைகளையும் கவனத்தில் கொள்ளல்.
உதாரணம்: மனம் வனம்
மனம் மானம்
குறில், நெடில் எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை அறிந்து வாசித்தல்.

**படி 1.1.2**

- மாணவர்களை குழுக்களாக அமரச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரம் 1 ஐ வழங்குங்கள்.
- குழுவிலுள்ள மாணவர்கள் அனைவரும் வாசிப்புப் பயிற்சியில் ஈடுபட வழிகாட்டுங்கள். (ஆசிரியரே சொற்களை வாசித்துக் காட்டலாம்.)
- மாணவர்கள் இடர்ப்படும் இடங்களை அறிந்து தெளிவுபடுத்த உதவுங்கள்.

படி 1.1.3

- கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள சொற்களை மாணவ குழுத்தலைவர்கள் உச்சரித்து வாசிக்கத் தூண்டுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து சொற்களை வாசிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களின் உச்சரிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- சில சொற்களின் ஒலி ஒத்திருக்கும்

சாதம், மாதம், பாதம்
சுரம், உரம்
தினம், வனம்
துறவு, உறவு
முழம், பழம்
குளம், வளம்
தூரம், வாரம்
காலம், பாலம்
உலகம், கலகம்
குணம், பணம்

- சில சொற்களின் ஒலி வேறுபட்டிருக்கும்

குளம், குலம்
கலகம், கழகம்
பழம், பலம்
பாலம், பாளம்
கலம், களம்
உறவு, துரவு

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- ஒத்தொலிக்கும் சொற்களையும் ஒலிவேறுபாடுள்ள சொற்களையும் இனங்காண்பார்.
- ஒலி வேறுபாடுகளுக்கமைய சொற்களைத் தெளிவாக உச்சரிப்பார்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் இச்சொற்களை வாசிப்பார்.

**செயற்பாட்டுப் பத்திரம் - 1**

எழுத்துக்களின் ஒலிப்பை அவதானித்து வாசியுங்கள்.

சாதம் தூரம் பாதம்
முழம் உலகம்
சுரம் காலம் உரம்
குளம் வாரம்
தினம் வனம் குலம்
பாலம் பணம் கழகம்
துறவு பழம் உறவு
கரகம் வரவு
குணம் பலம் கலம்
களம்

**தேர்ச்சி: 1.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.**

தேர்ச்சி மட்டம் 1.1 சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.

செயற்பாடு : தன்மை ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்களைக் கேட்டு முறையாக உச்சரித்துக் கூறுவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு:

- தன்மை ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்களின் பட்டியல் (செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1)
- எழுதுதாள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 1.1.1**

- பின்வரும் அட்டவணையைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| நான் | படித்தேன்<br>சாப்பிட்டேன் | படிக்கிறேன்<br>சாப்பிடுகிறேன் | படிப்பேன்<br>சாப்பிடுவேன் |
| நாம்<br>நாங்கள் | படித்தோம்<br>சாப்பிட்டோம் | படிக்கிறோம்<br>சாப்பிடுகிறோம் | படிப்போம்<br>சாப்பிடுவோம் |

- மாணவன் ஒருவனை அழைத்து உரத்து வாசிக்கும்படி கூறுங்கள்.
- ஏனைய மாணவர்களை அவதானமாகக் கேட்டுத் திருப்பிக் கூறும்படி கூறுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

| | |
|---|---|
| - | சொற்களை உச்சரிக்கும்போது, மாணவர்கள் அவதானமாகக் கேட்டல். |
| - | கேட்கும்போது உச்சரிப்பு வேறுபாடுகளை உணர்தல். |
| - | ஒலி வேறுபாடுகளை உணர்ந்து, உச்சரித்தல். |
| - | அவற்றை மீண்டும் மீண்டும் கூறும் பயிற்சியில் ஈடுபடல். |

(10 நிமிடம்)

படி 1.1.2

- பின்னிணைப்பிலுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள சொற்களை முறைப்படி உச்சரித்து வாசியுங்கள்.
- ஒவ்வொரு சொல்லையும் முறையாக உச்சரித்து வாசிக்க, மாணவர்கள் திருப்பிக் கூறும் பயிற்சியில் ஈடுபட அறிவுறுத்துங்கள்.
- பின்னர் அப்பயிற்சியில் மாணவர்கள் இருவர் இருவராக இணைந்து செயற்பட வழிகாட்டுங்கள்.
- பின்னர் குழுக்களாக மாணவர்களை இணைய விடுங்கள்.
- குழுவில் உள்ள ஒவ்வொருவரும் மாறி மாறி வாசிக்க, ஏனையோர் கேட்டுத் திருப்பிக் கூற வழிகாட்டுங்கள்.
- குழுக்களிடையே சென்று மாணவர்களுடன் கலந்துரையாடி வழிகாட்டுங்கள்.

(30 நிமிடம்)

படி 1.1.3

- ஒவ்வொரு குழுவில் இருந்தும் குழுத் தலைவரை அழைத்து பத்துச் சொற்களை முறையாக உச்சரித்து வாசிக்கும்படி கூறுங்கள்.
- குழுவிலுள்ள ஏனையோர் அவற்றைத் திருப்பிக் கூற வழிப்படுத்துங்கள்.
- இவ்விதம் எல்லாக் குழுவினரையும் வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:

- குழுத்தலைவர் சொற்களைக் கூறும்போது மிகவும் அவதானத்துடன் கேட்டல்.
- அச்சொற்களை முறையாக உச்சரித்துக் கூறல்.
- எழுத்துக்களின் உச்சரிப்பு
- சொற்களின் அழுத்தம்
- ஏனையோருக்கும் கேட்கும் விதத்தில் கூறுதல்
- தெளிவாகக் கூறுதல்
- ஒலிவேறுபாடுகளை உணர்ந்து உச்சரித்தல்

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தன்மை ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்களை அவதானமாகக் கேட்டுக் கூறுவார்.
- அச்சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.
- அச்சொற்களைத் தாமாக வாசிப்பார்.
- இவ்வாற்றலைப் பயன்படுத்தி வேறு சந்தர்ப்பங்களிலும் இச்சொற்களைக் கவனமாகக் கேட்டு, முறையாக உச்சரித்துக் கூறுவார்.

**பின்னிணைப்பு 1 செயற்பாட்டுப் பத்திரம்**

**அ. தன்மை ஒருமைச் சொற்கள்**

- பின்வரும் சொற்களை ஆசிரியர் முறையாக உச்சரித்து வாசிக்க, அவதானமாகக் கேட்டு நீங்களும் அவ்வாறே உச்சரித்துக் கூறுங்கள்.

| | | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| நான் | 1. | விளையாடினேன் | விளையாடுகிறேன் | விளையாடுவேன் |
| | 2. | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| | 3. | ஆடினேன் | ஆடுகிறேன் | ஆடுவேன் |
| | 4. | ஓடினேன் | ஓடுகிறேன் | ஓடுவேன் |
| | 5. | குதித்தேன் | குதிக்கிறேன் | குதிப்பேன் |
| | 6. | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| | 7. | ஏறினேன் | ஏறுகிறேன் | ஏறுவேன் |
| | 8. | இறங்கினேன் | இறங்குகின்றேன் | இறங்குவேன் |
| | 9. | வாங்கினேன் | வாங்குகிறேன் | வாங்குவேன் |
| | 10. | சென்றேன் | செல்கிறேன் | செல்வேன் |

**ஆ. தன்மைப் பன்மை வினைச்சொற்கள்**

- பின்வரும் சொற்களை ஆசிரியர் முறையாக உச்சரித்து வாசிக்க, அவதானமாகக் கேட்டு நீங்களும் அவ்வாறே உச்சரித்துக் கூறுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| நாம் நாங்கள் | 1. | விளையாடினோம் | விளையாடுகிறோம் | விளையாடுவோம் |
| | 2. | பாடினோம் | பாடுகிறோம் | பாடுவோம் |
| | 3. | ஆடினோம் | ஆடுகிறோம் | ஆடுவோம் |
| | 4. | ஓடினோம் | ஓடுகிறோம் | ஓடுவோம் |
| | 5. | குதித்தோம் | குதிக்கிறோம் | குதிப்போம் |
| | 6. | நீந்தினோம் | நீந்துகிறோம் | நீந்துவோம் |
| | 7. | ஏறினோம் | ஏறுகிறோம் | ஏறுவோம் |
| | 8. | இறங்கினோம் | இறங்குகிறோம் | இறங்குவோம் |
| | 9. | வாங்கினோம் | வாங்குகிறோம் | வாங்குவோம் |
| | 10. | சென்றோம் | செல்கிறோம் | செல்வோம் |

**தேர்ச்சி: 7.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை கருத்து விளங்கி முறைப்படி வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1**: சொற்களை விளங்கி வாசிப்பார்.

**செயற்பாடு :** தன்மை ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்களை விளங்கி வாசிப்போம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : பின்னிணைப்பு - 1
(தன்மை ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்கள்)
பின்னிணைப்பு - 2 (செயற்பாட்டுப் பத்திரம்)
எழுதுதாள்கள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1 7.1.1**

- பின்வரும் சொற்களைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| நான் → | சிரித்தேன் | சிரிக்கிறேன் | சிரிப்பேன் |
| | எழுதினேன் | எழுதுகிறேன் | எழுதுவேன் |
| நாம் / நாங்கள் → | சிரித்தோம் | சிரிக்கிறோம் | சிரிப்போம் |
| | எழுதினோம் | எழுதுகிறோம் | எழுதுவோம் |

- முதலில் சொற்களை முறையாக உச்சரித்து உரத்து வாசியுங்கள்.
- மாணவர்கள் அவதானமாகக் கேட்டுத் திருப்பி முறையாக உச்சரித்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- வினைச் சொற்களை விளங்கி வாசித்தல்.
- எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை உணர்ந்து முறையாக உச்சரித்தல்.
  உதாரணம்:- சிரித்தேன், சிரிக்கிறேன், சிரிப்பேன்.
- சொற்களை மீண்டும் மீண்டும் முறையாக உச்சரித்து வாசிக்கும் பயிற்சியில் ஈடுபடல்.

**குறிப்பு**
நான் : தன்மை ஒருமையைக் குறிக்கும் சொல்
நாம், நாங்கள்: தன்மை பன்மையைக் குறிக்கும் சொற்கள்

(10 நிமி)

**படி 2 7.1.2**

- பின்னிணைப்பு 1 இல் உள்ள (தன்மை ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்கள்) சொற்களின் பட்டியலை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- மாணவர்களை அவதானமாகக் கவனிக்கும்படி கூறிவிட்டு, அச்சொற்களை முறையாக உச்சரித்து வாசியுங்கள்.
- பின்னர், மாணவர்கள் இருவர் இருவராக இணைந்து முறையாக உச்சரித்து வாசித்துப் பழக வழிகாட்டுங்கள்.
- அதன் பின்னர் குழுவாக இணைந்து, குழுவிலுள்ள அனைவரும் முறையாக உச்சரித்து வாசித்து பழக வழிகாட்டுங்கள்.
- குழுக்களிடையே சென்று மாணவர்களுடன் கலந்துரையாடி சரியாக உச்சரிக்க நெறிப்படுத்துங்கள்.
- பின்னர், பின்னிணைப்பு 2 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கி, அதில் கொடுக்கப்பட்டுள்ள சொற்ளை வாசித்துப் பழகும் பயிற்சியில் தனித்தனியாக ஈடுபடச் செய்யுங்கள்.

(30 நிமி)

**படி 3 7.1.3**

- மாணவர்களை எழுமாறாக அழைத்து, சொற்களை வாசிக்க நெறிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- எழுத்துக்களின் ஒலிகளை அனுசரித்து வாசித்தல்.
- எல்லோரும் கேட்கக்கூடியதாக வாசித்தல்.
- தரப்பட்ட வினைச் சொற்களின் அமைப்பை அறிந்து வாசித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- எழுத்துக்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு உச்சரிக்கப்பட வேண்டுமென்பதை விளக்குவார்.
- எழுத்துக்களின் ஒலிவேறுபாடுகளை அனுசரித்து வாசிப்பார்.
- கேட்போர் எல்லோருக்கும் விளங்கும் வகையில் வாசிப்பார்.
- இவ்வாற்றலைப் பயன்படுத்தி வேறு சந்தர்ப்பங்களில் சரியாக உச்சரித்து வாசிப்பார்.

பின்னிணைப்பு - 1

(அ) தன்மை ஒருமையில் வரும் வினைச் சொற்கள்

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நான் → | ஆடினேன் | ஆடுகிறேன் | ஆடுவேன் |
| நான் → | துள்ளினேன் | துள்ளுகிறேன் | துள்ளுவேன் |
| நான் → | வாசித்தேன் | வாசிக்கிறேன் | வாசிப்பேன் |

(ஆ) தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்கள்

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நாம் / நாங்கள் | ஆடினோம் | ஆடுகிறோம் | ஆடுவோம் |
| | துள்ளினோம் | துள்ளுகிறோம் | துள்ளுவோம் |
| | வாசித்தோம் | வாசிக்கிறோம் | வாசிப்போம் |

**குறிப்பு:**

- முதலில் இச்சொற்களை உரத்து வாசியுங்கள்.
- மாணவர்கள் அவதானமாகக் கேட்க வழிப்படுத்துங்கள்.
- பின்னர், மாணவர் இருவர் இருவராக இணைந்து வாசித்துப் பயிற்சி பெற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுவாக இணைந்தும் வாசித்துப் பயிற்சி பெற சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**பின்னிணைப்பு - 2**
**செயற்பாட்டுப் பத்திரம்**

தனியாள் செயற்பாடு

(அ) பின்வரும் சொற்களை முறையாக உச்சரித்து வாசித்துப் பழகுங்கள்.

(ஆ) ஆசிரியர்கூறும்பொழுது முறையாக உச்சரித்து வாசியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | நினைத்தேன் | நினைக்கிறேன் | நினைப்பேன் |
| | பார்த்தேன் | பார்க்கிறேன் | பார்ப்பேன் |
| நான் | அழுதேன் | அழுகிறேன் | அழுவேன் |
| | வந்தேன் | வருகிறேன் | வருவேன் |
| | ஓடினேன் | ஓடுகிறேன் | ஓடுவேன் |

| | | | |
|---|---|---|---|
| | நினைத்தோம் | நினைக்கிறோம் | நினைப்போம் |
| | பார்த்தோம் | பார்க்கிறோம் | பார்ப்போம் |
| நாங்கள் | அழுதோம் | அழுகிறோம் | அழுவோம் |
| | வந்தோம் | வருகிறோம் | வருவோம் |
| | ஓடினோம் | ஓடுகிறோம் | ஓடுவோம் |

**தேர்ச்சி:11.0** **கருத்துக்களை முன்வைப்பதற்காக சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை எழுதுவார்**

**தேர்ச்சி மட்டம் 11.3**: நாளாந்த தேவைகளுக்குப் பிரயோகிக்கும் சொற்களை எழுதுவார்.

**செயற்பாடு:** தன்மை ஒருமை, தன்மைப் பன்மையுடன்கூடிய இறந்தகால வினைச் சொற்களை எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு - 2
எழுது தாள்கள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 11.3.1**

- பின்வரும் சொற்களை அட்டையில் பெரிய எழுத்துக்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| நான் ஓடினேன் | நாங்கள் ஓடினோம் |
| நான் படித்தேன் | நாங்கள் படித்தோம் |

- மாணவர்களை அவதானமாகக் கவனிக்கும்படி கூறி, அட்டையிலுள்ள வாக்கியங்களைச் சரியாக உச்சரித்து உரத்து வாசியுங்கள்.
- மாணவர்கள் அவ்வாக்கியங்களைப் பலமுறை சரியாக உச்சரித்து வாசிக்கும்படி வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

> - இறந்தகால வினைச் சொற்கள் செயல் நடந்துமுடிந்ததை உணர்த்தல்.
> - தன்மை ஒருமை வினைச் சொற்கள் (இறந்தகாலம்) "ஏன்" என முடியும்.
> - தன்மைப் பன்மை வினைச் சொற்கள் (இறந்த காலம்) "ஓம்" என முடியும்.
> - நான் தன்மை ஒருமைச் சொல்
> - நாம் / நாங்கள் தன்மைப் பன்மைச் சொல்

**படி 11.3.2**

- மாணவர்களைக் குழுநிலையில் அமரச் செய்யுங்கள்.
- பின்னிணைப்பு 1 ஐக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழுத்தலைவர் சொற்களை சரியாக உச்சரித்து வாசிக்க, ஏனையோர் திரும்ப சரியாக உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.
- தன்மை ஒருமை பன்மை இறந்தகால வினைச் சொற்கள் அமைந்துள்ள விதத்தினை அவதானித்துக் கலந்துரையாட நெறிப்படுத்துங்கள்.
- குழுக்களிடையே சென்று கலந்துரையாடி வழிப்படுத்துங்கள்.
- பின்னர், மாணவர்கள் வகுப்பு நிலையில் இருக்க வழிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு 2 - செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கிச் செயற்பட வழிப்படுத்துங்கள்.

**படி 11.3.3**

- மாணவர்களை எழுமாற்றாக அழைத்து விடைகளை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

தன்மை, பன்மை வினைச் சொற்கள் அமைந்துவரும் முறையை இலகுவான முறையில் விளக்குதல்

(அ)
1. நாம் / நாங்கள் ஆடினோம்
2. நான் குதித்தேன்
3. நாம் / நாங்கள் நீந்தினோம்
4. நான் ஏறினேன்
5. நாம் / நாங்கள் இறங்கினோம்

(ஆ)
1. நான் பாடசாலைக்குச் சென்றேன்
2. நான் நண்பனைப் பார்த்துச் சிரித்தேன்
3. நாம் / நாங்கள் சினிமாப் படம் பார்த்தோம்
4. நாம் / நாங்கள் முகம் கழுவினோம்
5. நான் தம்பியைத் தூக்கினேன்

(இ)
1. நாம் / நாங்கள் அடித்தோம்
2. நான் கழுவினேன்
3. நான் வாங்கினேன்
4. நாம் / நாங்கள் வாசித்தோம்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- தன்மை ஒருமை, தன்மைப் பன்மை இறந்தகால வினைச் சொற்களை அறிந்து கூறுவார்.
- அச்சொற்களை முறையாக எழுதுவார்.
- பொருத்தமான இறந்தகால வினைச்சொற்களை இடைவெளிகளில் வைத்து எழுதுவார்.
- வேறு சந்தர்ப்பங்களில் இறந்தகால வினைச் சொற்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1 (குழுச் செயற்பாடு)**

- குழுத்தலைவர் உரத்து வாசிக்க, ஏனையோர் திரும்ப உச்சரித்துக் கூறுங்கள்.
- தன்மை ஒருமை, தன்மைப் பன்மை வினைச் சொற்கள் அமைந்துள்ள விதத்தை அவதானியுங்கள்.

| தன்மை ஒருமை இறந்தகால வினைச் சொற்கள் | தன்மைப் பன்மை இறந்தகால வினைச் சொற்கள் |
|---|---|
| 1. நான் விளையாடினேன் | நாம் / நாங்கள் விளையாடினோம் |
| 2. நான் பாடினேன் | நாம் / நாங்கள் பாடினோம் |
| 3. நான் படித்தேன் | நாம் / நாங்கள் படித்தோம் |
| 4. நான் எழுதினேன் | நாம் / நாங்கள் எழுதினோம் |
| 5. நான் ஓடினேன் | நாம் / நாங்கள் ஓடினோம் |
| 6. நான் வணங்கினேன் | நாம் / நாங்கள் வணங்கினோம் |

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப் பத்திரம்

- தனித்தனியாக விடை எழுதுங்கள்.

(அ) பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான இறந்தகால வினைச் சொற்களை எழுதுங்கள்.

| **தன்மை ஒருமை இறந்தகால வினைச் சொற்கள்** | **தன்மைப் பன்மை இறந்தகால வினைச் சொற்கள்** |
|---|---|
| 1. நான் ஆடினேன் | நாம் / நாங்கள் .................................... |
| 2. நான் .................................... | நாம் / நாங்கள் குதித்தோம் |
| 3. நான் நீந்தினேன் | நாம் / நாங்கள் .................................... |
| 4. நான் .................................... | நாம் / நாங்கள் ஏறினோம் |
| 5. நான் இறங்கினேன் | நாம் / நாங்கள் .................................... |

(ஆ) இடைவெளிகளுக்குப் பொருத்தமான இறந்தகால வினைச்சொற்களை அடைப்புக்குள் உள்ள சொற்களில் இருந்து தெரிவுசெய்து எழுதுங்கள்.

(சிரித்தேன் / சென்றேன் / கழுவினோம் / தூக்கினேன் / பார்த்தோம்)

1. நான் பாடசாலைக்குச் .........................................................................................
2. நான் நண்பனைப் பார்த்துச் ..............................................................................
3. நாங்கள் சினிமாப்படம் .......................................................................................
4. நாங்கள் முகம் ......................................................................................................
5. நான் தம்பியைத் ..................................................................................................

(இ) பின்வரும் இறந்தகால வினைச்சொற்களுக்குப் பொருத்தமான தன்மை ஒருமை, தன்மைப் பன்மைப் பெயர்ச் சொற்களை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | ...................................................... | அடித்தோம் |
| 2. | ...................................................... | கழுவினேன் |
| 3. | ...................................................... | வாங்கினேன் |
| 4. | ...................................................... | வாசித்தோம் |

**தேர்ச்சி: 9.0** **பாடல்களைக் கருத்துணர்ந்து வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1**: பாடல்களைக் கருத்துணர்ந்து பொருள் புலப்பட வாசிப்பார்.

**செயற்பாடு :** "பாடி ஆடுவோம்" என்ற பாடலைக் கருத்துணர்ந்து பொருள் புலப்படப் பாடுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : பின்னிணைப்பு - செயற்பாட்டுப் பத்திரம்
("பாடி ஆடுவோம்" என்ற பாடல்)
ஒலிப்பதிவுக் கருவி

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 9.1.1**

- பின்வரும் பாடலைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

**பூனை**

சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை

வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை

பாலைக் குடிக்கப் பார்க்கும்
பதுங்கி இருக்கும் பரணில்
வாலைப் பற்றி இழுத்தால்
வளைந்து கையைக் கடிக்கும் (வித்துவான் க.வேந்தனார்)

- பாடலைக் கருத்துணர்ந்து பொருள் புலப்பட ஓசையோடு பாடுங்கள்.
- மாணவர்களையும் ஓசையோடு பாடும்படி வழிப்படுத்துங்கள்.
- பின்வருவன பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ▪ பாடலைப் பாடும்பொழுது கருத்துணர்ந்து பாடுதல். |
| ▪ கேட்போருக்குப் பொருள் விளங்கும் வகையில் பாடுதல். |
| ▪ ஓசையோடு பாடுதல். |
| ▪ எழுத்துக்களின் ஒலிகளை முறையாக உச்சரித்துப் பாடுதல். |
| ▪ பாடலை இரசனையோடு பாடுதல். |

(10 நிமி)

**படி 9.1.2**

- பின்னிணைப்பிலுள்ள "பாடி ஆடுவோம்" என்ற பாடல் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- பாடலை ஒலிப்பதிவு செய்து ஒலிக்கச் செய்யுங்கள்.
- முடியாதவிடத்து, பாடலைக் கருத்துணர்ந்து பொருள் புலப்பட ஓசையோடு பாடுங்கள்.
- பின்னர் மாணவர்களைக் குழுக்களாக இணையச் செய்யுங்கள்.
- மாணவர்களைக் குழுநிலையில் பாடலைக் கருத்துணர்ந்து பொருள் புலப்பட ஓசையோடு பாடிப் பழகும் பயற்சியில் ஈடுபடுத்துங்கள்.
- குழுக்களிடையே சென்று பாடலைக் கவனித்து வழிப்படுத்துங்கள்.
- முடியுமானால், மாணவர்கள் குழுவாகப் பாடும்போது ஒலிப்பதிவு செய்து கேட்கச் செய்யுங்கள்.

(30 நிமி)

**படி 9.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் எழுமாற்றாக மாணவர்களை அழைத்து, பாடலை ஓசையோடு பாடும்படி செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ▪ பாடலைக் கருத்துணர்ந்து ஓசையோடு பாடுதல். |
| ▪ பொருள் புலப்படப் பாடுதல். |
| ▪ எழுத்துக்களின் ஒலிகளை முறையாக உச்சரித்துப் பாடுதல். |
| ▪ பாடலை இரசனையுடன் பாடுதல். |

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடலைக் கருத்துணர்ந்து பாடுவார்.
- எழுத்துக்களின் ஒலி பேதங்களை முறையாக உச்சரித்துப் பாடுவார்.
- பாடலை இசையோடு பாடுவார்.
- பாடலை இரசனையுடன் பாடுவார்.
- இவ்வாற்றலை வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்திப் பாடலை இசையோடு பாடுவார்.

**பின்னிணைப்பு** **செயற்பாட்டுப்பத்திரம் - 1**

"பாடி ஆடுவோம்" என்ற பாடலைக் கருத்துணர்ந்து வாசிப்போம். பின்னர் பாடுவோம்.

**பாடி ஆடுவோம்**

மயிலைப் போல ஆடுவோம்
மகிழ்ந்து நாமும் பாடுவோம்
குயிலைப் போலக் கூவுவோம்
கூடிக் கூடி ஆடுவோம்

தவளை போல நாமுமே
தத்தித் தத்திச் செல்லுவோம்
முயலைப் போல நாமுமே
முன்னே பாய்ந்து ஓடுவோம்

ஆனை போல நாமுமே
அசைந்து அசைந்து செல்லுவோம்
குதிரை போல நாமுமே
குதித்துக் குதித்து ஓடுவோம்

மானைப் போல ஓடுவோம்
மகிழ்ந்து நாமும் பாடுவோம்
பாடிப் பாடி ஆடுவோம்
பாப்பாப் பாட்டு பாடுவோம்

**தேர்ச்சி:11.0** **கருத்துக்களை முன்வைப்பதற்காக சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை எழுதுவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.4**: சொற்றொடர்களை உறுப்பமையவும் முறையாகவும் எழுதுவார்.

**செயற்பாடு:** பெயர்ச்சொற்களோடு அடைமொழிகளைச் சேர்த்து முறையாகவும் உறுப்பமையவும் எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
எழுது தாள்
எழுது கருவி

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 11.4.1**

- பின்வரும் சொற்களையும் வாக்கியங்களையும் காட்சிப்படுத்துங்கள்.

உதாரணம் 1

| |
|---|
| பாடம், கண், புத்தகம், மொழி, கால், முத்திரை, ஆசிரியர் |

உதாரணம் 2

| |
|---|
| மழை பெய்தது.<br>ஆசிரியர் வந்தார்.<br>முத்திரை வாங்கி வா. |

- மேற்கூறப்பட்ட சொற்களையும் வாக்கியங்களையும் உறுப்பமையவும் முறையாகவும் எழுதிக்காட்டுங்கள்.
- மாணவர்களைத் தனித்தனியாக உறுப்பமைய எழுதும்படி கூறுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து சொற்களை உறுப்பமைய எழுதுதல்.

  உதாரணம்:- பாடம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| । | ட | ப | । | Γ | ா | । | ட | । | ட | ம | ம் |

- எழுத்துக்கள் சமச்சீராக எழுதப்படல்.
- ஒவ்வொரு எழுத்துக்கும் இடையேயுள்ள இடைவெளிகளை அவதானித்தல்.
- வாக்கியங்களில் சொற்களுக்கிடையேயுள்ள இடைவெளிகளை அவதானித்து முறையாக எழுதுதல்.
- எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளைக் கவனத்திற்கொண்டு உறுப்பமைய எழுதுதல். எழுத்துக்களை எழுத ஆரம்பித்து முடிக்கும் முறை அனுசரிக்கப்படல்.

படி 11.4.2

- வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் செயற்பாட்டுப் பத்திரம் I ஐ வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் I ஐ மாணவர்கள் தனித்தனியாக எழுதும்படி வழிகாட்டுங்கள்.
- எழுதும்போது இடர்படும் மாணவர்களுக்கு எழுத்துக்களை எழுதிக்காட்டி வழிப்படுத்துங்கள்.

படி 11.4.3

- எழுமாற்றாக சில மாணவர்களை அழைத்து கரும்பலகையில் உறுப்பமைய எழுதும்படி கூறுங்கள்.
- ஏனையோர் அவதானிப்பில் ஈடுபடத் தூண்டுங்கள்.

மாணவர்களின் எழுத்துத் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- எழுத்துக்களை உறுப்பமைய எழுதுதல்.
- எழுத்துப்பொறிமுறைகளைக் கவனத்திற்கொள்ளல்.
- சொற்களை விளங்குதல்.
- தனிச்சொல் ஒன்றை எழுதும்போது இடைவெளியின்றி எழுதுதல்.

உதாரணம்:-
1. தபாற்காரன் - தனிச்சொல்
   தபாற் காரன் - தவறு

2. சுவையான - தனிச்சொல்
   சுவை யான - தவறு

3. குழந்தைகள் - தனிச்சொல்
   குழந்தை கள் - தவறு

- எழுத்துக்களைப் பூரணமாக முறைப்படி எழுதுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- எழுத்துப்பொறிமுறைகளைப் பற்றி அறிந்து குறிப்பிடுவார்.
- பொறிமுறைகளை அனுசரித்து எழுத்துக்களை உறுப்பமைய எழுதும் திறனை வெளிப்படுத்துவார்.
- எழுத்துக்களைச் சரியாகவும் நேர்த்தியாகவும் எழுதும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவார்.
- தேவைப்படும் இடங்களில் சொற்களையும் வாக்கியங்களையும் எழுதுவார்.

**செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - I**

பின்வருவனவற்றைப் பார்த்து எழுதுங்கள்.

**I**

| **பெயர்ச்சொற்கள்** | **அடைமொழி இணைந்த பெயர்ச்சொற்கள்** |
|---|---|
| நாடு | அழகான நாடு |
| வானம் | நீல வானம் |
| காகம் | கரிய காகம் |
| குழந்தை | சின்னக்குழந்தை |
| பால் | சுவையான பால் |
| நிலா | வட்ட நிலா |
| பேனை | புதிய பேனை |
| மலை | பெரிய மலை |

பின்வருவனவற்றைப் பார்த்து எழுதுங்கள்.

**II**

| **ஒருமைச் சொற்கள்** | **பன்மைச் சொற்கள்** |
|---|---|
| நாடு | நாடுகள் |
| காகம் | காகங்கள் |
| குழந்தை | குழந்தைகள் |
| பேனை | பேனைகள் |
| மலை | மலைகள் |

**தேர்ச்சி: 1.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3** சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார்.

**செயற்பாடு :** வாக்கியங்களைச் சரியாக உச்சரித்துக் கூறுவோம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடு:**

- வெவ்வேறு நிறங்களிலான இரண்டு பந்துகள்
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1

**கற்றல் - கற்பித்தல்**

**படி 1.3.1**

- | |
  |---|
  | எனது பெயர் முகுந்தன் |
  | எனது வயது பதினொன்று. |

  இவ்விரு வசனங்களும் எழுதப்பட்ட அட்டையைக் கரும்பலகையில் காட்சிப்படுத்தி மாணவரை அவதானிக்கச் செய்யுங்கள்.
- மாணவரை அவதானிக்கச் செய்து இரண்டு வாக்கியங்களையும் வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர் சிலரை வாக்கியங்களை வாசிக்கச் செய்யுங்கள். (இவ்வாறு வாசிக்கும்போது தமது பெயரையும் வயதையும் கூறும்படி அறிவுறுத்துங்கள்.)
- மாணவரை வட்டமாக நிற்கச் செய்யுங்கள்.
- இரண்டு நிறப் பந்துகளைக் கையில் கொண்டு (சிவப்பு, நீலம்) ஒரு பந்தை எறிந்து யாரேனும் ஒருவரைப் பிடிக்கச் செய்யுங்கள். நீங்கள் எறிந்தது சிவப்புப் பந்தெனில் அதனை ஏந்திய மாணவர் உங்களிடம் பந்தைத் திரும்பவும் எறிந்து விட்டு, “எனது பெயர் ……….” (தனது பெயரைக் கூறுதல்.) எனவும் நீலம் எனில் “எனது வயது …..” (வயதைக் கூறுதல்) எனவும் கூறச் செய்யுங்கள்.
- மாணவர் சகலருக்கும் ஒரு வாக்கியத்தையேனும் கூறுவதற்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- மாணவர் வாக்கியங்களை உச்சரித்துக் கூறும்போது பின்வரும் விடயங்களை அவதானித்து வலியுறுத்துங்கள்.

| |
|---|
| - எழுத்துக்களின் ஒலி |
| - சொற்களின் உச்சரிப்புத் தெளிவு |
| - வெளிப்பாட்டுத் திறன் |

(20 நிமிடங்கள்)

படி 1.3.1.2

- மாணவர்களை ஐந்து குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள். (பின்னிணைப்பு - 1)
- குறித்த செயற்பாட்டுப் பத்திரத்தை ஒருவர் வாசிக்க குழுவிலுள்ள ஏனையோர் அவதானிக்கச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தில் உள்ள விவரங்களைத் தமக்குரியதாக மாற்றிக் கூறச் செய்யுங்கள்.
- குழுவில் தங்களுக்குள் இவ்வாறு ஒவ்வொருவரும் கூறிக்கொள்ளும்போது உதவி புரியுங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 1.3.1.2

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் இருவரேனும் வரக்கூடியதாக ஒவ்வொருவராக அழையுங்கள்.
- அழைக்கப்பட்டவர் தன்னைப் பற்றிக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரால் கூறப்பட்ட விடயங்களே விடைகளாக வரத்தக்கவாறு வினாக்களைக் கேளுங்கள்.
    - உங்கள் அப்பாவின் பெயர் என்ன?
    - உங்கள் அம்மாவின் பெயர் என்ன?
    - நீங்கள் வசிக்கும் ஊர் எது?
    - உங்கள் வயது என்ன?
- முன்னர் அழைக்கப்படாத மாணவரிடம் பரவலாக இவ்வினாக்களைக் கேளுங்கள்.
- மாணவர் விடைகூறும்போது சரியாக உச்சரிப்பதற்கும் தெளிவாகப் பேசுவதற்கும் உதவி புரியுங்கள்.

| |
|---|
| - பேசும்போதும் விடை கூறும்போதும் தெளிவு இன்றியமையாதது. |
| - உச்சரிப்புத் தெளிவு |
| - வெளிப்பாட்டுத் திறன் |
| - நம்பிக்கையுடன் பதில் கூறுதல் |

(20 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சொற்களைத் தெளிவாக உச்சரிப்பார்.
- சொற்களுக்கிடையில் உரிய இடைவெளிவிட்டுப் பேசுவார்.
- தன்னம்பிக்கையுடன் தெளிவாகப் பேசுவார்.

**செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1**

தெளிவாக உச்சரித்துக் கூறுங்கள்.

| |
|---|
| எனது பெயர் முகுந்தன். |
| எனது வயது பதினொன்று. |
| எனது அப்பாவின் பெயர் விமலன். |
| எனது அம்மாவின் பெயர் சுமதி. |
| நான் வசிக்கும் ஊர் வத்தளை. |

**தேர்ச்சி: 7.0** **சொற்கள், சொற்றொடர்கள் வாக்கியங்களை கருத்து விளங்கி முறைப்படி வாசிப்பார்.**

**தேர்ச்சி அலகு 7.3**: வாக்கியங்களைப் பொருத்தமுற வாசிப்பார்.

**செயற்பாடு :** வாக்கியங்களைப் பொருத்தமுற வாசிப்போம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் - 1
எழுதுதாள்கள்
எழுதுகருவி

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 7.3.1**

- பின்னிணைப்பு 1 இல் உள்ள வாக்கியங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றைப் பொருத்தமுற வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களை தனித்தனியாக வாசிக்கும்படி கூறுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

- வாக்கியங்களை ஆசிரியர் வாசிக்கும்போது மாணவர் அவதானமாகக் கேட்டல்.
- வாக்கியக் கூறுகளை கவனத்திற்கொள்ளல்.
- சொற்களைப் பொருத்தமாக உச்சரித்தல்.
- வாக்கியங்களைத் தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல்.

(20 நிமிடம்)

**படி 7.3.2**

- மாணவர்களை நான்கு குழுக்களாக அமரச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரம் I ஐ வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் செயற்பாட்டில் ஈடுபட வையுங்கள்.
- குழுவிலுள்ள மாணவர்கள் அனைவரும் வாசிப்புப் பயிற்சியில் ஈடுபட வழிகாட்டுங்கள். (ஆசிரியரே வாக்கியங்களை வாசித்துக் காட்டலாம்.)
- மாணவர்கள் இடர்ப்படும் இடங்களை அறிந்து உதவுங்கள்.

(40 நிமிடம்)

**படி 7.3.3**

- கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப் பத்திரம் 1 ஐ மாணவ குழுத்தலைவர்கள் வாசிக்கச் செய்யுங்கள்.
- ஏனையோர் அவதானித்துக் கேட்கத் தூண்டுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை அழைத்து செயற்பாட்டுப் பத்திரம் 1 இலுள்ள வாக்கியங்களை வாசிக்கச் செய்யுங்கள்.
- வாக்கியங்களில் இடம்பெறும் சொற்களின் உச்சரிப்புத் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- வாக்கியங்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- வாக்கியங்களின் கூறுகளை விளங்குதல்.
- வாக்கியங்களைப் பூரணமாக ஏற்ற வேகத்துடன் வாசித்தல்.

(20 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சொற்களின் பொருள் விளங்கி அவற்றைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பார்.
- சரியாக உச்சரித்து வாசிக்க வேண்டுமென்ற மனப்பாங்கை உடையோராவர்.
- தேவைப்படும் இடங்களில் வாக்கியங்களை வாசிக்க முயற்சிப்பார்.

**பின்னிணைப்பு - 1**

1. நான் தினமும் பாடசாலை செல்வேன்.
2. எமது நாடு வளங்கள் நிறைந்தது.
3. நல்ல நண்பன் ஆபத்தில் உதவுவான்.
4. சுவையான பால் பூரண உணவாகும்.
5. வேகமாக ஓடிய கார் பெரிய மரத்துடன் மோதியது.

**செயற்பாட்டுப் பத்திரம் 1**

தரப்பட்டுள்ள வாக்கியங்களை வாசிப்போம்.

1. சிறுமி பாடினாள்.
2. கிளிகள் பறந்தன.
3. சுத்தம் சுகம் தரும்.
4. மாணவர்கள் மழையில் நனைந்தார்கள்.
5. நீலவானம் அழகாகக் காட்சியளித்தது.
6. மாமரம் பூத்துக் குலுங்கியது.
7. உழவர்கள் வயலில் அறுவடை செய்தார்கள்.

**தேர்ச்சி:11.0** **கருத்துக்களை முன்வைப்பதற்காக சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை எழுதுவார்**

**தேர்ச்சி மட்டம் 11.5**: வாக்கியங்களை உறுப்பமையவும், முறையாகவும் எழுதுவார்.

**செயற்பாடு:** வாக்கியங்களை முறையாகவும், உறுப்பமையவும் எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : காட்சிப் படங்கள்
வாக்கிய அட்டைகள்
எழுது தாள்கள்
பின்னிணைப்பு - 1
பின்னிணைப்பு - 2
பின்னிணைப்பு - 3

**கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 11.5.1**

- பின்னிணைப்பு 1 இனை மாணவர் எல்லோருக்கும் காட்சிப்படுத்துங்கள்.
- படங்களுக்குப் பொருத்தமாகத் தரப்பட்டுள்ள வாக்கியங்களை எழுத வழிகாட்டுங்கள்.
- வாக்கியங்கள் தொடர்பாகப் பின்வரும் வினாக்களை வினாவி விடை எழுதுமாறு கூறுங்கள்.
  சூரியன் எப்பொழுது உதிக்கும்?
  தாமரைப் பூவின் நிறம் என்ன?

- வாக்கியங்களை எழுதும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களை கலந்துரையாடல் மூலம் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- எழுத்துக்களைத் தெளிவாக எழுதுதல்.
- உறுப்பமைய எழுதுதுல்.
- எழுத்துக்களின் வடிவம், அளவு, திசைமுகம் என்பவற்றை அனுசரித்து எழுதுதல்.
- எழுத்துப் பிழையின்றி எழுதுதல்.
- சொற்களுக்கிடையே இடைவெளி விட்டு எழுதுதல்.
- நிறுத்தக் குறிகளைக் கையாண்டு எழுதுதல்.
- கருத்துத் தொடர்புபெற வாக்கியங்களை எழுதுதல்.

(20 நிமிடம்)

**படி (2) 11.5.2**

- பின்னிணைப்பு 2 இனைக் கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- சொற்கள் ஒழுங்கின்றிப், பொருத்தமின்றி உள்ளன என்பதைக் கூறி எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இயைபு பெற்றுவரவே வாக்கியங்களை எழுத வேண்டும் என்பதை மாணவருக்கு விளக்குங்கள்.
- சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களை எழுதுமாறு கூறுங்கள்.

- பின்னிணைப்பு 3 இனை மாணவர்க்குக் காட்சிப்படுத்துங்கள்.
- வாக்கியங்களைத் தெளிவாக எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- சொற்களுக்கிடையே இடைவெளி விட்டு, நிறுத்தக் குறிகளை அனுசரித்து எழுத வழிப்படுத்துங்கள்.
- வினாக்களுக்குரிய விடைகளை முழு வாக்கியமாக எழுத வழிப்படுத்துங்கள்.
- தனித்தனியாக ஒவ்வொருவரையும் அவதானித்து எழுத இடர்ப்படுவோருக்கு உதவுங்கள்.

(40 நிமிடம்)

**படி 11.5.3**

- மாணவர்களை எழுமாற்றாக அழைத்துக் கரும்பலகையில் விடைகளையும் வாக்கியங்களையும் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விடைகள் தொடர்பாக மாணவர்களது கருத்துக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

○ ஒழுங்கின்றிக் காணப்படும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுதல்.
  - எழுவாய், பயனிலை இயைபுபெற்று வருதல்
  - (விடைகள்)
    1. மல்லிகைப் பூ வெள்ளை நிறமானது.
    2. எனது வகுப்பறை பெரியது.
    3. கிளி பழங்களை விரும்பி உண்ணும்.
    4. எனது ஊர் மிகவும் அழகானது.
    5. நாம் சத்தான உணவை உண்போம்.

○ கருத்துத் தொடர்ச்சியுடன் வாக்கியங்களை ஒன்றன்பின் ஒன்றாக எழுதுதல்.
○ வினாக்களுக்குரிய விடைகளை முழு வாக்கியமாக எழுதுதல்.
  1. நான் ஏழாம் வகுப்புப் படிக்கிறேன்.
  2. எனது ஆசிரியரின் பெயர் திருமதி. சுமணலதா.
  3. எனது நண்பனின் பெயர் சரத்.
○ எழுத்துப் பிழையின்றி தெளிவாக எழுதுதல்.
○ எழுத்துக்களின் அளவு, இடைவெளி என்பவற்றை அவதானித்து எழுதுதல்.
○ வாக்கியங்களில் நிறுத்தக் குறிகளை அனுசரித்து எழுதுதல்.

(40 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**


- வாக்கியங்களை எழுத்துப் பிழையின்றித் தெளிவாக எழுதுவார்.
- வாக்கியங்களின் பொருள் விளங்கி ஒழுங்காக எழுதுவார்.
- வினாக்களுக்கு விடை எழுதுவார்.
- நாளாந்த வாழ்க்கையில் சந்தர்ப்பங்களுக்கும் தேவைகளுக்குமேற்ப வாக்கியங்களை எழுதுவார்.

## 1.11 பின்னிணைப்பு


படங்களைப் பார்த்து, வாக்கியங்களை எழுதுங்கள்.



சூரியன் காலையில் உதிக்கும்.



தாமரை மலரும்.



கப்பல் கடலில் செல்லும்.



காகம் கா கா என்று கரையும்



சேவல் காலையில் கூவும்.

**பின்னிணைப்பு 2 செயற்பாட்டுப் பத்திரம் (அ)**

1. ஒழுங்கின்றிக் காணப்படும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுங்கள்.

உதாரணம் : பெயர் / எனது / கண்ணன் - எனது பெயர் கண்ணன்.

1. நிறமானது / மல்லிகைப்பூ / வெள்ளை
   ..........................................................................................................
2. எனது / பெரியது / வகுப்பறை
   ..........................................................................................................
3. பழங்களை / உண்ணும் / கிளி / விரும்பி
   ..........................................................................................................
4. எனது / அழகானது / ஊர் / மிகவும்
   ..........................................................................................................
5. நாம் / உணவை / சத்தான / உண்போம்
   ..........................................................................................................

**பின்னிணைப்பு 3 செயற்பாட்டுப் பத்திரம் (ஆ)**

2. எனது வகுப்பு



பின்வரும் வாக்கியங்களை உறுப்பமைய எழுதுங்கள்.

**எனது வகுப்பு**

1. நான் ஏழாம் வகுப்பில் படிக்கிறேன்.
2. எனது ஆசிரியர் பெயர் திருமதி சுமணலதா.
3. எனது வகுப்பில் நாற்பது மாணவர் படிக்கின்றார்கள்.
4. மேசை, கதிரை, கரும்பலகை என்பன வகுப்பில் உள்ளன.
5. நாங்கள் வகுப்பைச் சுத்தமாக வைத்திருப்போம்.

**முழு வாக்கியங்களை பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. நீங்கள் எத்தனையாம் வகுப்பிலே படிக்கின்றீர்கள்?

..........................................................................................................

2. உங்கள் ஆசிரியர் பெயர் என்ன?

..........................................................................................................

3. உங்கள் நண்பனின் பெயர் என்ன?

..........................................................................................................

## தேர்ச்சி: 4.0 பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவார்.

தேர்ச்சி மட்டம் 4.1 பாடல்களை உச்சரிப்புத் தெளிவோடும் இசையோடும் நயத்தோடும் பொருளுணர்ந்து பாடுவார்.

செயற்பாடு : 'மயில்' என்ற பாடலைச் சரியாக உச்சரித்து இசையோடும் நயத்தோடும் பொருளுணர்ந்து பாடுவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு:

- 'மயில்' என்ற பாடல் - பின்னிணைப்பு - 1
- ஒலிப்பதிவுக் கருவி

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி I 4.1.1**

- பின்வரும் பாடலைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

பூனை

பாலைக் குடித்தும் சாதுவைப் போல்
பஞ்சுக் காலால் நடந்திடுமே
வேலை அதற்கு வேறில்லை
வீட்டில் எலிகள் பிடிப்பது தான்!
(குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா)

- பாடலை இசையோடு பாடிக்காட்டுங்கள். அல்லது ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்யுங்கள்.
- பாடலை அவதானமாகக் கேட்டு, இசையோடு திருப்பிப் பாடும்படி மாணவர்களிடம் கூறுங்கள்.
- பின்வருவன பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- பாடலைக் கவனமாகவும் கருத்தூன்றியும் கேட்டல்.
- கவனத்தை வேறுதிசையில் திருப்பாதிருத்தல்.
- அமைதியாக இருத்தல்.
- வாய்க்குள் பாடிப்பார்த்தல்.
- பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் பாடுதல்.
- பாடலை இசையோடு பாடுதல்.
- பாடலை நயந்து பாடுதல்.
- பாடலின் பொருளுணர்ந்து பாடுதல்.

(10 நிமிடம்)

படி II 4.1.2

- பின்னிணைப்பிலுள்ள 'மயில்' என்ற பாடலை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- பாடலை உச்சரிப்புத் தெளிவோடும் இசையோடும் நயத்தோடும் பொருளுணர்ந்து பாடுங்கள்.
- அல்லது பாடலை ஒலிப்பதிவு செய்து ஒலிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் அவதானமாகக் கேட்டு, அப்பாடல்களைப் பாட வழிகாட்டுங்கள்.
- இப்பயிற்சியில் பல தடவைகள் ஈடுபடவிடுங்கள்.
- பின்னர் மாணவர்களைக் குழுவாக இணையச் செய்யுங்கள்.
- குழுவிலுள்ள ஒருவர் பாடலைச் சரியான உச்சரிப்போடும், இசையோடும், நயத்தோடும் பொருளுணர்ந்து பாட, ஏனையோர் அவதானமாகக் கேட்டுத் திருப்பிப் பாட வழிகாட்டுங்கள்.
- குழுக்களிடையே சென்று மாணவர்களுடன் கலந்துரையாடி வழிகாட்டுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் பாடலைச் சரியான உச்சரிப்போடும், இசையோடும், பொருளுணர்ந்து பாட வழிகாட்டுங்கள்.

(30 நிமிடங்கள்)

படி III 4.1.3

- குழுவாகப் பாடி முடிந்த பின்னர், ஒவ்வொரு குழுவிலிருந்தும் மாணவரை எழுமாற்றாக அழைத்துப் பாடலைத் தெளிவான உச்சரிப்போடும், இசையோடும், நயத்தோடும் பொருளுணர்ந்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- ஏனையோர் பாடும்போது, அவதானமாகக் கேட்டல்
    - உச்சரிப்பு
    - ஒலிவேறுபாடு
    - மெய்ப்பாடு
    - இசை / ஓசை
    - பொருளுணர்ந்து பாடுதல்
- தாம் பாடலைப் பாடும்போது உச்சரிப்புத் தெளிவுடன் பாடுதல்
- இசையோடு / ஓசையோடு பாடுதல்
- பாடலை நயந்து மெய்ப்பாடுகள் தோன்றப் பாடுதல்
- பொருளுணர்ந்து பாடுதல்

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடலை அவதானமாகக் கேட்டுப் பாடுவார்.
- பாடலை உச்சரிப்புத் தெளிவுடன் பாடுவார்.
- பாடலை இசையோடு / ஓசையோடு பாடுவார்.
- பாடலை நயந்து பாடுவார்.
- பாடலின் பொருளுணர்ந்து பாடுவார்.
- இவ்வாற்றலைப் பயன்படுத்திப் பிற சந்தர்ப்பங்களிலும் பாடல்களை அவதானமாகக் கேட்டுப் பாடுவார்.

**பின்னிணைப்பு 1 செயற்பாட்டுப் பத்திரம்**

- பின்வரும் பாடலை உச்சரிப்புத் தெளிவோடும் இசையோடும் பொருளுணர்ந்து பாடுங்கள்.

**மயில்**

மலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது

வானம்பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்திருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது

நஞ்சைக் கக்கும் நாக பாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளித்தி டாமல்
அருகில் நின்று பார்க்குது

கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கின்றான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறாள்

வித்துவான்.க. வேந்தனார்

**தேர்ச்சி: 2.0 கட்டளைகள், அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு கருத்துக்களை முன்வைப்பார்.**

தேர்ச்சி அலகு 2.1 கட்டளைகளுக்கேற்பத் துலங்குவார்.

2.2 அறிவுறுத்தல்களுக்கேற்பத் துலங்குவார்.

செயற்பாடு : கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் ஏற்பச் செயற்படுவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு:

- கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் எழுதப்பட்ட அட்டை - பின்னிணைப்பு 1
- பின்னிணைப்பு 1 இலுள்ள கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பன வெவ்வேறாக எழுதப்பட்ட அட்டைப் பிரதிகள் - பின்னிணைப்பு 2 செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 2.1.1**

- கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் எழுதப்பட்ட அட்டையைக் (பின்னிணைப்பு 1) காட்சிப்படுத்துங்கள்.
- முதலில் அதிலுள்ள கட்டளைகளை முறையாக உச்சரித்து வாசியுங்கள்.
- மாணவரையும் கூறச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு கட்டளையையும் முறையாக வாசித்து, அதற்கேற்பச் செயற்படுங்கள். உதாரணம்: "கை தட்டுங்கள்" எனும் கட்டளையைக் கூறி, உங்கள் கைகளைத் தட்டிக் காட்டுங்கள். இவ்வாறே அனைத்துக் கட்டளைகளும் செய்து காட்டிய பின்னர், கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் எழுதப்பட்ட அட்டையில் (பின்னிணைப்பு 1) உள்ள அறிவுறுத்தல்களையும் கூறி விளக்கமளிப்பதுடன் மாணவர்களையும் கூறச் செய்யுங்கள்.
- அறிவுறுத்தல்களைக் கேட்டு அவற்றைப் பின்பற்றுவதற்குப் பயிற்சியளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| | |
|---|---|
| - | கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றைக் கேட்டு அவற்றை விளங்கிக் கொள்ளல். |
| - | கட்டளைகள், அறிவுறுத்தல்களைத் தெளிவாகக் கூறுதல். |
| - | கட்டளைகள், அறிவுறுத்தல்களுக்கு ஏற்பச் செயற்படுதல். |

**படி 2.1.2**

- மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் தனித்தனியே எழுதப்பட்ட அட்டைகளை (செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு - 2) வழங்குங்கள்.

- அவற்றிலுள்ள கட்டளைகளைத் தனியாகவும் அறிவுறுத்தல்களைத் தனியாகவும் வகைப்படுத்தச் செய்யுங்கள்.
- வகைப்படுத்தப்பட்ட கட்டளைகளைக் குழுவிலுள்ள ஒருவர் உச்சரித்துக் கூற ஏனையோரும் அதனைக் கூறி, அதற்கேற்பச் செயற்படும்படி செய்யுங்கள்.
- அவ்வாறே அறிவுறுத்தல்களை ஒருவர் கூறக் கேட்டு ஏனையோர் மீண்டும் கூற வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் குழுக்களுக்குச் சென்று கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை முறையாகக் கூறவும், அவற்றிற்கேற்பச் செயற்படவும் வழிப்படுத்துங்கள்.

**படி 2.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் முன்னால் வந்து கட்டளைகளைக் கூற, ஏனையோரும் அவற்றைக் கூறிச் செயற்படச் செய்யுங்கள். பின்னர் அறிவுறுத்தல்களை ஒருவர் கூற ஏனையோரையும் அவற்றைக் கூறச் செய்து, செயற்படச் செய்யுங்கள்.
- இச்செயற்பாட்டை அனைத்துக் குழுவினரும் நிறைவு செய்த பின்னர், பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| | |
|---|---|
| - | கட்டளைகளுக்கேற்ற சரியான தொனி |
| - | கட்டளைகளுக்கு ஏற்ப உடனடியாகச் செயற்படல் |
| - | முறையான உச்சரிப்பு |
| - | அறிவுறுத்தல்களை வாசித்து அறிதலும் அவற்றைப் பின்பற்றலும் |

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் ஏற்பச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து வெளிப்படுத்துவார்.
- கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் விளங்கிப் பொருத்தமாகச் செயற்படுவார்.
- கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் தாமே கூறுவார்.
- கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பனவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.

## பின்னிணைப்பு 1

### கட்டளைகள்

**கை தட்டுங்கள்**
**புத்தகத்தை எடுங்கள்**
**கையை உயர்த்துங்கள்**
**பேனையை எடுங்கள்**
**பின்னால் திரும்புங்கள்**

### அறிவுறுத்தல்கள்

**அமைதியாக இருங்கள்.**
**சாப்பிட முன் கை கழுவுங்கள்.**
**குப்பைகளை வகுப்பறைக்குள் போடாதீர்கள்.**
**வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருங்கள்.**
**கடமையைச் செய்யுங்கள்.**
**உண்மை பேசுங்கள்.**

**செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு 2**

கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வகைப்படுத்துங்கள். ஒருவர் கூற ஏனையோர் திருப்பிக் கூறுங்கள். கட்டளைகளுக்கேற்பத் துலங்குங்கள்.

கை தட்டுங்கள்

புத்தகத்தை எடுங்கள்

கையை உயர்த்துங்கள்

பின்னால் திரும்புங்கள்

அமைதியாக இருங்கள்

சாப்பிடு முன் கை கழுவுங்கள்

குப்பைகளை வகுப்பறைக்குள் போடாதீர்கள்

உண்மை பேசுங்கள்

**தேர்ச்சி: 8.0** **கட்டளைகளை அறிவுறுத்தல்களை வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1:** கட்டளைகள் அறிவுறுத்தல்களை வாசிப்பார்.

**செயற்பாடு :** கட்டளைகள் அறிவுறுத்தல்களை வாசிப்போம்.

**நேரம்:** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு :** கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் எழுதப்பட்ட அட்டை பின்னிணைப்பு - 1
கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் தனித்தனி சொற்களாக எழுதப்பட்ட அட்டைகள் - பின்னிணைப்பு - 2

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 8.1.1**

- கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் எழுதப்பட்ட அட்டையினைக் (பின்னிணைப்பு - 1) காட்சிப்படுத்துங்கள்.
- அதிலுள்ள கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் ஒவ்வொன்றாக உரிய முறையில் உச்சரித்து வாசித்துக் காட்டுங்கள். உங்களைப் பின்பற்றி மாணவர்களையும் முறையாக வாசிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களை எழுமாற்றாக அழைத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ▪ எழுத்துக்களை இனங்காணல். |
| ▪ எழுத்துக்களைச் சரியாக உச்சரித்தல். |
| ▪ சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல். |
| ▪ கட்டளைகளினதும் அறிவுறுத்தல்களினதும் பொருளை அறிதல். |

**படி 8.1.2**

- மாணவர்களை சோடிகளாக்குங்கள்.
- ஒவ்வொரு சோடிக்கும் பின்னிணைப்பு - 1 இன் பிரதிகளை வழங்குங்கள்.
- சோடிகளில் ஒருவர் வாசிக்க அடுத்தவர் அவரைப் பின்பற்றி வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.இருவரும் இவ்வாறு மாறி மாறி வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவ்வாறு அனைத்துச் சோடியினரும் வாசித்து பயிற்சி பெற்ற பின்னர் மாணவரை குழுக்களாக்கி பின்னிணைப்பு - 2 இல் குறிப்பிட்ட சொல்லட்டைப் பிரதிகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- சொல்லட்டைகளை வாசித்துப் பொருளறிந்து சரியான முறையில் அவற்றைப் பொருத்துவதன் மூலம் கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் அமைத்து, குழுநிலையில் அவற்றை வாசிக்கச் செய்யுங்கள்.
- இடர்ப்படும் குழுக்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

படி 8.1.3

- மாணவர்களை எழுமாற்றாக முன்னால் அழைத்து, பின்னிணைப்பு - 2 இல் தாம் ஒழுங்கு படுத்திய கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வாசிக்கச் செய்யுங்கள்.
- அவரைப் பின்பற்றி ஏனையோரையும் வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| ▪ கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் உரிய தொனியுடனும் உரிய உச்சரிப்புடனும் வாசித்தல்.<br>▪ சொற்களைச் சரியாகப் பொருத்துவதன் மூலம் கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் ஆக்குதல்.<br>▪ தாம் வாசிக்கும் கட்டளைகள், அறிவுறுத்தல்களை விளங்கிக் கொள்ளல். |

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் சரியான உச்சரிப்புடன் வாசிப்பார்.
- கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் ஏற்ற தொனியுடன் வாசிப்பார்.
- கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வேறுபிரித்து செயற்படுவார்.
- அன்றாட வாழ்வில் பயன்படும் கட்டளைகள் அறிவுறுத்தல்கள் என்பவற்றை வாசிப்பார்.

**பின்னிணைப்பு - 1 செயற்பாட்டுப்பத்திரம்**

பின்வரும் கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் உரத்து வாசியுங்கள்.

**கட்டளைகள்**

- கை தட்டுங்கள்.
- எழுந்து நில்லுங்கள்.
- புத்தகத்தை எடுங்கள்.
- கைகளை உயர்த்துங்கள்.
- பேனையை எடுங்கள்.
- பின்னால் திரும்புங்கள்.
- வகுப்பறைக்கு உள்ளே செல்லுங்கள்.

**அறிவுறுத்தல்கள்**

- அமைதியாக இருங்கள்.
- சாப்பிடமுன் கை கழுவுங்கள்.
- குப்பைகளை வகுப்பறைக்குள் போடாதீர்கள்.
- வலது புறமாக நடவுங்கள்.
- இந்தப் பாலம் பழுதடைந்துள்ளது.

**பின்னிணைப்பு - 2**

சொல்லட்டைகளைக் கொண்டு கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் ஆக்குங்கள்.

| | | |
|---|---|---|
| கை | தட்டுங்கள் | |
| கையை | உயர்த்துங்கள் | |
| பேனையை | எடுங்கள் | |
| பின்னால் | திரும்புங்கள் | |
| அமைதியாக | இருங்கள் | |
| குப்பைகளை | கீழே | போடாதீர்கள் |
| வரிசையாக | மைதானத்துக்குச் | செல்லுங்கள் |

## தேர்ச்சி: 12.0 கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் எழுதுவார்

**தேர்ச்சி மட்டம் 12.1** : கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் எழுதுவார்.

**செயற்பாடு:** கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பன எழுதப்பட்ட அட்டவணை
பின்னிணைப்பு - 1
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2

### கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 12.1.1**

- எளிமையான சில கட்டளைகளைக் கூறி, அவற்றுக்கு ஏற்ப மாணவரைச் செயற்படச் செய்யுங்கள்.
- பின்னிணைப்பு - 1 இனை காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றை உரத்து வாசித்து, மாணவரையும் வாசிக்கச் செய்யுங்கள்.
- அவற்றின் பொருளைக் கூறுவதனூடாக பின்னிணைப்பு - 1 இலுள்ள கட்டளைகளுக்கு ஏற்பச் செயற்படுமாறு செய்யுங்கள்.
- கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பன தொடர்பாக முன்னர் கற்ற விடயங்களை ஞாபகப்படுத்துவதோடு, பின்வரும் விடயங்களையும் மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| - கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வேறுபடுத்தி அறிதல். |
| - கட்டளைகள் அமைந்திருக்கும் முறையை விளக்குதல். |

**படி 12.1.2**

- செயற்பாட்டுப்பத்திரப் பிரதிகளை மாணவருக்கு தனித்தனியே வழங்குங்கள்.
- மாணவர் தனித்தனியே செயற்பாட்டுப் பத்திரத்தை பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.
- அனைத்து மாணவரும் செயற்பாட்டுப் பத்திரத்தை பூர்த்தி செய்த பின்னர், தமக்கிடையில் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்துக் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 12.1.3**

- மாணவரை எழுமாற்றாக அழைத்து தம்மால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாட்டுப் பத்திரங்களை முன்வைக்கச் செய்யுங்கள்.
- ஏனையோரும் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- கட்டளைகள்
  - கைகளை உயர்த்துங்கள்.
  - முன்னால் வாருங்கள். வரிசையாகச் செல்லுங்கள்.

- அறிவுறுத்தல்கள்
  - பூக்களைப் பறிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.
  - கடி நாய் கவனம்.
  - இங்கே குளிப்பது ஆபத்தானது.

- வகுப்பறையில் அன்றாடம் ஆசிரியரால் கூறப்படும் கட்டளைகள்
  - எழுந்து நில்லுங்கள்.
  - புத்தகத்தை எடுங்கள்.
  - எழுதுங்கள்.
  - அமைதியாக இருங்கள்.
  - பயிற்சிகளைச் செய்யுங்கள்.

- நூலகத்தில் காட்சிப்படுத்தக்கூடிய அறிவுறுத்தல்கள்
  - அமைதி பேணவும்.
  - கையடக்கத் தொலைபேசிப் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.
  - புத்தகங்களை இங்கே வைக்கவும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வேறுபடுத்தும் ஆற்றலை வெளிப்படுத்துங்கள்.
- கட்டளைகளுக்குப் பணிய வேண்டும் என்பதையும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் உணர்ந்து செயற்படுவார்.
- வகுப்பறை, நூலகம் என்பவற்றுக்குப் பொருத்தமான கட்டளைகள், அறிவுறுத்தல்களை எழுதுவார்.
- தம் அன்றாட வாழ்வில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை எழுதுவார்.

**பின்னிணைப்பு - 1**

**கட்டளைகள்**

- எழுந்து நில்லுங்கள்.
- வரிசையாக வாருங்கள்.
- வலது கையை உயர்த்துங்கள்.
- பின்னால் திரும்பி நில்லுங்கள்.
- வேகமாக ஓடுங்கள்.

**அறிவுறுத்தல்கள்**

- இங்கே குப்பை போட வேண்டாம்.
- அபாயம்.
- இங்கே நீராடுவது தடை செய்யப்பட்டுள்ளது.
- உட்பிரவேசிக்கக் கூடாது.
- மஞ்சள் கோட்டில் கடக்கவும்.

**பின்னிணைப்பு - 2**

**செயற்பாட்டுப் பத்திரம் - 1**

1. பின்வரும் கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வாசித்துத், தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்.

- கைகளை உயர்த்துங்கள்.
- பூக்களைப் பறிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.
- கடிநாய் கவனம்.
- முன்னால் வாருங்கள்.
- வரிசையாக நில்லுங்கள்.
- இங்கு குளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

| கட்டளைகள் | அறிவுறுத்தல்கள் |
|---|---|
| | |

**செயற்பாட்டுப் பத்திரம் - 2**

2. வகுப்பறையில் ஆசிரியர் வழமையாகக் கூறும் இரண்டு கட்டளைகளை எழுதுங்கள்.

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

3. நூலகத்தில் காட்சிப்படுத்தக்கூடிய இரண்டு அறிவுறுத்தல்களைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுங்கள்.

- கை தட்டுங்கள்.
- அமைதி பேணவும்.
- கையடக்கத் தொலைபேசி பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.
- உரத்து வாசியுங்கள்.
- எழுந்து நில்லுங்கள்.
- அமைதியாக இருங்கள்.
- புத்தகங்களை இங்கே வைக்கவும்.

**தேர்ச்சி: 3.0** **பல்வேறு தேவைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப உரையாடுவார் .**

**தேர்ச்சி மட்டம் 3.3** தேவைகளை நிறைவு செய்வதற்காக உரையாடுவார்.

**செயற்பாடு :** தேவைகளை நிறைவு செய்வதற்காக உரையாடுவோம்

**நேரம் :** 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடு:**

- பின்னிணைப்பு 1, எழுதுதாள், எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 3.3.1**

- மாணவருடன் வகுப்பறைச் சுத்தம் தொடர்பாக உரையாடிப் பாடத்தை ஆரம்பியுங்கள்.

அ. நீங்கள் வகுப்பறைச் சுத்தம் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.
ஆ. வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருக்க என்ன செய்யலாம்?
இ. வகுப்பறையை எவ்விதம் அழகுபடுத்தலாம்?

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

- பண்பான சொற்களைப் பயன்படுத்தி உரையாடுதல்
- தேவைகளை விளங்கிக் கொள்ளல்.
- தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தல்.
- உரையாடல்கள் மூலம் பிறரின் தேவைகளை அறிந்து கொள்ளல்.
- தமது கருத்துக்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துதல்.
- பிறர் கூறுவதை அவதானத்துடன் கேட்டல்.

**படி 3.3.2**

- மாணவரை மும்மூன்று பேர் கொண்ட குழுக்களாக அமரச் செய்யுங்கள்.
- பின்னிணைப்பு 1 ஐ குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அதில் உள்ள உரையாடலை வாசித்து உரையாட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் ஒவ்வொரு பாத்திரம் ஏற்று உரையாடலில் ஈடுபடத் துணைபுரியுங்கள்.
- தேவையேற்படும்போது குழுக்களிடையே சென்று முறைப்படி உரையாடிக் காட்டுங்கள்.

படி 3.3.3

- மாணவர் குழுவை எழுமாற்றாக அழைத்து உரையாடலை முன்வைக்கத் தூண்டுங்கள்.
- மாணவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| - | பண்பாக உரையாடுதல். |
| - | உரையாடலில் பயன்படுத்தப் பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்தல். |
| - | உரையாடல் இயல்பாக அமைதல். |
| - | உரையாடலில் சந்தர்ப்பத்திற்கேற்ற உணர்வுகளை வெளிப்படுத்தல். |
| - | தெளிவான உச்சரிப்புடன் உரையாடுதல். |
| - | பிறர் கூறுவனவற்றைக் கேட்டலில் அக்கறை செலுத்துதல். |

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பண்புடனும் மரியாதையுடனும் உரையாடுவார்.
- உரையாடும்போது பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவார்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப உரையாடும் மனப்பாங்கைப் பெறுவார்.
- எல்லா சந்தர்ப்பங்களிலும் உரையாடும் பயிற்சியினை வளர்ப்பார்.
- பிறர் கூறுவதை அலட்சியப்படுத்தாது அக்கறையோடு கேட்டு உரையாடுவார்.

**செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1**

பின்வரும் உரையாடலைப் பாத்திரமேற்று உரையாடுங்கள்.

**உரையாடல்**

| | | |
|---|---|---|
| பாத்திரங்கள் | - | மாணவன்<br>கடை முதலாளி<br>கடைத் தொழிலாளி |
| இடம் | - | கடை |
| மாணவன் | - | வணக்கம் ஐயா! |
| முதலாளி | - | வணக்கம் தம்பி! என்ன வேணும்? |
| மாணவன் | - | ஒன்றும் வேண்டாம் ஐயா. நேற்று எனது குடையை மறதியாக இங்கு வைத்துவிட்டுப் போய்விட்டேன். |
| முதலாளி | - | குடையா? |
| மாணவன் | - | ஆம். ஐயா |
| முதலாளி | - | உங்கள் குடையை நான் பார்க்கவில்லையே, எங்கே வைத்தீர்கள்? |
| மாணவன் | - | நான் உங்கள் கடையில் கொப்பி வாங்க வந்தேன். கையில் இருந்த குடையைத் தவறுதலாக இங்கே வைத்துவிட்டுப் போய்விட்டேன் ஐயா. |
| முதலாளி | - | சந்தானம், சந்தானம் |
| தொழிலாளி | - | வந்துவிட்டேன் ஐயா. |
| முதலாளி | - | இந்தத் தம்பியின் குடையைக் கண்டாயா? |
| தொழிலாளி | - | ஆம் ஐயா. |
| முதலாளி | - | தம்பி தேடி வந்திருக்கிறார். |
| தொழிலாளி | - | இதோ! இந்தாங்க ஐயா. |
| முதலாளி | - | தம்பி, இதுதானா உன் குடை? |
| மாணவன் | - | ஆம் ஐயா. மிக்க நன்றி. நான் போய் வருகிறேன். |

**தேர்ச்சி: 3.0** **பல்வேறு தேவைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப உரையாடுவார் .**

தேர்ச்சி மட்டம் 3.1 நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுவார்.

செயற்பாடு : 3.1.1 நாளாந்தத் தேவைகளுக்காக உரையாடுவோம்

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு: பின்னிணைப்பு 1

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி 3.1.1.1**

- உங்களுடன் உரையாடக்கூடிய மாணவர் ஒருவரை உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள்.
- அவருடன் பின்வரும் உரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| மாணவர் | :- | தயவு செய்து உங்கள் குடையைத் தாருங்கள். |
| மாணவர் | :- | மன்னிக்கவும், நான் குடை கொண்டு வரவில்லை. |

- உரையாடலை மாணவர்களை அவதானிக்கச் செய்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மற்றவருடன் பேசும்போது பயன்படுத்தக்கூடிய பணிவான, அன்பான வார்த்தைகளை ஒவ்வொன்றாகக் கரும்பலகையில் காட்சிப்படுத்தி விளக்குங்கள். (பின்னிணைப்பு 1)
- குறித்த சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களைக் கூறுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டு மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- கேட்பதற்கு இதமாக இருக்க
- அன்பை வெளிப்படுத்த
- மகிழ்ச்சியை வெளிப்படுத்த
- வருத்தத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய சொற்றொடர்கள்.
- உணர்வுகளைச் சொற்களில் வெளிப்படுத்தும் விதம்
- உணர்வுகளுக்கேற்றவாறு தொனியில் காட்ட வேண்டிய ஏற்ற இறக்கம்

(20 நிமிடங்கள்)

**படி 3.1.1.2**

- மாணவரைச் சோடிகளாக்குங்கள்.
- ஒவ்வொரு சோடிக்கும் பின்னிணைப்பு 1 இலுள்ள சொற்கள் / சொற்றொடர்களில் ஒவ்வொன்றைக் கொடுங்கள்.
- தரப்பட்ட சொல் / சொற்றொடர் இடம்பெறும் விதத்திலான சிறிய உரையாடலை ஆயத்தம் செய்யும்படி கூறுங்கள்.

- மாணவர் தமக்கிடையே உரையாடுவதை அவதானியுங்கள்.
- தேவையான இடத்தில் சென்று உதவி புரியுங்கள்.
- மாணவர்கள் தமக்கிடையே தெளிவாகவும் மெய்ப்பாடுகள் வெளிப்படும் விதத்திலும் உரையாட வழிகாட்டுங்கள்

(40 நிமிடங்கள்)

**படி 3.1.1.3**

- எழுமாற்றாக இருவரை முன்னால் அழையுங்கள்.
- உரையாடலை நடத்திக்காட்டச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு விளக்கமளியுங்கள்.

| | |
|---|---|
| - | பண்புடன் பேசுதல். |
| - | கவனமாகச் செவிமடுத்தல். |
| - | மெய்ப்பாடுகளுடன் பேசுதல். |
| - | ஈடுபாட்டுடன் உரையாடுதல். |
| - | பொருத்தமான சொற்கள் / சொற்றொடர்களைச் சந்தர்ப்பங்களுக்கேற்ப பயன்படுத்துதல். |

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பண்புடன் உரையாடுவார்
- உணர்வு வெளிப்பாடுகளுக்குப் பொருத்தமாகச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுவார்.
- மெய்ப்பாடுகளுடன் பேசுவார்.
- சந்தர்ப்பத்துக்கேற்ப பொருத்தமான சொற்கள் / சொற்றொடர்களைப் பயன்படுத்திப் பேசுவார்.

**பின்னிணைப்பு - 1**

| பண்புடன் பேசுவதற்கு சொற்கள் / சொற்றொடர்கள் |
|---|
| • தயவு செய்து |
| • மன்னிக்கவும் |
| • நன்றி |
| • வருந்துகிறேன் |
| • வாழ்த்துக்கள் |
| • மிகவும் நன்றி |
| • மிக்க மகிழ்ச்சி |

**தேர்ச்சி: 10.0** **பந்திகளை வாசிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1**: சிறு பந்திகளை உரத்து வாசிப்பார்.

**செயற்பாடு:** பந்திகளை உரத்து வாசிப்போம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : சிறிய பந்தி எழுதப்பட்ட அட்டை - பின்னிணைப்பு - 1
நரி, கிணறு, தேடி, அது ஆகிய சொற்களுடன் வேறு சொற்களும் எழுதப்பட்ட அட்டைகள்.
(இரண்டு பேருக்கு ஒன்று வீதம்)
சிறிய பந்தி ஒவ்வொன்று எழுதப்பட்ட அட்டைகள்
- (குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப) - பின்னிணைப்பு - 2

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 10.1.1**

- மாணவரைச் சோடிகளாக்குங்கள்.
- நீங்கள் தயாரித்து வைத்துள்ள சொல்லட்டைகளை சோடிக்கு ஒன்று வீதம் வழங்குங்கள்.
- எல்லா மாணவர்களையும் அவதானிக்குமாறு செய்து சிறு பந்தி எழுதப்பட்ட அட்டையை (பின்னிணைப்பு - 1 ஐ) உரத்து வாசியுங்கள்.
- நீங்கள் வாசித்த பந்தியில் வந்த சொற்களை வைத்திருக்கும் (நரி, கிணறு, தேடி, அது) மாணவர் சோடிகளை முன்னால் அழைத்து அவர்கள் வைத்துள்ள அட்டைகளை எல்லோரிடமும் காட்டச் செய்யுங்கள்.
- வேறு என்னென்ன சொற்கள் இருந்தன? என்று கேட்டுக் கலந்துரையாடி பின்வருவனவற்றை வலியுறுத்துங்கள்.

- உரத்து வாசிப்பது மற்றவருக்காக.
- உரத்து வாசித்தல் தெளிவாக இருத்தல்.
- தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல்.
- ஏனையோருக்குக் கேட்கக்கூடியதாக இருத்தல்.
- பொருத்தமான இடங்களில் நிறுத்தி வாசித்தல்.
- தொனி வேறுபாடுகளுடன் வாசித்தல்.

(20 நிமி)

**படி 10.1.2**

- மாணவரை ஐந்து குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பந்தி எழுதப்பட்ட அட்டைகளை (பின்னிணைப்பு-2 ஐ) வழங்குங்கள்.
- குழுவிலுள்ள எல்லோரையும் உரத்து வாசிப்பதற்கு ஆயத்தமாகும்படி கூறுங்கள்.
- போதுமான கால அவகாசம் வழங்குவதுடன் ஒவ்வொரு குழுவுக்கும் வாசிப்பதற்கு உதவுங்கள்.

(40 நிமி)

**படி 10.1.1.3**

- ஒவ்வொரு குழுவிலும் எழுமாற்றாக ஒருவரை அழைத்து அவரிடமுள்ள பந்தி எழுதப்பட்ட அட்டையை உரத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- ஏனைய குழுவினர், வாசிக்கப்படும் பந்தியில் வரும் சொற்களைக் கூற வேண்டும்.
- அதிகமான சொற்களைக் கூறும் குழு வெற்றி பெற்றதாகக் கூறிப் பாராட்டுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ▪ உச்சரிப்புத் தெளிவு |
| ▪ தொனி ஏற்ற இறக்கம் |
| ▪ பொருத்தமான வேகத்துடன் வாசித்தல் |
| ▪ கருத்துப் புலப்பட வாசித்தல் |
| ▪ மெய்ப்பாடுகளுடன் வாசித்தல் |

(20 நிமி)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- வாசிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவற்றைக் குறிப்பிடுவார்.
- உச்சரிப்புத் தெளிவுடன் வாசிப்பார்.
- ஏனையோருக்கு விளங்கக்கூடியதாக வாசிப்பார்.
- பொருத்தமான வேகத்துடன் வாசிப்பார்.
- நாளாந்த தேவைக்கு வேண்டியவற்றை வாசிப்பார்.

**பின்னிணைப்பு - 1**

| |
|---|
| நரி தண்ணீரைத் தேடி அலைந்தது. தூரத்தில் ஒரு கிணறு இருப்பதைப் பார்த்தது. அது கிணற்றின் அருகே சென்றது. |

**பின்னிணைப்பு - 2**

| |
|---|
| வீடுகளில் கோழியை வளர்ப்பார்கள். அதனால் கோழி வீட்டில் வளர்க்கும் பறவை எனக் கூறப்படுகின்றது. |

| |
|---|
| கப்பல் நீரில் செல்கின்ற ஒரு வாகனம். அதில் மக்கள் பிரயாணம் செய்யலாம். |

| |
|---|
| மாம்பழம் மிகவும் சுவையானது. அது முக்கனிகளில் ஒன்று. அதில் பல வகைகள் உள்ளன. |

| |
|---|
| இலங்கை ஒரு தீவு எனப்படும். இத்தீவு எல்லாப் பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டு உள்ளது. |

| |
|---|
| சாப்பாட்டில் கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது. கீரை ஒரு சத்துள்ள உணவாகும். |

**தேர்ச்சி: 13.0** **கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்**

**தேர்ச்சி மட்டம் 13.0**: பந்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவார்.

**செயற்பாடு:** பந்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : பந்தியும் சிறு வினாக்களும் கொண்ட தாள் - பின்னிணைப்பு - 1
பந்தியும் சிறு வினாக்களும் கொண்ட தாள் - பின்னிணைப்பு - 2
மேலதிக செயற்பாடு - பின்னிணைப்பு - 3

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 13.1.1**

- பின்னிணைப்பு - 1 இலுள்ள பந்தியைக் காட்சிப்படுத்தி உரத்து வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களை மௌனமாக வாசிக்கும்படி கூறுங்கள்.
- பந்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களை வாசித்துக் காட்டுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களிடம் விடையைக் கூறச் செய்யுங்கள்.
- பிழைகள் இருப்பின் திருத்திக் கூறுங்கள்.
- அவ்விடைகளைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுத வழிப்படுத்துங்கள்.
- எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள் இல்லாது எழுத வழிப்படுத்துங்கள்.
- கோடு இடப்பட்ட சொற்கள் எழுதப்பட்டுள்ள விதத்தை அவதானிக்கச் செய்யுங்கள்.

பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- பந்தியில் தரப்பட்டுள்ள விடயத்தைக் கவனமாக வாசித்தல்.
- கருத்துக்களை விளங்கிக் கிரகித்தல்.
- வினாக்களை வாசித்து விளக்குதல்.
- வினாக்களுக்குரிய பொருத்தமான விடைகளைப் பந்தியிலிருந்து அறிந்து கொள்ளுதல்.
- விடைகளை எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள் இன்றி எழுதுதல்.
- சொற்களைச் சேர்க்கும் முறையினை அவதானித்தல்.
- சொற்களை உறுப்பமையத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல்.

**படி 13.1.2**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு - 2 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தினைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழு நிலையில் பந்தியினையும் வினாக்களையும் வாசித்து விடைகளைக் கண்டறிய வழிப்படுத்துங்கள்.
- மாணவர் தமது பயிற்சிப் புத்தகங்களில் விடைகளை எழுதச் செய்யுங்கள்.

**படி 13.1.3**

- மாணவர்கள் எழுதிய விடைகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

1. பழங்கால மக்கள் காடுகளில் வாழ்ந்தனர்.
2. அக்கால மக்கள் இறைச்சியை உணவாகக் கொண்டனர்.
3. அக்கால மக்கள் குகைகள், மரப் பொந்துகளை இருப்பிடமாக்கிக் கொண்டனர்.
4. அவர்கள் ஆடு, மாடுகளை வளர்த்தனர்.
5. அவர்கள் ஆற்றோரங்களில் நிலையாக வாழத் தொடங்கினர்.

மாணவர் எழுதிய விடைகளைத் தமக்குள்ளே மாற்றிக்கொள்ள வழிபடுத்துங்கள்..
சரியான விடைகளுக்குச் சரி (✓) அடையாளமிட வழிப்படுத்துங்கள்.

- மீண்டும் தமக்குரிய விடைத்தாள்களைப் பெற்று அவற்றிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பந்தியைக் கவனமாக வாசித்து அதிலுள்ள விடயங்களை விளங்கிக் கொள்ளுதல்.
- கேட்கப்பட்ட வினாக்களை வாசித்து விளங்குதல்.
- வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் பந்தியில் காணுதல்.
- வினாக்களுக்கு அமைவாக விடைகள், வாக்கியங்கில் எழுதப்படல்.
- விடைகளை எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள் இன்றி எழுதுதல்.
- தெளிவான கையெழுத்தில் எழுதுதல்.
- சொற்களைச் சேர்த்து எழுதும் முறையை அவதானித்து எழுதுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- குறித்த ஒரு பந்தியை வாசித்து விடயங்களைக் கிரகித்து வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுவார்.
- எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள் இன்றி எழுதுவார்.
- நடைமுறை வாழ்க்கையில் சிறிய கதைகள், கட்டுரைகள் போன்றவற்றை வாசித்துக் கிரகித்து தேவையானவற்றை எழுதுவார்.
- சொற்களைச் சேர்த்து எழுதும்போது ஏற்படக்கூடிய மாற்றங்களைக் கூறுவார்.

**பின்னிணைப்பு - 1**

ஒரு காகம் தாகத்தினால் நீரைத் தேடி அலைந்தது. எங்குமே நீரைக் காணாது கவலை அடைந்தது. அப்போது ஒரு குடத்தைக் கண்டது. குடத்தின் அருகே பறந்து சென்றது. ஆவலோடு குடத்தை எட்டிப் பார்த்தது. குடத்தின் உள்ளே சிறிதளவு மழைத் தண்ணீர் இருப்பதைக் கண்டது. தண்ணீரை எப்படிக் குடிக்கலாம் என்று சிந்திக்கத் தொடங்கியது.

1. காகம் எதனைத் தேடி அலைந்தது?
2. காகம் எதனைக் கண்டது?
3. குடத்தின் உள்ளே காணப்பட்டது யாது?

**விடைகள்**

1. காகம் நீரைத் தேடி அலைந்தது.
2. காகம் ஒரு குடத்தைக் கண்டது.
3. குடத்தின் உள்ளே மழைத் தண்ணீர் காணப்பட்டது.

**பின்னிணைப்பு - 2 செயற்பாட்டுப் பத்திரம்**

பின்வரும் பந்தியை வாசியுங்கள். பின்னர் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

பழங்கால மக்கள் காடுகளில் வாழ்ந்தனர். மிருகங்களை வேட்டையாடினர். அவற்றின் இறைச்சியை உணவாக உண்டனர். இலை குழைகளை உடையாக உடுத்தினர். குகை, மரப்பொந்துகளை இடமாகக் கொண்டனர். காலம் மாறியது. மக்கள் ஆடு மாடு போன்ற மிருகங்களை வளர்க்கத் தொடங்கினர். பயிர் செய்யத் தொடங்கினர். எனவே நீரைப் பெறக்கூடிய ஆறுகளின் கரைகளிலே நிலையாக வாழத் தொடங்கினர்.

1. பழங்கால மக்கள் எங்கே வாழ்ந்தனர்?
2. அக்கால மக்கள் எதனை உணவாகக் கொண்டனர்?
3. அக்கால மக்கள் எவற்றை இருப்பிடமாக்கிக் கொண்டனர்?
4. மக்கள் வளர்த்த மிருகங்கள் எவை?
5. மக்கள் எங்கே நிலையாக வாழத் தொடங்கினர்?

**பின்னிணைப்பு - 3 மேலதிக செயற்பாடு**

- சொற்களைப் பொருத்தமுற எழுதுவதற்காகப் பின்வரும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

சொற்களைச் சேர்த்து எழுதுதல். (மேலதிக செயற்பாடு)

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு | + | காகம் | - | ஒரு காகம் |
| பூ | + | மாலை | - | பூமாலை |
| மண் | + | குடம் | - | மண்குடம் |
| அரிசி | + | மா | - | அரிசிமா |
| மாடி | + | வீடு | - | மாடி வீடு |
| கோழி | + | முட்டை | - | கோழிமுட்டை |
| வாழை | + | மரம் | - | வாழைமரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| குளிர் | + | காலம் | - | குளிர்காலம் |
| கை | + | விரல் | - | கைவிரல் |
| பாண் | + | துண்டு | - | பாண்துண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| மழை | + | தண்ணீர் | - | மழைத் தண்ணீர் (த்) |
| பலா | + | காய் | - | பலாக்காய் (க்) |
| சிவப்பு | + | சட்டை | - | சிவப்புச்சட்டை (ச்) |
| பலா | + | பழம் | - | பலாப்பழம் (ப்) |
| வாழை | + | காய் | - | வாழைக்காய் (க்) |
| வாழை | + | பழம் | - | வாழைப்பழம் (ப்) |
| தேயிலை | + | தோட்டம் | - | தேயிலைத்தோட்டம் (த்) |
| பூ | + | சாடி | - | பூச்சாடி (ச்) |
| சீனி | + | போத்தல் | - | சீனிப்போத்தல் (ப்) |

தேர்ச்சி: 5.0 குறிப்பிட்ட விடயம் பற்றித் தெளிவாகப் பேசுவார்.

தேர்ச்சி மட்டம் 5.1 கொடுக்கப்படும் தலைப்பின் கீழ் மனனம் செய்து பேசுவார்.

செயற்பாடு : குறிப்பிட்ட தலைப்பின் கீழ் மனனஞ் செய்து பேசுவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு:

- ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், (சிறுவர்க்கான பேச்சுக்கள்)
- சொல்லட்டைகள்
- சிறு பேச்சுக்கள் (கட்டுரை) பின்னிணைப்பு
- செயற்பாட்டுப் பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**
**படி 5.1.1**

- ஒரு கிளி தன்னைப் பற்றிக் கூறுவதாக அமைந்த வாக்கியங்களைத் தெளிவாக உச்சரித்துக் கூறுங்கள்.
- கிளியின் படத்தினைக் காட்சிப்படுத்தி மாணவர் தெளிவாக உச்சரித்துக் கூற வழிகாட்டுங்கள்.

**கிளி**



நான் அழகான ஒரு பறவை.
எனது நிறம் பச்சை.
எனது சொண்டு சிவப்பு நிறமானது.
எனது கழுத்தில் அழகிய சிவப்பு ஆரம் உள்ளது.
நான் கீ கீ என்று கத்துவேன்.
என்னால் பேச முடியும்.
பழங்கள், காய்கறிகள் என்றால் எனக்கு மிகவும் விருப்பம்.
எல்லோரும் என்னை விரும்பி வளர்ப்பார்கள்.
நான் எல்லா இடமும் பறந்து திரிவேன்.

- வாக்கியங்களை இரண்டு அல்லது மூன்று தடவைகள் தெளிவாக உச்சரித்துக் கூறுங்கள்.
- மாணவர்களைக் கேட்டுக் கிரகிக்கும்படி கூறுங்கள்.
- ஒவ்வொரு வாக்கியத்தையும் தெளிவாக உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.
- உங்களுடன் சேர்ந்து கூற வழிப்படுத்துங்கள்.
- மீண்டும் மீண்டும் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முழுமையாக பேச்சினைப் பேசுவதற்கு வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

- அவதானித்துக் கேட்டல்
- கேட்டுக் கிரகித்தல்
- பொருளை விளங்குதல்
- மனனஞ் செய்தல்
- மீண்டும் மீண்டும் உச்சரித்துப் பழகுதல்
- ஒலிவேறுபாடுகளை உணர்ந்து தெளிவாகப் பேசுதல்.

(20 நிமிடங்கள்)

**படி 5.1.2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- 'எனது பாடசாலை' என்னும் தலைப்பில் பேசுவதற்கு வழிப்படுத்துங்கள். (பின்னிணைப்பு)
- அவதானித்துக் கேட்டுக் கிரகிக்க வழிப்படுத்துங்கள்.
- ஒலிவேறுபாட்டை உணர்ந்து பேசுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொருவரும் தனித்தனியாக உச்சரித்துப் பேசுவதற்கு வாய்ப்பு அளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிடமும் சென்று, இடர்ப்படும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**படி 5.1.3**

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் மாணவர்களை எழுமாற்றாக அழைத்துப் பேச்சினை முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஏனைய மாணவர்களது கருத்துக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- தலைப்பினைத் தெளிவாகக் கூறுதல்
- சொற்களைத் தெளிவாக உச்சரித்துப் பேசுதல்
- ஒலிவேறுபாடுகளை உணர்ந்து பேசுதல்
- நிறுத்தக் குறிகளை அவதானித்துப் பொருள் விளங்கிப் பேசுதல்.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கொடுக்கப்பட்ட தலைப்புத் தொடர்பாகத் கொடுக்கப்பட்ட விடயங்களைக் கேட்டுக் கிரகித்துப் பேசுவார்.
- சொற்களைத் தெளிவாக உச்சரித்துப் பேசுவார்.
- ஒலிவேறுபாடுகளை அறிந்து பேசுவார்.
- நிறுத்தக் குறிகளை அனுசரித்துத் தெளிவாகப் பேசுவார்.
- மாணவர் மன்றத்தில் பேச்சு ஒன்றை நிகழ்த்துவார்.

**பின்னிணைப்பு - 1 செயற்பாட்டுப் பத்திரம்**
**(மாணவர் தமது பாடசாலை பற்றிய விவரங்களைக் கூறலாம்.)**

**எனது பாடசாலை**

எனது பாடசாலையின் பெயர் நாலந்தாக் கல்லூரி.
இது ஒரு தேசிய பாடசாலை
பாடசாலையின் அதிபர் பெயர் திரு.சி.பண்டார.
இங்கு இரண்டாயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள்.
நூறு ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள்.
இங்கு 1-13 வரை வகுப்புகள் உள்ளன.

**பின்னிணைப்பு - 2**

ஒருவர் கூறக் கேட்டு மனனஞ் செய்து பேசுங்கள்.

**எனது குடும்பம்**

எனது குடும்பம் சிறியது.
எனது அப்பாவின் பெயர் சுனில்.
அப்பா ஒரு வைத்தியர்
எனது அம்மாவின் பெயர் லதா.
எனது தம்பியின் பெயர் சரத்.
தம்பி மூன்றாம் தரத்தில் படிக்கிறான்.
எனது பெயர் சமிந்த.
நான் ஏழாம் தரத்தில் படிக்கிறேன்.
நாங்கள் சந்தோ'மாக வாழ்கிறோம்.

**தேர்ச்சி: 6.0** **சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை மொழிபெயர்த்துக் கூறுவார்.**

தேர்ச்சி மட்டம் 6.1 சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைக் கூறுவார்.

செயற்பாடு : சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைக் கூறுவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தர உள்ளீடு:

- பல்வகைப்பட்ட பொருள்களின் படங்களும் அவற்றுக்குரிய சிங்களச் சொற்கள், தமிழ்ச்சொற்கள் கொண்ட அட்டவணை. – பின்னிணைப்பு 1
- சிங்களச் சொற்களும் அவற்றுக்கான தமிழ்ச் சொற்களும் (மாறியிருக்கும்) கொண்ட அட்டவணை - செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு 2

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி I 6.1.1**

- பின்னிணைப்பு 1 இலுள்ள அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.
- அதிலுள்ள படங்களையும் அவற்றுக்குரிய சிங்களப் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களையும் ஒவ்வொன்றாகக் கூறுங்கள்.
- தமிழ்ச் சொற்களை உரிய விதத்தில் உச்சரித்துக் காட்டுங்கள்.
- மாணவர் அவற்றை அவதானமாகக் கேட்டு அவ்விதமே உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு கலந்துரையாடுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| - | சிங்களச் சொற்களையும் அவற்றுக்கான தமிழ்ச்சொற்களையும் அறிதல். | | | |
| - | தமிழ்ச் சொற்களைச் சரியாக உச்சரித்தல். | | | |
| - | சில சொற்கள் சிறு ஒலிவேறுபாட்டுடன் உச்சரிக்கப்படுவதை அறிந்து கூறுதல். | | | |
| | உதாரணம்: | දෙඩම් | - | தோடம்பழம் |
| | | නිල් | - | நீலம் |
| | | මුරුංගා | - | முருங்கைக்காய் |

**படி II 6.1.2**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைக் குழுவாகச் சேர்ந்து இனங்காண வழி நடத்துங்கள்.
- முறையாகச் சொற்களை உச்சரிக்கிறார்களா என்பதை அவதானியுங்கள்.

**படி III**

- வகுப்பறையில் மாணவர்களை எழுமாற்றாகச் சோடிகளாகத் தெரிவு செய்யுங்கள்.
- ஒருவர் கூறுகின்ற சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை மற்றவர் கூற வழிப்படுத்துங்கள்.
- சொற்களின் உச்சரிப்புச் சரியானதா என்பதை அவதானியுங்கள்.
- தவறுதலாகக் கூறினால் மீண்டும் சரியாகக் கூறவும் உச்சரிக்கவும் வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உரையாடுங்கள்.




- சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை அறிதல்.
- தமிழ்ச்சொற்களைச் சரியான உச்சரிப்புடன் கூறுதல்.
- சில சொற்கள் சிறு ஒலி வேறுபாட்டுடன் உச்சரிக்கப்படுவதை அறிதல்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்: | සිංහයා | - | சிங்கம் |
| | බණ්ඩක්කා | - | வெண்டிக்காய் |
| | මේසය | - | மேசை |

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச்சொற்களை அறிந்து கூறுவார்.
- தமிழ்ச்சொற்களைத் தெளிவாகவும் சரியாகவும் உச்சரிப்பார்.
- நாளாந்த வாழ்க்கையில் சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைப் பொருத்தமான சந்தரப்பங்களில் சரியான உச்சரிப்புடன் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு 1**


| படம் | **சிங்களச்சொல்** | **தமிழ்ச்சொல்** |
|---|---|---|
|  | කරවිල | பாகற்காய் |
|  | වම්බටු | கத்தரிக்காய் |
|  | දෙඩම් | தோடம்பழம் |
|  | කෙසෙල් | வாழைப்பழம் |
|  | බල්ලා | நாய் |
|  | බළලා | பூனை |
|  | නිල් | நீலம் |
|  | රතු | சிவப்பு |
|  | මොණරා | மயில் |
|  | කුරුල්ලා | குருவி |




### செயற்பாட்டுப் பத்திரம்


1. ‘அ’ பகுதியிலுள்ள சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை ‘ஆ’ பகுதியிலிருந்து தெரிவு செய்து கூறுக.

| அ. சிங்களச் சொல் | ஆ. தமிழ்ச் சொல் |
|---|---|
| මිරිස් | வண்ணத்துப் பூச்சி |
| මඤ්ඤොක්කා | சிங்கம் |
| බණ්ඩක්කා | வல்லாரை |
| ගොටුකොළ | மிளகாய் |
| මුකුණුවැන්න | பாம்பு |
| සිංහයා | மாலை |
| හාවා | மரவள்ளிக்கிழங்கு |
| නෙළුම් | வெண்டிக்காய் |
| පිච්ච | பொன்னாங்காணி |
| උදය | முயல் |
| හවස | மேசை |
| සර්පයා | காலை |
| සමනළයා | தாமரை |
| මේසය | மல்லிகை |

2. பின்வருவனவற்றுக்குரிய தமிழ்ப்பெயர்களையும் சிங்களப் பெயர்களையும் கூறுக.





3. பின்வருவனவற்றைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கூறுங்கள்.

பெரிய கிழங்கு
சிறிய நுளம்பு
நீளமான முருங்கைக்காய்
இனிப்பான திராட்சைப்பழம்
மஞ்சள் நிற மாம்பழம்
புதிய காய்கறி

**தேர்ச்சி: 14.0** **சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுவார்.**

**தேர்ச்சி மட்டம் 14.0**: சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுவார்.

**செயற்பாடு:** சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுவோம்.

**நேரம்**: 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :

- பழங்கள், மிருகங்கள், பறவைகள், மரக்கறி என்பவற்றின் படங்கள் - பின்னிணைப்பு - 1
- சிங்களச் சொற்கள் எழுதப்பட்ட அட்டவணை - பின்னிணைப்பு - 2
- மேலதிக செயற்பாடு ஒருமை - பன்மை - பின்னிணைப்பு - 3
  ஆண்பால் - பெண்பால்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 14.1.1**

- பின்னிணைப்பு - 1 இல் உள்ள படங்களின் அட்டவணையைக் காட்சிப்படுத்தி அவற்றுக்குரிய தமிழ்ப் பெயர்களை எழுதுமாறு கூறுங்கள். பின்னர் பெயர்கள் சரியாக எழுதப்பட்ட அட்டவணையைக் காட்டுங்கள்.
- பிழைகள் இருப்பின் திருத்திக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

சொற்களை எழுதும்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தும் விதத்தில் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- எழுத்துக்களை உறுப்பாக எழுதுதல்.
- உயிர்க்குறிகளை உரிய இடத்தில் சேர்த்து எழுதுதல்.
- சொற்களை எழுத்துக்களிடையே உரிய இடைவெளிகள் விட்டுத் தெளிவாகவும் அழகாகவும் எழுதுதல்.
- சொற்களை எழுத்துப் பிழைகளின்றி எழுதுதல்.

**படி 14.1.2**

- பின்னிணைப்பு - 2 இல் உள்ள அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களை அதுபோன்ற அட்டவணைகளைத் தயாரித்து அதிலுள்ள சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதும்படி கூறுங்கள்.
- சரியான தமிழ்ச் சொற்களைக் காட்சிப்படுத்துங்கள்.

**படி 14.1.3**

- மாணவர்கள் எழுதிய அட்டவணையைத் தமக்குள்ளே மாற்றிக் கொள்ள வழிப்படுத்தல்.
- காட்சிப்படுத்தப்பட்ட சரியான சொற்களோடு அட்டவணையிலுள்ள சொற்கள் சரியாக உள்ளனவா என ஒப்பிட்டுப் பார்க்கும்படி கூறுதல்.
- சரியானவற்றுக்கு (√) சரி அடையாளமிடக் கூறுதல்.
- பிழையான சொல் எனில் பிழையை இனங்கண்டு அடையாளமிட வழிப்படுத்தல்.
- மீண்டும் அட்டவணையை உரியவரிடம் ஒப்படைக்கும் விதத்தில் மாற்றிக் கொடுத்தல்.

பிழைகளைத் திருத்திச் சரியாக எழுத வழிப்படுத்தல்.

- பின்வரும் விடயங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.


- எழுத்துக்களை உறுப்பமைய, தெளிவாக எழுதுதல்.
- சொற்களைப் பிழையின்றி எழுதுதல்.
- சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிந்து எழுதுதல்.


| **பழங்கள்** | **காய்கறிகள்** | **பறவைகள்** | **மிருகங்கள்** |
|---|---|---|---|
| வாழைப்பழம் | கத்தரிக்காய் | காகம் | சிங்கம் |
| அன்னாசி | புடோலங்காய் | கிளி | யானை |
| அப்பிள் | முள்ளங்கி | மைனா | முயல் |
| தோடம்பழம் | பீர்க்கங்காய் | மயில் | நாய் |
| மாம்பழம் | கோவா | குயில் | புலி |

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுவார்.
- தமிழ் எழுத்துக்களை உறுப்பமைய எழுதுவார்.
- சொற்களை அழகாகவும் தெளிவாகவும் எழுத்துக்களிடையே உரிய இடைவெளி விட்டு எழுதுவார்.
- எழுத்துப் பிழைகளின்றிச் சொற்களை எழுதுவார்.
தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சொற்களைத் தெளிவாகவும் பிழையின்றியும் எழுதுவார்.

**பின்னிணைப்பு - 1**

 முயல்

 வண்ணத்துப் பூச்சி

 பாம்பு

 யானை

 கத்தரிக்காய்

 வாழைக்காய்

 தோடம் பழம்

 கொக்கு

 கப்பல்

 பசு

**பின்னிணைப்பு - 2 செயற்பாட்டுப் பத்திரம்**

■ பின்வரும் அட்டவணையிலுள்ள சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.

| **පළතුරු** | **එළවළු** | **කුරුල්ලන්** | **සතුන්** |
|---|---|---|---|
| කෙසෙල් | වම්බටු | කපුටා | සිංහයා |
| අන්නාසි | පතෝල | ගිරවා | අලියා |
| ඇපල් | රාබු | මයිනා | හාවා |
| දෙළුම් | බණ්ඩක්කා | මොණරා | බල්ලා |
| අඹ | ගෝවා | කොහා | කොටියා |

**பின்னிணைப்பு - 3**

■ ஒருமை, பன்மைச் சொற்களை அறிந்துகொள்வதற்காகப் பின்வரும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
மேலதிக செயற்பாடு (ஒருமை பன்மை)

1. ஒருமை பன்மை (கள் விகுதி சேர்த்து எழுதுங்கள்)

| ஒருமை | பன்மை |
|---|---|
| பூனை | பூனைகள் |
| யானை | .................... |
| குதிரை | .................... |
| மாடு | .................... |
| ஆடு | .................... |

2.

| ஒருமை | பன்மை |
|---|---|
| பழம் | பழங்கள் |
| காகம் | .................... |
| மரம் | .................... |
| அன்னம் | .................... |
| படம் | .................... |
| குடம் | .................... |
| பாடம் | .................... |

■ பின்வரும் ஆண்பாற் சொற்களுக்குரிய பெண்பாற் சொற்களை எழுதுங்கள்.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| அப்பா | .................... |
| மாமா | .................... |
| தம்பி | .................... |
| பெரியப்பா | .................... |
| தாத்தா | .................... |

**விடைகள்:**

| **ஆண்பால்** | **-** | **பெண்பால்** |
|---|---|---|
| அப்பா | - | அம்மா |
| மாமா | - | மாமி |
| தம்பி | - | தங்கை |
| பெரியப்பா | - | பெரியம்மா |
| தாத்தா | - | பாட்டி |

## பகுதி III

# கணிப்பீடும் மதிப்பீடும்

# அறிமுகம்

கற்றல் - கற்பித்தற் நடவடிக்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர் களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தற் நடவடிக்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சி களை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் அறியத்தருமாறு ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற் பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றுப் பங்களிப்பில் காணப்படும் பிரதான விடயமாகும்.
ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டத்தின் மூலம், கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், தீர்வுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது செயற்பாடுகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காகச் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை பகுதி II இன் கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
  - சுவர்ப்பத்திரிகை (Wall Newspapers)
  - புதிர்ப்போட்டி (Quizzes)
  - வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
  - மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
  - கண்காட்சி (Exhibitions)
  - விவாதம் (Debates)
  - குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
  - கருத்தரங்கு (Seminars)
  - உடனடிச் சொற்பொழிவு (Impromptu Speeches)
  - பாத்திரம் ஏற்று நடித்தல் (Role Plays)
  - இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
  - வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
  - செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் நடவடிக்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தல் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபாடு கொள்வதற்கும் வழிசமைத்துள்ளன.

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை
## மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்
## தரம் 7

கருவி : 01

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : முதலாந் தவணை இறுதி

2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 4.0 4.1 9.0

3. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
   - பாடல்கள்
   - வெள்ளை முயல் ஓடுது...
   - இருளைப் போக்கும் ஆதவன்...
   - இந்து சமுத்திரம் இரைகிறது...

4. கருவியின் தன்மை : "பாடல்களை ஓசையுடன் பாடுதல்"

5. கருவியின் நோக்கங்கள் :
   - பாடல்களை சரியாக உச்சரித்து வாசிப்பார்.
   - குழுவினரிடையே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார்.
   - பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவார்.
   - பாடல்களை நயந்து ஓசையுடன் பாடுவார்.

6. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

   ஆசிரியருக்கு:
   - மாணவர்களை ஆறுபேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
   - இத்துடன் இணைக்கப்பட்ட மூன்று பாடல்களையும் குழுக்களுக்கு வழங்குங்கள்.
   - குழுவாக இயங்கி அவற்றை ஓசையுடன் பாடிப் பழகும்படி கூறுங்கள்.
   - திரும்பத் திரும்பப் பாடி அவற்றை மனனம் செய்யும்படியும் கூறுங்கள்.
   - கிழமையில் ஒரு நாளை ஒதுக்கி அவர்களின் முன்னேற்றத்தைக் கவனித்து, ஆலோசனை கூறுங்கள்.
   - மாணவர்கள் பாடிக்காட்டும் திகதியை முன்கூட்டியே கூறுங்கள்.

   மாணவருக்கு:
   - குழுநிலையில் கலந்துரையாடி பொருத்தமான ஓசையைத் தேர்ந்தெடுங்கள்.
   - குழுநிலையில் பாடி பயிற்சி பெறுங்கள். (மனனம் செய்து பாடுங்கள்.)
   - கிழமையில் ஒருநாள் ஆசிரியரைச் சந்தித்து உங்கள் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துங்கள்.
   - ஆசிரியர் கூறும் இறுதித் திகதியில் குழுவாகவும் தனியாகவும் பாடிக்காட்டுங்கள்.

மதிப்பீட்டு நியதிகள்:

- குழுநிலையில் கலந்துரையாடிப் பாடலுக்குப் பொருத்தமான ஓசையைத் தேர்ந்தெடுப்பார்.
- பாடல்களை மனனம் செய்வார்.
- பாடல்களை முறையாக உச்சரித்து ஓசையுடன் பாடுவார்.

- மிகநன்று - 04
- நன்று - 03
- சாதாரணம் - 02
- அபிவிருத்தியடைய வேண்டியது - 01

சிறுவர் பாடல்கள்

1. **முயல்**

வெள்ளை முயல் ஓடுது
வேகமாக ஓடுது
குள்ள முயல் ஓடுது
குதித்து குதித்து ஓடுது
முத்துப் போன்ற கண்ணினால்
மேலும் கீழும் பாக்குது
தத்தித் தத்தி விண்ணிலே
தாவிக் குதிக்கப் பாக்குது
நெட்டையான காதையே
நீட்டி நீட்டி ஆட்டுது
குட்டையான வாலையே
குறு குறுன்னு ஆட்டுது

2. **ஆதவன்**

இருளைப் போக்கும் ஆதவன்
இன்பம் நல்க வருகிறான்
கருதும் தனது கடமையில்
கடுகளவும் தவறிடான்

அயர்வைப் போக்கி வைக்கவே
அலைகடலில் தோன்றியே
உயர உயரச் சிரிக்கின்றான்
ஒளிக் கரத்தை விரிக்கின்றான்

வானில் சென்றுமே மறு
நாளில் தோன்றும் ஆதவன்
ஏணியின்றி உச்சியில்
ஏறி நின்று பார்க்கின்றான்.

3. **இலங்கைத் தீவு**

இந்து சமுத்திரம் இரைகிறது
இலங்கைத் தீவு மிதக்கிறது
வந்து பார்க்கும் மனிதரெல்லாம்
வாழ்த்த இலங்கிச் சிறக்கிறது

சுற்றி எறிந்து அலைபரவும்
துள்ளும் மீன்கள் கொண்ட கடல்
எற்றித் தத்தும் திரவியங்கள்
எங்கும் கிடக்கும் கடற்கரைகள்

மத்தியில் உயர்ந்து புடைத்திருக்கும்
மலைமுடி சூழ்ந்து நிமிர்ந்திருக்கும்
நித்திய நதிபல ஊற்றெடுக்கும்
நிறைபயிர் விளைந்து பாட்டெடுக்கும்

தெங்கொடு பனையும் பணப்பயிர்கள்
தேங்கி விளைந்தொன்றாய் ஆடுநிலம்
இந்தொடு பௌத்தர் கிறிஸ்தவரும்
இஸ்லாம் மக்களும் வாழுநிலம்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள் - தரம் 7

கருவி : 02

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : இரண்டாந் தவணை இறுதி
2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 5.0 5.1 5.2
3. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
   - அயலிலுள்ள செல்லப் பிராணிகளின் பெயர்கள்
   - நாம் விரும்பும் செல்லப்பிராணி
4. கருவியின் தன்மை : செல்லப்பிராணி பற்றிக் கூறுதல்.
5. கருவியின் நோக்கங்கள் :
   - மற்றவருடன் பண்பாக உரையாடித் தகவல்களைப் பெற்றுக்கொள்வார்.
   - குழுவினரிடையே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார்.
   - பெற்றுக்கொண்ட தகவல்களைத் தொகுத்துக் கொள்வார்.
6. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

   ஆசிரியருக்கு:

   - இரண்டாந் தவணை ஆரம்பத்தில் இக்கருவிபற்றி மாணவருக்குத் தெளிவாகக் கூறுங்கள்.
   - மாணவர்களை ஆறுபேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
   - எல்லாக் குழுவினருக்கும் ஒரே தலைப்பை வழங்குங்கள்.
     தலையங்கம் :
     செல்லப்பிராணி பற்றி தகவல்கள் திரட்டுவோம்.
   - குழுநிலையில் விடயங்களைச் சேகரித்த பின்பு, தனியாகவே தகவல்களைத் தயாரிக்க வேண்டும் என்பதைக் கூறுங்கள்.
   - கிழமையில் ஒரு நாளை இதற்காக ஒதுக்கி மாணவர்களின் செயற்பாடுகளைப் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்குங்கள்.

   மாணவருக்கு:

   - குழுநிலையில் கலந்துரையாடித் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
   - ஒவ்வொரு மாணவரும் தகவல்களைப் பெறவேண்டும்.
   - ஆசிரியர் கூறும் நாட்களில் உங்கள் செயற்பாடுகளைக் காட்டி ஆலோசனைகளைப் பெறுங்கள்.
   - ஆசிரியர் கூறும் திகதியில் உங்கள் செல்லப்பிராணி பற்றிய தகவல்களை ஒப்படையுங்கள்.

மதிப்பீட்டு நியதிகள்:

- விடயங்களைத் தேடிப் பெறுவார்.
- மற்றவருடன் கலந்துரையாடி விடயங்களைப் பரிமாறிக் கொள்வார்.
- தரமான முறையில் தகவல்களைப் பெற்று சமர்ப்பிப்பார்.
- சமர்ப்பித்த தகவல்களை முறைப்படி வாசிப்பார்.

- மிகநன்று - 04
- நன்று - 03
- சாதாரணம் - 02
- அபிவிருத்தியடைய வேண்டியது - 01

# கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை
# மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்
# இலக்கிய நயம் - தரம் 7

கருவி : 03

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : மூன்றாம் தவணை இறுதி

2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 9.0 12.0 13.3

3. கருவிக்குரிய பாடப் பகுதிகள் :
   - அம்மாவைப் பற்றிய சிறுவர் கவிதைகள், கதைகள், கட்டுரைகள், பழமொழிகள், என்பன இடம்பெறும் சிறுவர் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்.

4. கருவியின் தன்மை : அம்மா என்னும் தலைப்பிலான ஒப்படை.

5. கருவியின் நோக்கங்கள் :
   - சிறுவர் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்பனவற்றை வாசிப்பார்.
   - தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களை சேகரிப்பார்.
   - தகவல்களை ஒழுங்குபடுத்தி எழுதுவார்.
   - அம்மாவின் சிறப்புக்களை அறிந்து நல்ல விழுமியக் கருத்துக்களை நாளாந்த வாழ்க்கையில் கடைபிடிப்பார்.

6. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்

   ஆசிரியருக்கு:

   - மூன்றாம் தவணை ஆரம்பத்திலேயே கணிப்பீட்டுக் கருவி பற்றியும் கணிப்பீட்டுத் தினம் பற்றியும் மாணவருக்குத் தெரிவியுங்கள்.
   - மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
   - நான்கு குழுக்களும் தனித்தனியாக ஒப்படை தயாரிக்க வேண்டும் என்று கூறுங்கள்.
   - குழு ஒவ்வொன்றுக்கும் தலைவர்களைத் தெரிவுசெய்யுங்கள்.
   - ஒவ்வொரு குழுத் தலைவரும், தத்தம் குழுவினரிடம் சேகரிக்க வேண்டிய தகவல்களைக் குறிப்பிட்டு சேகரிப்பதற்கு ஆலோசனை வழங்குங்கள்.
   - சிறுவர் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை வாசிக்குமாறு கூறுங்கள்.
   - தலைப்புக்குப் பொருத்தமான விடயங்களை இனங்கண்டு சேகரிக்குமாறு கூறுங்கள்.
   - மாதத்தில் ஒரு நாளைக் குறிப்பிட்டு மாணவரது முன்னேற்றத்தை அவதானித்து ஆலோசனை வழங்குங்கள்.
   - ஒப்படை ஒன்றை ஒழுங்கமைக்கும் முறையை மாணவருக்கு விளக்கமாகக் கூறுங்கள்.
   - ஒப்படையைச் சமர்ப்பிக்க வேண்டிய தினத்தை முன்கூட்டியே தெரிவியுங்கள்.

மாணவருக்கு:

- வாசிகசாலையிலோ அன்றி தெரிந்தவர்களிடமோ தலைப்புக்கு ஏற்ற கதைகள், பாடல்கள், சிறு கட்டுரைகள், பழமொழிகள் போன்றவற்றைப் பெற்று வாசியுங்கள்.
- பெற்ற தகவல்கள் தொடர்பாக ஏனையோருடன் கலந்துரையாடுங்கள்.
- பொருத்தமானவற்றை மட்டும் சேகரியுங்கள்.
- குறிப்பிட்ட தினமொன்றில் ஒன்றுகூடி ஆசிரியருடன் கலந்துரையாடி உங்கள் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துங்கள்.
- சேகரித்த தகவல்களை கட்டுரை, கவிதை, கதை, பழமொழிகள் என்ற தலைப்புக்களின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்ளுங்கள்.
- ஒப்படைக்கும் பொருத்தமான, கவர்ச்சிகரமான தலையங்கம் ஒன்றை தெரிவுசெய்யுங்கள்.
- குறிப்பிட்ட தினத்தில் சிறந்த முறையில் ஒப்படையைத் தயாரித்து சமர்ப்பியுங்கள்.

மதிப்பீட்டு நியதிகள்:

- பல்வேறுபட்ட ஆக்கங்களையும் வாசிப்பார்.
- தலைப்புக்குப் பொருத்தமான விடயங்களை தொகுப்பார்.
- குழுநிலையில் கலந்துரையாடி தகவல்களை ஒழுங்குபடுத்துவார்.
- கவர்ச்சிகரமான தலையங்கத்தை தெரிவுசெய்து எழுதுவார்.
- சிறந்த முறையில் ஒப்படையை எழுதி சமர்ப்பிப்பார்.